அன்பளிப்பு 40P

களத்தில்

தாயகத்தில் உண்மை நிகழ்வுகளை தாங்கிவரும் பத்திரிகை 08-10-1993

## சர்வதேசச் செயலகம் கண்டனம்

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரான மு.கருணாநிதி, தன்னை விடுதலைப் புலிகள் கொல்லச் சதி செய்வது அறியப்பட்டுள்ளதாக அறிக்கை விடுத்துள்ளார். கருணாநிதியின் இப்பத்திரிகைச் செய்தி குறித்து விடுதலைப் புலிகளின் சர்வதேசச் செயலகம் கடும் கண்டனத்தைத் தெரிவித்துள்ளது. தமிழ்நாட்டு மக்கள் விடுதலைப் புலிகளின் மேல் கொண்டுள்ள அபிமானத்தைச் சீர்குலைக்கும் நோக்கத்துடன் இப்பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ள அவ்வறிக்கையில், தி.மு.க.வின் உட்கட்சிப் பிரச்சினைகளுக்கு விடுதலைப் புலிகள் பகடைக் காயாகப் பயன்படுத்தப்பட்டுள்ளார்கள் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி 15ம் பக்கம்...

# எதிர்பாராத பேரிழப்புகளுடன் ஶ்ரீலங்கா இராணுவம் பின்வாங்கியது

நவீன விமானங்கள் - டாங்கிகள் சகிதம், குடாநாட்டை நோக்கி முன்னேறும் நோக்குடன் புறப்பட்ட சுமார் பத்தாயிரம் சிறீலங்கா இராணுவத்தினர் தமிழீழ விடுதலைப் புலிகளின் எதிர்ப்புக்கு முகம் கொடுக்க முடியாமல் புறமுதுகிட்டோடி ஆனையிறவு இராணுவ முகாமுக்குள் மீண்டும் தஞ்சம் புகுந்துள்ளனர்.

செப்டெம்பர் 28 ம் திகதி காலை 'யாழ்தேவி நடவடிக்கை' என்ற குறியீட்டுப்பெயருடன் 15 நாள் காலக்கெடு விதித்து சாவகச்சேரி வரை செல்வது என்ற வீறாப்புடன் புறப்பட்ட சிறீலங்கா இராணுவம், எதிர்பாராத பலத்த இழப்புக்களைச் சந்தித்ததால், ஏழு நாட்களில் தனது இராணுவ நடவடிக்கையை இடைநிறுத்த வேண்டிய இக்கட்டான நிலைக்கு உள்ளாகியுள்ளது.

### 250 க்கு மேல் இராணுவம் சாவு

சிறீலங்கா அரசு இருநூற்று ஐம்பதுக்கும் மேற்பட்ட இராணுவத்தினரை இப்போரில் இழந்துள்ளதாகவும் நானூறுக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் காயமடைந்திருப்பதாகவும் ஆரம்ப மதிப்பீடுகளில் இருந்து தெரிய வருகிறது. எதிர்பாராத இவ் இழப்புக்களால், இராணுவ நடவடிக்கை மூலம் தீர்வு காணலாம் என, இந்த யுத்தத்தை அனுமதித்த சிறீலங்கா ஜனாதிபதி டி.பி.விஜயதுங்காவின் அரசியல் செல்வாக்கு, சிங்களவரிடை படுமோசமாக சரிவடைந்துள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அத்துடன், தான் சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக பதவியேற்ற ஒரு வார காலத்துக்குள்ளேயே யுத்தத்திற்கான ஏற்பாடுகளில் தீவிரமாக ஈடுபட்ட கபில்டன் வணசிங்கவுக்கும் இத்தோல்வி பலத்த தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

### புலிகளின் பலம்

விடுதலைப் புலிகள், எவ்வாறு நவீன ஆயுதங்களுடனும், புதிய விமான -கடற்படை வலிமையுடனும் உள்ள சிறீலங்கா இராணுவத்தை எதிர்கொள்ளப் போகிறார்கள் என அவதானித்துக் கொண்டிருந்த சர்வதேச அவதானிகள் புலிகளின் பலத்தையும், மனோ வலிமையையும், தியாக உணர்வையும், தாய்நாட்டுப் பற்றையும் கண்டு வியப்புத் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை பத்தாயிரம் பேருடன் கடல் அலைபோல எழுந்து வந்த சிறீலங்கா இராணுவத்தினை சிதறடித்த புலிகளின் இராணுவ மதிநுட்பத்தை உலக இராணுவ மதிப்பீட்டாளர்கள் பாராட்டியுள்ளனர். புலிகள் மீண்டும் ஒருமுறை, தாம் களயுத்தத்தை எதிர்கொள்ளக் கூடியவர்கள் என்பதை நிரூபித்துள்ளனர். இதனால் விடுதலைப் புலிகள் தலைசிறந்த கெரில்லா அணி மட்டுமல்ல வலிமை மிக்க இராணுவமாகவும் திகழ்கின்றனர் என்பதை சர்வதேச சமூகம் ஏற்றுக்கொண்டுள்ளது. ■

## தமிழீழ அரசு நோக்கிய அரசின் வலிமை நிரூபணம்

தமிழீழ மண்ணில், 'அரசு நோக்கிய அரசு' (Defacto Goverment) நிறுவப்பட்டுவிட்டது என்பதை, யாழ் குடாநாட்டின் மீது சிறீலங்கா இராணுவம் எடுத்த 'யாழ்தேவி நடவடிக்கை' நிரூபித்துள்ளது. சகல முன்னேற்பாடுகளினூடனான இவ் இராணுவ நடவடிக்கை கூட்டுப் படைத் தலைமையகம் கலைக்கப்பட்டு முப்படைத் தளபதிகளின் நேரடிக் கட்டுப்பாட்டில் காலக்கெடு விதிக்கப்பட்டு, மிகப்பெரிய எதிர்பார்ப்புடன் ஆரம்பிக்கப்பட்டது. பத்தாயிரம் இராணுவத்தினர் சகிதம் நவீன வசதிகளுடன் கூடிய ஆயுதங்களுடனும் புதிய மிகையொலி விமானம் (சுப்பர்சோனிக்), புக்காரா போன்ற நவீன விமான வான்வழி உதவிகளுடனும் கடற்படையினரின் செல் தாக்குதல்களுடனும் முன்னேற முயன்றது. ஆனால் தமிழீழத்தின் தேசிய இராணுவமான விடுதலைப் புலிகள் இதனை வெற்றிகரமாக முறியடித்துள்ளனர். இச்சம்பவமானது, சர்வதேச சமூகத்திற்கு தமிழீழ மண்ணின் 'அரசு நோக்கிய அரசின்' வலிமையையும், அது 'தேசிய பாதுகாப்பை' வழங்கக்கூடிய தகுதியுள்ளதுதான் என்பதையும் உலகுக்கு எடுத்து விளக்கியுள்ளது.

எனவே சிறீலங்கா இராணுவத்தை தோல்வியுறச் செய்துள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசு நோக்கிய அரசை அங்கீகரித்து ஏற்றுக்கொள்ள வேண்டிய இயல்பான தேவை சர்வதேச சமூகத்திற்கு ஏற்பட்டுள்ளது. இவ் அரசு நோக்கிய அரசை அங்கீகரிப்பதன் மூலமே சிறீலங்கா

தொடர்ச்சி 15ம் பக்கம் ....

தமிழீழ ஆவணக்காப்பகம் eelamarchive

## யுத்தம் பற்றிய ஶ்ரீலங்கா அரசின் பொய்ப்பிரச்சாரம் அம்பலம்

சிறீலங்கா அரசாங்கம், 'குடாநாட்டிலிருந்து வெளிவரும் பயணிகளில் இனி சங்குப்பிட்டி - கேரதீவு பாதையூடாகத்தான் பிரயாணம் செய்ய அனுமதிக்கப்படுவார்கள்' என சிறீலங்கா அரசாங்கம் தனது விசமப் பிரச்சாரத்தினை மேற்கொண்டிருந்தது. ஆயினும் திடீரென, தனது இராணுவம் ஆனையிறவு முகாமுக்குத் திரும்பிவிட்டதாக

தொடர்ச்சி 15ம் பக்கம் ....



தாய் மண்ணை அபகரிக்க பத்தாயிரம் இராணுவப் பலத்துடன் எழுந்து வந்த எதிரியை பின்வாங்கி ஓடச்செய்வதற்கு தங்கள் இன்னுயிர்களை அர்ப்பணித்த வீர வேங்கைகள் அனைவருக்கும் ( இதுவரை கிடைத்த செய்திகளின்படி 84 போராளிகள் ) வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

## உணவை ஆயுதமாக்க முயன்ற ஶ்ரீலங்காவின் முயற்சி தோல்வி

சர்வதேச யுத்தச் சட்டங்களுக்குப் புறம்பான முறையில் உணவை ஆயுதமாக்கி, தமிழீழ மக்களை பட்டினியால் கொல்லவெனப் புறப்பட்ட சிறீலங்கா இராணுவத்தின் முற்றுகைத் திட்டம் தமிழீழ விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டுள்ளது.

ஆனையிறவில் இருந்து புறப்பட்டு கிளாலிப் பாதையைக் கைப்பற்றி, குடாநாட்டுக்குள் எவ்வகை உணவும் பிற இடங்களில் இருந்து செல்லாது தடுக்க வேண்டும்; அப்போதுதான் மக்கள் பட்டினி நிலையை அடைந்து, எதிர்ப் புரட்சியில் இறங்கி தமிழீழ விடுதலைப் புலிகளின் வலிமையைக் குறைக்க முயற்சிப்பார்கள் என்ற எதிர்பார்ப்புகளுடன் புறப்பட்ட சிறீலங்கா இராணுவத்தினர், கிளாலிப் பாதையை கைப்பற்ற முடியாமல் பின்வாங்கியுள்ளனர்.

ஆயினும் இந்த நடவடிக்கையின் போது விளைந்திருந்த வயல்கள், உணவுப் பொருட்களுடன் கூடிய கடைகள் போன்றவற்றை சிறீலங்கா இராணுவம் அழித்து நாசமாக்கி உணவுப் பற்றாக்குறையை மோசமாக்க முயன்றுள்ளதாக ஊர்ஜிதமற்ற செய்திகள் தெரிவிக்கின்றன. ■

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**



# இனக்கொலை யுத்தங்கள்

"விடுதலை யுத்தம்" (The War of Liberation) என்கிற தலைப்பில் வியட்நாமிய தேசிய விடுதலை அணியினர் விடுத்த துண்டுப் பிரசுரத்தில், கெரில்லா யுத்தம் பற்றிய அதிமுக்கிய கருத்து ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளது. 'கெரில்லா யுத்தம் -மக்களின் யுத்தம்'. முழுமக்களும் யுத்தம் செய்யும் நிலை. ஆதலால் அனைவருமே இயக்கத்தில் ஈடுபடுகின்ற சக்தியாகக் கருதப்படுவர். விவசாயிகள், தொழிலாளர்கள் மட்டுமல்ல புத்திமான்கள், வர்த்தகர்கள், மாணவர்கள் அனைவருமே எதிரியான இராணுவத்தை எதிர்த்துப் போராடுவர். ஆதலால் எதிரி இராணுவத்திற்கு, முழு மக்கட் தொகுதியுமே எதிரியாகத்தான் தெரியும். கெரில்லாக்கள், மக்களுக்குள் ஒழித்திருக்கிறார்கள் என்பது தவறு. மக்களுக்குள் ஒழித்திருப்பதன் மூலம் முழு மக்களையுமே போராட்டத்தில் இணையத் தூண்டுகிறார்கள் என்பதே உண்மை. எனவே கெரில்லா இயக்கத்துடன் மோத வேண்டுமானால், மக்களுடன் தான் போராட வேண்டும் என்பதை எதிரி இராணுவம் நன்கு அறியும். அவர்கள் இராணுவத்துடன் அல்ல மக்களுடனேயே போராடுவார்கள். அவ்விதம் எப்பொழுது ஒரு அரசு தனது இராணுவத்தை மக்களுக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட வைக்கின்றதோ, அன்றைக்கே அந்த அரசு தனது இறைமையை அந்த மக்களைப் பொறுத்தவரை இழந்து விடுகின்றது. மாறாக அந்த மக்களையும் -குறிப்பாக பெண்களையும், குழந்தைகளையும் கொன்றொழிக்கின்ற இராணுவ நடவடிக்கைகளையும், பொருளாதாரத்தடைகள் உட்பட்ட மக்கள் வாழ்வுக்கு எதிரான தடைகளையும் விதித்து, காட்டுமிராண்டித்தனமான இனக்கொலைகளைச் செய்கிறது.' இவ்வாறு கூறிய வியட்நாமிய தேசிய விடுதலை அணியின் பிரசுரம், கெரில்லாப் படையை மக்கள் படை (Dan Quan) என அழைக்கிறது.

இந்தத் தத்துவம், இலங்கைத் தீவைப் பொறுத்த மட்டிலும் உண்மையாகிறது. இலங்கைத் தீவில் தமிழீழ மக்கள் தமது ஜனநாயக ரீதியான எதிர்ப்புக்கள் அனைத்தும், சிங்கள பௌத்த பேரினவாதிகளாலும், அதற்கு முன்னிருந்த காலனித்துவ பிரித்தானிய அரசாலும் நிராகரிக்கப்பட்டு, தமது சொந்த மண்ணிலேயே தாம் நாடற்றவர் என்கிற பரிதாப நிலைக்குத் தள்ளப்பட்ட நிலையில், ஆயுத எதிர்ப்பை 'கெரில்லா யுத்தத்தின்' மூலம் வெளிப்படுத்தத் தொடங்கினர். அன்று முதல் சிறீலங்கா அரசாங்கம், தமிழ் மக்கள் முழுப் பேரையுமே தனது எதிரியாகக் கருதி 'மக்களுக்கெதிரான யுத்தத்தை' நடத்துகின்றது.

1972 இல் தமிழருக்கெதிரான குடியரசு அரசியல் அமைப்பை தான்தோன்றித் தனமாக நிறைவேற்றிய சிறீலங்கா, 1973 இல் 8,500 இராணுவத்தினரையும் 2,300 கடற்படையினரையும், 1700 விமானப் படையினரையும் தனது அணியில் பெருக்கி சிறீலங்காவில், சிங்களவரை ஆயுதமயப்படுத்தும் வேலையை ஆரம்பித்தது. 1973/74 இல் தான் முதன்முதல் இராணுவச் சமநிலையைக் காட்டும் உலக புள்ளி விபரப் புத்தகத்தில் சிறீலங்கா இடம்பிடித்துக் கொண்டது. 1992 ஆம் ஆண்டு புள்ளிவிபரப்படி, 89,000 இராணுவம், 8,904 கடற்படை, 8,000 விமானப்படை, 3,000 விசேட அதிரடிப்படை, 27,000 பொலிசார், 12,000 தேசிய பாதுகாப்புத் தொண்டர் படை, 15,200 ஊர்காவற்படை என மொத்தம் 1,59,000. இவ்வருடம் மேலும் 10,000 பேரை இராணுவத்தில் சேர்த்துக்கொண்டுள்ளதாக சிறீலங்கா அறிவித்துள்ளது. 1983 இல் 1870 மில்லியன் ரூபாய்களை பாதுகாப்புச் செலவுக்கு செலவிட்ட சிறீலங்கா 1993 இல் பத்து மடங்கு தொகையை -அதாவது 18,300 மில்லியன் ரூபாய்களை செலவிடுகிறது. இவை சிறீலங்கா அரசாங்கம், புலிகளுக்கு எதிரான யுத்தத்தை அல்ல, தமிழீழ மக்களுக்கு எதிரான இனக்கொலை யுத்தத்தையே தனது கருத்தில் கொண்டுள்ளது என்பதைத் தெளிவுபடுத்துகின்றது.

இந்தவகையில் காலத்துக்குக் காலம் பெரிய அளவிலும், நாளாந்தம் சிறிய அளவிலும் தமிழ் மக்களை இன அழிப்புச் செய்துவரும் சிறீலங்கா அரசாங்கம், 1993 செப்டெம்பர் 28 ம் திகதி 'யாழ்தேவி நடவடிக்கை' என்ற பெயரில் குடாநாடு நோக்கி 10,000 இராணுவத்தினரை, விமான -கடற்படை -டாங்கி படைகள் உதவியுடன் தரைநகர்வு செய்ய முயன்றது. இதற்காக குடாநாடு முழுவதும் செல் அடியும் விமானக் குண்டு வீச்சும் நடாத்தி, நூற்றுக்கும் மேற்பட்ட மக்களைக் கொன்றொழித்துள்ளது. ஆயினும் தரைநகர்வு விடுதலைப் புலிகளின் எதிர்த் தாக்குதல்களால் தடுக்கப்பட்டது. 250 க்கும் மேற்பட்ட இராணுவத்தினரின் இழப்புடன், எட்டு டாங்கிகள் புலிகளால் இலகுவாகக் கைப்பற்றப்பட்டும், சேதமாக்கப்பட்டும் பலமிழந்ததும், இராணுவம் பதினைந்து நாளுக்கு எனத் திட்டமிட்ட நடவடிக்கையை ஏழு நாட்களுக்குள் இடைநிறுத்தி, மீண்டும் ஆனையிறவு முகாமுக்கே பின்வாங்கிச் சென்று முடங்க வழிசெய்துள்ளது.

இந்நிலையில், தனது தற்காலிக ஜனாதிபதிப் பதவியை நிரந்தரமான ஜனாதிபதிப் பதவியாக மாற்றுவதற்காகவும், தேர்தலில் புலிகளை அழித்துவிட்டதாகக் கூறி இனவாத வெற்றிகளைத் தேடிக்கொள்வதற்காகவும், சர்வதேச சமூகத்தினர் நீதியான தீர்வுகளுக்கான அழுத்தங்களை அதிகரிக்கும் முன்னரே, இராணுவத் தீர்வால் வெற்றி கண்டு விடலாம் எனப் பகற்கனவு கண்டதன் பலனாகவும், சிறீலங்கா ஜனாதிபதி டிங்கிரி பண்டா விஜயதுங்க எடுத்த இராணுவ நடவடிக்கையின் வெள்ளோட்டமே, சிறீலங்காவுக்கு பலத்த தோல்வியைக் கொடுத்துள்ளது.

ஆயினும், சிங்களவரான நவசமசமாஜக் கட்சியின் பொதுச்செயலாளர் விக்ரமபாகு கருணாரட்னா கூறுவதுபோல், "போலியான பேச்சு வார்த்தைகள், தெரிவுக்குழுக்கள் என்பனவற்றின் போர்வையின் கீழ் இனக்கொலைக்கான யுத்தமொன்றை நடத்துவதே இந்த அரசின் கொள்கை". ஆகவே எந்நேரமும், இன்னும் பல்லாயிரம் இராணுவத்தினரை தமிழ் மக்கள் மேல் சிறீலங்கா ஜனாதிபதி ஏவிவிடக்கூடும்.

இந்த இனக்கொலைகள் தொடராமல் தடுக்கப்படல் வேண்டும் என்றால், சர்வதேசச் சமூகம் தமிழ் மக்களின் தமிழீழ அரசையும் அதனை 'அரசு நோக்கிய அரசாக' (Defacto Government) நிறுவியுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளையும் ஏற்று அங்கீகரிப்பது ஒன்றே ஒரே வழி. இந்த உண்மை -நீதி உலகில் நிலைநிறுத்தப்பட, ஒவ்வொரு தமிழனும் உடனடியாகத் தன்னால் இயன்றதைச் செய்ய வேண்டிய அதிமுக்கிய நேரமிது. ■

# தென்தமிழீழத்தில் அதிரடித் தாக்குதல்கள் வெற்றி

திருகோணமலை வெலிகந்தையிலுள்ள சிறீலங்கா பொலிஸ் காவல்நிலையம் ஒன்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிரடித் தாக்குதலால் முற்றாக சேதமடைந்தது. 30 பொலிசாருடன் கூடிய இப்பொலிஸ் நிலையத்தின் மீது விடுதலைப் புலிகள் தாக்குதலை ஆரம்பித்தவுடன் 20 பொலிசார் காடுகளுக்குள் ஓடி ஒளிந்துவிட்டதாகவும் மீதிப்பேர் கொல்லப்பட்டும் படுகாயமடைந்தும் உள்ளனர் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன. இத்தாக்குதலில் பெருந்தொகையான ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

### விமானப்படையினர் 5 பேர் பலி

திருகோணமலையில் விமானப் படை ரோந்து அணியினர் மீது நடத்தப்பட்ட மற்றொரு அதிரடித் தாக்குதலில் ஐந்து விமானப்படையினர் உயிரிழந்தும் மூவர் காயமடைந்துமுள்ளனர்.

### மூதூர் பொலிஸ் நிலையம் மீதும் தாக்குதல்

மூதூர் பொலிஸ் நிலையம் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் இரண்டு பொலிசாரும் 5 ஊர்காவல் படையினரும் கொல்லப்பட்டனர். ஜெனரேற்றர்கள் உட்பட பெருந்தொகையான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. ■

சிறீலங்கா இராணுவ நடவடிக்கையால்

# மட்டக்களப்பில் உயிரிழந்தோர் 3000 காணாமல் போனவர்கள் சுமார் 5000

சிறீலங்கா இராணுவத்தினரின் நடவடிக்கைகள் காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை சுமார் மூவாயிரம் ஆகும் என்றும், மேலும் காணாமல் போனவர்கள் ஐயாயிரத்திற்கும் அதிகமாகும் என்றும் புள்ளி விபரங்கள் மூலம் தெரியவருகின்றது. புனர்வாழ்வு புனரமைப்புத் திணைக்களம் மேற்கொண்ட மதிப்பீடு ஒன்றிலிருந்து மேலும் தெரியவருவதாவது:

கடந்த மூன்று வருட யுத்தத்தில் மட்டும் நான்கு கோடியே முப்பது இலட்சம் ரூபா பெறுமதியான 3012 மீன்பிடிப் படகுகளும், 584 கோடியே முப்பது இலட்சம் ரூபா பெறுமதியான 55,942 வீடுகளும் சேதமாக்கப்பட்டிருப்பதாகவும், பதினேழு கோடியே இருபது இலட்சம் ரூபா பெறுமதியான தனியார் போக்குவரத்து வாகனங்கள் சேதமாக்கப்பட்டன என்றும், மொத்தத்தில் 758 கோடி ரூபாவுக்கும் மேற்பட்ட பெறுமதியுடைய சொத்துக்கள் சேதமாக்கப்பட்டுள்ளன என்றும் ஒரு இலட்சத்து மூவாயிரத்து எழுநூற்றி எழுபத்தெட்டு குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்றும் கூறப்படுகின்றது. ■

# வெளிச்சம் காட்டும் வெளிச்சம்!

**புலம்பெயர்ந்து வாழும் எம் உடன் பிறப்புக்களே!**

தொடர்ந்தும், எம்மண்ணின் வான்பரப்பின் மீது இயந்திர வல்லூறுகள் வட்டமடிக்கின்றன. குண்டுவீச்சு விமானங்கள் கோரக் கொலைவெறி கொண்டு ஊழிக்கூத்தாடுகின்றன. வீதிகள், வீடு [illegible] இலக்கு [illegible] குண்டுகளை வீசிவிட்டு, சில புலிகளையாவது அழித்துவிட்டோம் என்ற பொய்யான திருப்தியுடன் நகருகின்றன.

கிளாலிக் கடல்நீரேரி தமிழரின் குருதிகலந்து சிவப்பாகத் தெரிகிறது. பச்சைத் தமிழரின் இரத்தம் அவன் மண்ணிலேயே உலர்ந்து போயிருக்கிறது. அப்பாவித்தனமாக ஏன் சாகிறோம் என்பது கூடத் தெரியாமல் தினம் தினம் தமிழன் சாகடிக்கப்படுகிறான்.

படகிலேறி கறுப்புச் சட்டைக்காரன் ஒருவன் வாளெடுத்து வெட்டினானாம். ஐயோ என்ற அவலக்குரல் அந்தப் பிரதேசமெங்கும் எதிரொலித்ததாம்.

தென் தமிழீழத்தில் தமிழ் அறிவுஜீவிகள் அடிக்கடி காணாமல் போய்விடுகின்றனர். அவர்கள் திரும்பிவரும் செய்தி அதிகமாக வருவதேயில்லை. இப்படி ஏன் நடைபெறுகின்றது? வேர்களை வெட்டி, விழுதுகளைக் காயப்போட எதிரி எண்ணுகின்றான் போலும். சுற்றிவளைப்பு, விசாரணைக்காக அழைத்துச் செல்லல், முகாமில் தடுத்து வைத்தல் என்பதெல்லாம் சிங்களப் பேரினவாத அரசின் அகராதியில் கொல்லப்படுவதைக் குறிக்கும் புதிய பதங்கள்; குறியீட்டுச் சொற்கள்.

கொழும்பு கதிரேசன் கோவிலில், உற்சவ நேரத்தில் குண்டு வெடிப்பு. இது சரணாலயம் தேடிய தமிழ்ப் பறவைகளின் சிறகை வெட்டும் முயற்சி என்பது அங்குபோன எம்மவர்களுக்குப் புரியுமா? எம் சொந்தக் கூடுதான், எமக்குப் பாதுகாப்பு என்பது அங்குபோன எம்மவர்களுக்குப் புரியுமா? எம் சொந்தக் கூடுதான், எமக்குப் பாதுகாப்பு என்பது அவர்களுக்கு என்றுதான் தெரியவருமோ?

அகதியாக மேற்குலகம் சென்றவர்களும் அங்கு அந்தரிக்கின்றனர். ஆசிய நாட்டவர்களையே அவர்களுக்குப் பிடிக்கவில்லையாம். மாற்றான் வீட்டு முற்றத்தில், கோலம் போட்டு பிடியரிசிப் பொங்கல் பொங்குவது இன்னும் எத்தனை காலத்துக்கு? 'காஸ் குக்கர்' சமையல்காரன் வீட்டில் விறகு வைத்து அடுப்பு மூட்டினால், அவன் கண்ணில் எரிச்சல் வருவது தவிர்க்கமுடியாதுதானே. புகையே அங்கு பகையாகிவிட்டது. அவன் ஆத்திரப்படுவது நியாயம்தான். இது, அங்குபோன நம்மவர்களுக்கு ஏன் புரியாமல் போனது? வேலியற்ற காணியென்றாலும் எங்கள் தாயகம் உறுதிக் காணிதானே.

அரண்மனையென்றாலும் ஐரோப்பிய நாடுகள் வாடகை வீடுகள்தானே.

இது 'சில்லுப் பூட்டிய சிவப்பு நட்கேசுக்காரர்களுக்கு' விரைவில் விளங்கினால் நன்று.

[illegible] உரிமையுமுண்டு. எம்மினத்தின்மீது எதிரி திட்டமிட்டு நடாத்தும் வதைகள், வாழ்நெருக்கடிகள் அனைத்தும் விடுதலையை, எம் போராட்டத்தை விரிவுபடுத்தும், விரைவுபடுத்தும் காரணிகளாகக் கருதிக்கொள்வோம்.

எனவே, எங்கள் தாயகமண்ணின் விடுதலையை விரைவுபடுத்தி வெல்லவேண்டிய பாரிய பொறுப்பு எங்கள் தலைமுறைக்கேயுண்டு. அஞ்சலோட்டம் போல, தடியை அடுத்த தலைமுறையினரிடம் ஒப்படைத்துவிட்டு நாம் ஓயமுடியாது. இந்தப் போராட்டத்தை தொடங்க வேண்டிய காரணிகள் எங்கள் தலைமுறையின் கழுத்தைத்தான் நெரித்தன. அதனால் இந்த விடுதலைப் போரை ஆரம்பித்தது எங்கள் தலைமுறைதான். எனவே நாமே போராட்டத்தை வென்று முடித்து வைக்கவேண்டிய பொறுப்பும் எமக்குண்டு. முடியாமல் போனால் மட்டுமே, அடுத்த தலைமுறை தொடரவேண்டும். எம்மால் எப்படி முடியாமல் போகும்?

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற தலைவனே களத்தில் நின்று படை நடத்திக்கொண்டிருக்கும் போது, எப்படி எமது போர் வெல்லாமல் போகும்?

நிலை தளராது நிற்பதால், எவராலும் விலைபேசமுடியாத எங்கள் தலைவனே கை உயர்த்திக் கட்டளை இடும்போது, எமது விடுதலை எப்படிக் கைகளுக்கு எட்டாமல் போகும்?

கரும்புலிகள், தம்மையே தற்கொடையாக்க விலைகேட்டு விண்ணப்பித்துக் கொண்டிருக்கும் போது, எங்கள் விடுதலையை வெல்லாமல் விடுவோமா?

முப்பது நிமிடத்தில் எதிரியின் முழுமையான தங்ககத்தை தரைமட்டமாக்கும் வேங்கைகளுக்கு எவர்தான் ஈடுகொடுத்து எதிர்நிற்க முடியும்?

நாங்கள் செய்யவேண்டியது ஒன்றே ஒன்றுதான். எம்மண்ணின் இனத்தின் விடுதலைக்கான போருடன் இன்னுமின்னும் இறுக்கமாக இணைந்து கொள்வதுதான். கலை, இலக்கியப் படைப்பாளிகள் 'அப்படி ஆகுமோ; இப்படிப் போகுமோ' என்று அங்கலாய்ப்பதை விட்டு, வெல்வோம் என்ற நம்பிக்கையுடன் விடுதலை தேடும் வேங்கைகளுடன் இணைந்து நிற்பதே இந்தப் போரை வெல்வதற்கான நமது பங்காகும்.

இதனையே எமது கலை, இலக்கியப் படைப்பாளிகளிடமிருந்து நாம் எதிர்பார்க்கிறோம். ■

* ( தமிழீழத்திலிருந்து வெளிவரும் சஞ்சிகையான 'வெளிச்சம்' ஆவணி இதழின் ஆசிரியர் தலையங்கம். ) ■

நன்றி: 'வெளிச்சம்'

# பத்தாயிரம் இராணுவத்தினரை தடுத்து நிறுத்தினர் விடுதலைப்புலிகள்

ஆனையிறவு சிறீலங்கா இராணுவ முகாமிலிருந்து தரைநகர முயன்ற பத்தாயிரம் இராணுவத்தினர் விடுதலைப் புலிகளின் கடுந்தாக்குதல்களுக்குள் சிக்கிக் கொண்டதால், சிறீலங்கா இராணுவத்தினருக்குப் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது. இருநூற்றுக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் உயிரிழந்துள்ளதாகவும் இருநூற்றைம்பதற்கும் மேற்பட்ட சிறீலங்காப் படையினர் படுகாயமடைந்துள்ளதாகவும் நூற்றுக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் காயங்களுக்குள்ளாகி இருப்பதாகவும் 03.10.1993 ஞாயிற்றுக்கிழமை வரை கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன. ஆயினும் சிறீலங்காப் படையினரால் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் சிக்கியுள்ள இராணுவத்தினர் பற்றிய சரியான புள்ளிவிபரங்களைப் பெற்றுக்கொள்ள முடியாதிருப்பதால், உண்மையில் இராணுவத்தினரின் இழப்பு அறிவிக்கப்பட்டுள்ள புள்ளிவிபரங்களைவிடப் பலமடங்காக இருக்கும் என சர்வதேச செய்தி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

## கண்ணிவெடி, அமுக்கவெடி வயல்களுக்குள் சிக்குண்டு சேதமுற்றனர்.

புரட்டாசி 28 ஆம் திகதி காலை, சிறீலங்கா இராணுவத்தின் யாழ். கமாண்டர் ஜே. நம்முனியின் நேரடியான வழிகாட்டலின் கீழ், 'யாழ்தேவி நடவடிக்கை' என்ற இன அழிப்புக்கான இராணுவ நடவடிக்கையை சிறீலங்கா இராணுவம் ஆரம்பித்தது. வழமை போல் விமானங்கள் கண்மூடித்தனமாக குண்டுமழை பொழிய, கவச வாகனங்களும் டாங்கிகளும் அணி அணியாகப் புடைசூழ, குடாநாடு முழுவதும் எறிகணைத் தாக்குதல் ஈவிரக்கமற்ற முறையில் நடாத்தப்பட்டவண்ணம் இருக்க, சிறீலங்கா இராணுவத்தின் பத்தாயிரம் இராணுவத்தினர் ஆனையிறவு முகாமிலிருந்து வடக்கு நோக்கி நகர முற்பட்டனர். குண்டுகளின் பலத்த ஓசைகளால் அப்பிரதேசங்கள் அதிர்ந்தன. எங்கும் புகைமண்டலம் எழும்பியது. ஆயினும் விடுதலைப் புலிகளின் கண்ணிவெடி, அமுக்கவெடி வயல்களுக்குள் சிக்கிக்கொண்ட இராணுவத்தினர் எதிர்பாராத பலத்த உயிர் உடல் சேதங்களுக்கு ஆளாகினர்.

இந்நேரம், விடுதலைப் புலிகளின் அணிகள் தமது உறுதியான எதிர்த்தாக்குதலை ஆரம்பித்தன. இத்தாக்குதல்களுக்கு எதிர்நிற்க முடியாத சிறீலங்கா இராணுவத்தினர், கவச வாகனங்களையும், டாங்கிகளையும் இழந்து தடுமாறத் தொடங்கினர். கடும் யுத்தம் மூண்டது.

## கவசவாகன படைப்பிரிவு கப்டன் கைது என சிறீலங்கா அறிவிப்பு

சிறீலங்கா இராணுவத்தின் 16 உயர் அதிகாரிகள் கொல்லப்பட்டுள்ளதாக சிறீலங்கா தலைப்பீடம் இதுவரை ஏற்றுக்கொண்டுள்ளது. இவர்களில் சிறீலங்காப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமில்டன் வணசிங்காவின் மருமகனான நளின் ஜெயதிலகாவும் ஒருவர்.

அதேவேளை கவசவாகனப் படைப்பிரிவு கப்டன் மக்கள நாணயக்காராவை புலிகள் கைது செய்து கொண்டு சென்றுள்ளதாக சிறீலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் அறிவித்துள்ளன. அத்துடன் ஏழு இராணுவத்தினர் இவருடன் சேர்ந்து காணாமல் போயுள்ளதாகவும் சிறீலங்கா கூறியுள்ளது.

## சீன ஆயுதங்களுடன் 15 நாள் போரிடத் திட்டம்

சீனாவிலிருந்து அவசரம் அவசரமாக இறக்குமதி செய்யப்பட்ட ஆயுதங்கள் சகிதம் 'புக்காரா', 'எம்.ஐ.8', 'சுப்பர் சோனிக்' விமானங்களின் கடுமையான குண்டுவீச்சுக்களுடன், டாங்கிகள், கவச வாகனங்களின் தாக்குதலுடன் தனது தாக்குதலை ஆரம்பித்த சிறீலங்கா இராணுவம், 15 நாட்களுக்குள் சாவகச்சேரி வரை முன்னேறி, குடாநாட்டுக்கான உணவுப்பாதைகளையும் துண்டித்து, உணவை ஆயுதமாக்கி தமிழ் இன அழிப்பை மேலும் நிலைப்படுத்துவதைத் தமது நோக்கமாகக் கொண்டிருந்தது எனப் பகிரங்கமாக ஒப்புக்கொண்டுள்ளது.

### நிலை பெற முடியாது

இராணுவம் விமானப்படை, கடற்படையின் துணையுடன் சிறிது தரை நகர்ந்தாலும் புலிகளின் பிரதேசத்தில் நிலையாக நிலைபெறமுடியாது என சிறீலங்காவின் ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகள் பலர் கருத்து வெளியிட்டுள்ளனர்.

"இப்போதைய நிலைமைகளைப் பார்த்தால் நடவடிக்கையை நிறுத்துவதே மேல்" என ஓய்வு பெற்ற சிறீலங்கா மேஜர் ஜெனரல் ஒருவர் கூறியுள்ளார்.

### பாதுகாப்பு ஆய்வாளர்கள் தோல்வியை ஏற்றனர்.

இந்த இராணுவ நடவடிக்கையானது, பாதுகாப்பு அமைச்சு எதிர்பார்த்ததுபோல் வெற்றி அளிக்கவில்லை என கொழும்பில் வைத்து பாதுகாப்பு ஆய்வாளர்கள் பகிரங்கமாக ஏற்றுக் கொண்டுள்ளனர். ■

# டாங்கி எதிர்ப்புப் பிரிவின் தாக்குதல்கள் வெற்றி

தமிழீழ விடுதலைப் புலிகளின் டாங்கி எதிர்ப்புப் பிரிவின் தாக்குதல்கள், சிறீலங்கா இராணுவத்தினரின் டாங்கிகளின் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்துவதில் பெருவெற்றி கண்டன. இதுவரை கிடைத்த செய்திகளின்படி, ஆறு கவச வாகனங்கள் டாங்கி எதிர்ப்புப் பிரிவின் தாக்குதலுக்கு இலக்காகி முற்றாகச் சேதமடைந்தன. அதே வேளை, அமுக்க வெடி வயல்களுள் சிக்குண்ட சிறீலங்கா இராணுவத்தின் இரண்டு கவச வாகனங்கள் சுக்குநூறாகச் சிதறியுள்ளன.

### டாங்கிகள், கவச வாகனங்கள் கைப்பற்றப்பட்டன

புலோப்பளையில் இரண்டு கவச வாகனங்களும், இரண்டு டாங்கிகளும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இவற்றுடன் சேர்த்து ஜீ.பி.எம்.ஜீ -2, ஏ.கே.எல்.எம்.ஜீ -3, மினி எல்.எம்.ஜி -3, எல் 3 எல்.எம்.ஜீ -2, ஆர்.பி.ஜீ -3, 60 மி.மீ. மோட்டார் -2, 40 மி.மீ. டோகான் -3 உட்பட பல தானியங்கி ஆயுதங்களும் வெடிமருந்துகளும் இராணுவ உபகரணங்களும் புலிகளால் இவ்விடத்தில் வைத்துக் கைப்பற்றப்பட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

### முன்னாள் விமானப்படைத் தளபதி தோல்வியை ஒப்புக்கொண்டார்.

"வடக்கில் இராணுவத்தினர் மேற்கொண்டிருக்கும் யாழ்தேவி இராணுவ நடவடிக்கையின் போது ஏற்பட்டிருக்கும் இழப்புக்களை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும்போது புலிகள் இயக்கத்தினரின் பலத்தையும் உறுதிப்பாட்டையும் இராணுவம் விளங்கிக் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. இது விடயத்தில் தப்புக் கணக்குப் போடப்பட்டிருப்பதாகவே நான் கருதுகிறேன்" என சிறீலங்காவின் ஓய்வுபெற்ற விமானப்படைத் தளபதி கரிகுணதிலக கருத்துத் தெரிவித்துள்ளார்.

### "யாழ்ப்பாணத்திற்குள் ஊடுருவுவது சாத்தியமல்ல"

"புலிகளின் கொத்தளமாக விளங்கும் யாழ்ப்பாணத்திற்குள் ஊடுருவுவது சாத்தியப்படாது எனவும் கரி குணதிலக கருத்து வெளியிட்டுள்ளார்.

### சிறீலங்கா ஜனாதிபதியின் முயற்சியின் தோல்வி

சிறீலங்கா ஜனாதிபதி டிங்கிரி பண்டா விஜேதுங்க, "இங்கு காணப்படுவது இனப்பிரச்சினை அல்ல, பயங்கரவாதமே" எனக் கூறியதன் மூலம் தனது அரசாங்கத்தின் இராணுவ நடவடிக்கைக்கு வித்திட்டார். இதைத் தொடர்ந்து படைவெடுப்பை நடத்தக்கூடிய வகையில் கூட்டுப்படைத் தலைமையகம் கலைக்கப்பட்டு முப்படைத் தளபதிகளின் அதிகாரம் வலுவாக்கப்பட்டது. பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக கமில்டன் வணசிங்க பதவியேற்ற உடனேயே வெளிநாட்டு ஆயுத -விமான கொள்வனவுகள் ஊக்கப்படுத்தப்பட்டு வடக்கு நோக்கி, படைகளும் ஆயுதங்களும் நகர்த்தப்பட்டன. முப்படைத் தளபதிகளும் பலாலிக்கு விஜயம் செய்து, வடபிராந்திய சிறீலங்கா இராணுவத் தளபதி றொகான் தலுவத்த, யாழ் கமாண்டர் ஜே. நம்முனி, வடபிராந்திய கடற்படைத் தளபதி டெரன்ஸ் சுந்தரம் ஆகியோருடன் கலந்தாலோசித்து படைவெடுப்புக்கான ஆயத்தங்களைச் செய்தனர்.

### கண்மூடித்தனமான குண்டு வீச்சு

யுத்தத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் பொதுமக்கள் குடியிருப்புக்கள் மேல், கண்மூடித்தனமான குண்டு வீச்சுக்களையும் செல் அடிகளையும் சிறீலங்கா விமானப்படையும் கடற்படையும் நடாத்தியது. குண்டு வீச்சுக்கள் யுத்தம் ஆரம்பமான பின்னர் மேலும் பரவலாக்கப்பட்டன.

### நூற்றுக்கும் மேற்பட்டோர் பலி குடியிருப்புக்கள், கோவில்கள் சேதம்

இக்குண்டு வீச்சுக்களால் நூற்றுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் யாழ். குடாநாட்டுக்குள் கொல்லப்பட்டுள்ளதுடன் மேலும் நூற்றுக்கணக்கானோர் காயமடைந்துமுள்ளனர்.

### நந்தாவில் அம்மன் கோவில் சேதம் : 4 பேர் பலி

கொக்குவில் நந்தாவில் அம்மன் கோவில் மேல் வீசப்பட்ட குண்டுகளால் கோவில் கோபுரம் சேதமடைந்தது. இச்சம்பவத்தின் போது ஐம்பது வயதைத் தாண்டிய ஞானேஸ்வரி, இராஜேஸ்வரி, தர்சனா, துரைராஜா ஆகிய நால்வர் கொல்லப்பட்டுள்ளனர். இக்கோவிலுக்கு அருகில் இருந்த சனசமூக நிலையத்தின் மீது விழுந்த குண்டால் இக்கட்டடத்தில் நடத்தப்பட்டுவந்த பாலர் பாடசாலையைச் சேர்ந்த பதினாறு மாணவர்கள் காயமடைந்துள்ளனர். கிளிநொச்சியில் நடந்த குண்டு வீச்சில் இரண்டு வயதுக் குழந்தை சுரேஸ்குமார் பலியானதாகவும் அவரின் தகப்பன் படுகாயமடைந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

### சங்கத்தானையில் மண்ணுள் 27 பேர் புதைவு

குண்டு வீச்சின் அதிர்வினால் சங்கத்தானையில் பதுங்கு குழி ஒன்று இடிந்ததில் 27 பேர் மண்ணுள் புதையுண்டனர். இவர்களில் 7 பேர் மட்டுமே குற்றுயிராக மீட்கப்பட்டதாகவும் இருபது பேரின் சடலங்களே வெளியே எடுக்கப்பட்டன எனவும் செய்திகள் கூறுகின்றன.

பலாலி 'செல்' தாக்குதலால் நவக்கிரியில் ஐந்து பேர் கொல்லப்பட்டுள்ளனர். கிளாலி, அல்லிப்பளை, எழுதுமட்டுவாள், மட்டுவில், சாவகச்சேரி, பளை, பச்சிலைப்பள்ளி போன்ற பகுதிகள் குண்டு வீச்சில் இலக்கானதில் நாற்பது பேர்வரை பலியாகியுள்ளனர். இதுவரை குண்டு வீச்சில் இறந்தவர்களில் பத்துக்கும் மேற்பட்டோர் குழந்தைகள் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. குண்டு வீச்சுத் தாக்குதல்களாலும் யுத்தத்தாலும் பல்லாயிரக்கணக்கான மக்கள் அகதிகளாக இடம்பெயர்ந்தவண்ணம் உள்ளதாகவும் இவர்களுக்கான நலன்பேணும் நடவடிக்கைகளை அரச சார்பற்ற அமைப்புக்கள் செய்துவருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி, இது இனப்பிரச்சினை அல்ல, பயங்கரவாதமே எனக் கூறத்தொடங்கியதுமே புலிகள் யுத்தத்திற்கான முன்னறிவிப்பை உணர்ந்துவிட்டதாகவும், இதனால் மக்களை யுத்தத்தில் இருந்து பாதுகாப்பதற்கான வழிமுறைகளில் ஈடுபட்டு வந்ததாகவும் தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ்ப்பாணப் பொறுப்பாளர் கூறியுள்ளதாகப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன. ■

## மீண்டும் கிளாலியில் படகுச்சேவை

யாழ்தேவி இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து இடைநிறுத்தி வைக்கப்பட்ட கிளாலிப் போக்குவரத்து 5-10-93 செவ்வாய்க் கிழமை அன்று மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது. கடற்புலிகளின் பலத்த பாதுகாப்புடன் இப்போக்குவரத்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க் கிழமை அன்று குறைந்த எண்ணிக்கையான படகுகளே சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. சிறீலங்காப் படையினர் திரும்பிச் சென்று ஆனையிறவு முகாமுக்குள் முடங்கிக் கொண்டுள்ளமையும், மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட கிளாலிப் படகுச் சேவையும் சிறீலங்கா அரச படைகள், உண்மையில் கிளாலியைக் கைப்பற்றினார்களா என்ற சந்தேகத்தை தென்னிலங்கையில் ஏற்படுத்தியுள்ளது. கிளாலியைக் கைப்பற்றியதாக இராணுவ அதிகாரி ஒருவர் பத்திரிகையாளருக்கு செய்தி தருகையில், "கிளாலிக் கடலேரிப் போக்குவரத்தைச் சட்டத்தின் மூலம் தடைசெய்திருந்தோம். விடுதலைப் புலிகளோ அதனை மீறி சட்டவிரோதமாகப் படகுச் சேவையை நடத்தினர். இதற்கு நாம் முற்றுப் புள்ளி வைத்துள்ளோம்" என தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. ■

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

# 'இதயபூமி-1' இராணுவ நடவடிக்கையின் வெற்றிக்கு உயிர்தந்த பதின்மர்!

மணலாறு, அப்பிரதேசத்தில் வாழும் மக்களுக்கு மட்டும் சொந்தமல்ல. தமிழீழத்தின் எத்திசையில் இருப்பவர்களுக்கும் அந்தமண் சொந்தமண். எம் வீரகாவியத்தின் தலைவனைக் காத்துத்தந்த பூமி அது. இந்த உண்மை எம் வீரர்கள் மனதில் ஆழமாகப் பதிந்துள்ளதும், தலைவன் எமது மண்ணில் கொண்ட தளராத பற்றும், அவனது வளர்ப்புக்களின் அயராத கடின பயிற்சியும், நிறைவாகும் வரை மறைவாக இருக்கும் விவேகமும் இதயபூமி நடவடிக்கையின் வெற்றிக்கு வழிசமைத்தவைகளாகும். இந்த வெற்றி வரலாற்றோடும், இதயத்தோடும், இதயபூமியோடும் இரண்டறக் கலந்துபோனவர்கள்தான்,

**லெப். திருமலைநம்பி (பேர்னாண்டோ)**
**லெப். நக்கீரன் (செந்தூரன்)**
**லெப். அழகப்பன் (காந்தி)**
**லெப். வில்லவன் (விமலன்)**
**2ஆம் லெப். புகழரசன்**
**லெப். ஈழவேந்தன்**
**லெப். குயிலன்**
**லெப். வாசன்**
**லெப். விக்ரம்**
**2ஆம் லெப். சியாமணி**

---

## லெப். திருமலைநம்பி (பேர்னாண்டோ)

(வரப்பிரகாசம் யுக்தீபன்)
கொழும்புத்துறை-யாழ்ப்பாணம்

ஜயசேன, மின்னல், சிக்சர், செவண்பவர் என்றெல்லாம் மணலாற்றில் இராணுவம் மேற்கொண்ட நடவடிக்கைகளை முறியடித்தபோது எம்மோடு துணைநின்ற திருமலைநம்பியே! உன் மலைபோன்ற வீரத்தை நாம் மறந்துவிட முடியுமா.....?

மணலாறு தமிழீழத்தின் 'இதயம்' என்பதை உன் இதயத்தில் பதித்து செயல்புரிந்த வீரனே! நீ பிறந்த மண் கொழும்புத்துறையா மணலாறா என்று தடுமாறவைத்தவனே! உன் உணர்வுகளை; நினைவுகளை இலகுவில் அழித்துவிட முடியுமா.....?

சண்டைக்குச் செல்லும் போதெல்லாம், "மச்சான் நான் இந்தச் சண்டையில செத்திடுவன்; நான் சண்டைபிடிச்சு செத்த முழு விபரத்தையும் வீட்டில்போய் மறக்காமல் சொல்லிப்போடு" என்று கேட்பாய்.



பொறுப்பாளனென்பதை மறந்து தோழமையோடு பழகினாய். போர் வாழ்வில் உன்னுடன் வாழ்ந்த கால நினைவுகள் எண்ணில. அவற்றில் சிலவற்றை மட்டுமே நினைத்துப்பார்க்கும் சக்தி எனக்குண்டு. என் சக்திக்கு அப்பாற்பட்டவன் நீ அதனால்தான் என்னை முந்தி, சாதனை வரிகளில் பிறந்து நிற்கிறாய்.

மண்கிண்டி முகாம் தகர்ப்புக்காகச் செல்லும்போது எம்மையெல்லாம் 'வீடியோ' படம் எடுத்தம், அப்போது நீ சொன்னதையும் நினைத்தப் பார்க்கிறேன்.

'வீடியோ' கமெரா உன்னை நோக்கித் திரும்பிய போதெல்லாம் எழுந்து, எல்லோருக்கும் முன்னே வந்து நின்றாய். "ஏன் மச்சான் எழும்பி முன்னுக்கு முன்னுக்குப் போய் நிற்கிறாய்" என்று கேட்டேன்.

"நான் இந்தச் சண்டையில செத்தால் அண்ணன் என்னை அடிக்கடி போட்டுப் பார்ப்பாரில்லையா?" என்று, பதில் சொன்னாய். தலைவன் உன் கடைசி வீரத்தைப் பார்க்கவேண்டுமென்று தீர்மானித்துத்தான் இதைச் சொன்னாயோ.....?

நீ எழுந்ததும், இருந்ததும், விழுந்ததும் இன்னும் என் மனத்திரையில்.....

---

## லெப். நக்கீரன் - செந்தூரன்

(சோமசுந்தரம் அரசரத்தினம்)
பழுகாமம் - மட்டக்களப்பு.

நக்கீரா! நீ பிறந்த பழுகாமத்துக்கு வழு ஏற்படக்கூடாதென நினைத்த மறவனே! கடைசி நிமிடம் வரை உனக்கிருந்த மனக்குறைகளை வரிகளாக்கி, தமிழ் மக்களின் முன் வைக்கிறேன்.

"எல்லாத் தாய் தகப்பனும் வந்து வந்து, தங்கட பிள்ளையள பாத்திட்டுப் போயிட்டாங்க; அம்மா மட்டும் ஏன் இன்னும் வரவில்லை; நான் இந்தச் சண்டையில செத்தா பொடியக்கூட பாக்க வரமாட்டாளா மச்சான்....." என்று, கடைசி நிமிடத்திலும் உன்மனதில் உறைந்து கிடந்த மனக்குறையை, ஏக்கத்தை வெளியிட்டாய். உன்னை உன் தாய் பார்க்கக் கொடுத்துவைக்காமல் போகலாம்; ஆனால் உன் வீரத்தைக் கேட்டு நிச்சயம் கண்கலங்க, நிறைவு கொண்டிருப்பாள்.

நக்கீரா! உனக்கு உன் தாயைக் காணவில்லை என்று குறை. ஆனால் நாமெல்லாம் உன்னிலதானே எம் தாயைக் கண்டோம். உன் செயலில்தானே எம்தாயின் அன்பைப் பெற்றோம். நாம் காயப்பட்டிருந்த போதும், நோயுற்றிருந்த போதும் அருவருப்பின்றிக் காயம் கழுவியது..... கருணையோடு பராமரித்தது..... இதைவிட உலகத்தில் உயர்ந்த பணிஎன்ன உண்டு? தாயிடந்தான் தூய அன்பைப் பெற முடியுமென நினைத்த எமக்கு, ஒரு போராளியிடமும் அதைப் பெறமுடியுமென்பதை உணர்த்திவிட்டாய். தாயை வென்றுவிட்டாய். தலைவன் சரியாகத்தான் வளர்த்தார் என்பதை நிலைநிறுத்திவிட்டாய்.

'மின்னல்' தாக்குதலில் காயமுற்ற நூற்றுக்கணக்கான போராளிகளுக்கு. ஓடி ஓடி நீசெய்த மருத்துவப்பணி சாதாரணமானதா.....? எழுத்தில் முடிக்கக்கூடியதா.....? சொல்லி வடிக்கக்கூடியதா.....?

நக்கீரா! மற்றவர்கள் உன்னைப் பேசியபோதெல்லாம் மௌனமாக இருந்து பின் சிரித்துப் பேசுவாயே. அது எப்படி உன்னால சாத்தியமானது! பொறுமையை உன்னிடமிருந்துதானே சிறிதளவாயினும் நான் கற்றுக்கொண்டேன்.

ஒரேயொருமுறை நீ கோபமுற்றதையும் எவருடனும் பேசாது மௌனமாக இருந்ததையும் கண்டிருக்கிறேன். 'செவண்பவர்' இராணுவ நடவடிக்கையை முறியடிக்கச் சென்ற படையணியில் இடம்பெறமுடியாது போனபோது, உனக்கு எவ்வளவு கோபம் வந்தது தெரியுமா.....? அன்றுதான் நீ நக்கீரனாய் நின்றாய். உன் ஈரநெஞ்சிலும் கனல் பறப்பதை அன்றுதான் கண்டேன். சண்டைக்குச் செல்லவிடாதுதான் உனது கோபத்துக்குக் காரணம். நியாயமான கோபந்தான். ஆனால் உன்பெரும்பணியொன்றினைக் கருதியே, தளபதி உன்னை அக்களத்துக்கு அனுப்பவில்லையென்பதை அறிந்து, [illegible] மறந்துவிட்டாய் [illegible]



'இதயபூமி' தாக்குதல் நடவடிக்கைக்கான பயிற்சி நடந்து கொண்டிருந்தபோது செத்துவிழுவதாக நடித்ததும், விழுந்த உன்னை நான் தூக்கிச் சென்றதும், பின் பொத்தென நிலத்தில் போட்டதும் நிஜமாக மாறிவிடும் என்று நான் நினைக்கவில்லைடா!

தாக்குதலுக்குப் புறப்படும்போது "என்ன, நக்கீரன்ர முகம் வித்தியாசமாய்க் கிடக்கு; சாகப் போறான் போல கிடக்குது" என்று நான் சொன்னதும்..... சொன்னது நிகழ்ந்ததும்.....

ஒரு தாயை இழந்துவிட்டோம். உணர்கின்றோம். ஆனால், உன் உயிர் 'இதயபூமி'யைப் புனிதமாக்கிவிட்டது. அங்கே உன்குருதியால் பதிந்த புதிய வரலாற்றுவரிகள்.....! ■

---

## லெப். காந்தி - அழகப்பன்

(கபிரியல்பிள்ளை யோதிகாவலன்)
ஏழாலை கிழக்கு, ஏழாலை.

பெற்ற தாயும், இரத்தத்தில் உற்ற உறவினரும் பிறந்த பொன்னாட்டைவிட்டுச் சென்றபோதும், 'தாயகமண்ணின் காற்று என் உடலைத் தழுவவேண்டும்; வீழும் என் உடலில் பிறந்த பொன்னாடு புகழ்பெறவேண்டும்; போகும் உயிரும் பாயும் குருதியும் வீசும் காற்றாய், முளைவிடும் தளையின் நீராய் மாறவேண்டும்' என்று கருதி களம் புகுந்தவன் காந்தி.



ஆற்றலுள்ள தலைவன் காலத்தில் மானத்தை நிலைநாட்டிவிடவேண்டுமென்ற துடிப்போடு 'இதயபூமி'யில் கால் பதித்தான்.

"கிடைத்தது சிறிதாயினும் கொடுத்துண்டு வாழ்வது தமிழன் பண்பு." தமிழ் இலக்கியங்களில் இதைப் படித்திருக்கிறேன். இக்கருத்தின் நிஜத்தை காந்தியில் கண்டிருக்கின்றேன். சாப்பிட அமர்ந்தால் சூழ இருக்கும் தன் தோழர்களுக்கு ஒவ்வொரு பிடி கொடுக்காவிட்டால், இவனுக்குச் சாப்பாடு இறங்காது. தனக்குக் குறைவாகிப் போய்விடுமே யென்று ஒருபோதும் நினைத்திருக்க மாட்டான்.

பணிவும் இன்சொல்லும் காந்தியின் அணிகலன்கள். பேச்சில் இனிமை, செயலில் கனிவு நிறைந்த காந்தி களத்தில் தன் துணிவைக்காட்ட ஒருபோதும் பின்நின்றதில்லை. மணலாறு கண்ட களமெல்லாம் வீரவிளையாட்டில் இறங்கியவன்.

'இதயபூமி - 1' தாக்குதலுக்கு செல்லும்முன், ' நல்ல கடல் குளிப்பொன்று குளிக்கோணு'-மெனச்சொல்லி, நாயாற்றுக்கடலில் குளிக்கச் சென்றோம். "மச்சான், இது கடைசிக் குளிப்பாயிருக்குமெண்டு நினைக்கிறன்" என்று, குளித்துக்கொண்டிருக்கும் போது சொன்ன அவனது வார்த்தையில், எவ்வளவு தீர்க்கதரிசனமிருந்தது!

கடைசி நாள்; சாப்பிட்டுக் கொண்டிருந்தோம். வழமை போல் காந்தியும் சாப்பிட அமர்ந்தான். அதுதான் அவன் எம்மோடு பகிர்ந்துண்ட கடைசி நாள்.

"மச்சான், எல்லா மாவட்டப் பெடியளும் இந்த சண்டைக்கு வந்திருக்கிறதால, நாங்கள் எங்கட கடைசிப் பலத்தை சண்டையில காட்டோணும்; மணலாற்றைப் பற்றிநிக்கிற புகழை நிலைநாட்டிப்போடோணும்" என்று சொல்லிய போது, எவ்வளவு உறுதியிருந்தது!

காந்தி நிச்சயம் சாந்திகொண்டே கண்மூடியிருப்பான். இந்தே நிமிடத்தில், மண்கிண்டி பிரதான முகாமுக்கு முன் காப்பாய் இருந்த, மினி முகாமைத் தாக்கியழித்து முன்னேறிய போது..... அந்தக் கடைசி நிமிடத்தில் பெருமையோடு உறங்கிய உன்விழிகள்.....!

---

## லெப். விமலன் - வில்லவன்

(கிருஷ்ணபிள்ளை புண்ணியமூர்த்தி)
வீரமகாநாடு, முதூர்.

விமலா! மன்னாரிலிருந்து வந்த நான், தோப்பூரிலிருந்து வந்த உன்னை மணலாற்று மண்ணில் சந்திக்கின்றேன். வடக்கிலிருந்து வந்த நானும் கிழக்கிலிருந்து வந்த நீயும் இதயபூமியில் இணைந்து வாழ்ந்தகால நினைவுகள் இனிமையானவை. ஆனால், 'இதயபூமி -1' தாக்குதல் நடவடிக்கையில் நீ பிரிந்தபோது துயரம் நிறைந்து துடிக்கின்றேன்.

விடிகின்ற ஒரு வரலாற்றில் உன் முடிவை எழுதிக்கொண்டதை நினைத்து, பெருமையில் விம்மி புடைக்கின்றேன். ஆனாலும், என்னைவிட்டு எப்படி உன்னால் புகழின் உச்சிக்குச் செல்ல மனம் வந்தது? அதை நினைக்கும் போது உன்மீது பொறாமையும் ஏற்படுகின்றது. சிங்கள இராணுவத் தளபதிகளைக் குழப்பி நிலைகுலைய வைத்த 'இதயபூமி -1' நடவடிக்கையில் மரணித்த உன் வீரவரலாற்றை, எம் தலைவன் பாராட்டிப் பார்க்கின்றான். நீ பாக்கியசாலி; அவர் நெஞ்சில் உயர்ந்து நிற்கின்ற வீரசாதனை வீரனாகிவிட்டாய்.

நீ தோப்பூரில் பயிற்சி முடித்ததும், அங்கேயே களப்பணி கண்டதும், விருப்புடன் அழைத்ததும், மணலாற்றுக்கு வந்த ஒருமாத கால நடைப் பயணத்தில் நாம்கள் பலவற்றைச் சந்தித்ததும், மணலாற்றுப் பாசறை வாழ்வில் தினமும் கதையாகச் சொன்ன போது கேட்டிருக்கின்றேன். மிகக் குறைந்த வயதில் விடுதலைக்கு உன்னை அர்ப்பணிக்கத் துணிந்ததை நினைத்துப் பெருமைப்படுகின்றேன்.

மண்கிண்டி இராணுவ முகாம் தகர்ப்புக்குச் சென்ற அன்றைய இரவு, நீ ஆணித்தரமாக சொன்ன வார்த்தைகள் நெஞ்சில் நிற்கின்றன.



"இந்த இடத்தில் எங்கட எத்தின பெடியளைப் பறிகொடுத்திருக்கிறம்; இந்த முகாமை அழிச்சு எங்கட கொடியினை இதில பறக்கவிடோணும்" என்று கூறி, ஆக்ரோசத்துடன் முகாமிற்குள் பாய்ந்து தாக்கினாய்.

தொடர்ச்சி 5ம் பக்கம்

தமிழீழ ஆவணக்காப்பகம் TamilEelam Archive

# 'இதயபூமி-1' இராணுவ நடவடிக்கையின் வெற்றிக்கு உயிர்தந்த பதின்மர்!

அணியணியாய் எம்வீரர்கள் முகாமிற்குள் பாய்வதற்கு வழி சமைத்துக் கொடுத்த நீ.....

மண்கிண்டியின் உச்சியில் கொடிபறந்தது. மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொள்ள உன்னைத் தேடினேன். ஆனால் நீ.... மௌனமாகக் கிடந்த உன்னைத் தூக்கி தோளில் சுமந்து.....

**லெப். துரைக்கண்ணன் - விக்ரம்**
(வைத்தியலிங்கம் தயாநந்தன்)
வட்டக்கச்சி, கிளிநொச்சி.

அரசியல்ஞானம், கலைஞானம், போர்த்திறன் என மூன்று திறமைகளும் ஒரு மனிதனிடம் கூடிப்பிறப்பது அரிது. எமது தலைவனிடத்தில் நிறைந்துகிடக்கின்ற இந்தத் திறமைகள், அவரது வளர்ப்புக்களிடம் குறைவின்றிக் காணப்பட்டாலும், சிலரிடமே முழுமையாகக் கிடக்கின்றன. துரைக்கண்ணனிடம் இந்தத் திறமைகளின் நிறைவைக் கண்டிருக்கின்றேன்.

சினம், கோபம், குரோதம் எப்படியென்பதை அறியாத பொறுமைசாலி. பொறுப்பாளன் என்பதை மனதிற்கொண்டு கண்டிப்புடன் நடந்துகொள்ளாமல் அன்பில் வழிப்படுத்தும் பண்பாளன்.

தற்பெருமை, தற்புகழ்ச்சிகளை விரும்பாத குணசீலன். சக தோழர்களுக்கு வித்தைகள் செய்துகாட்டி, மகிழவைக்கும் வித்தகன். களங்களில் விழுப்புண் சுமந்த துணிவாளன். மைதானத்தில் இறங்கினால் போட்டியாளன் கலங்கும் விளையாட்டு வீரன். எடுத்த எடுப்பில் மேடையில் ஏறி நாடகமோ, கவிதையோ வடித்துக்காட்டும் கலைஞன். சுருக்கமாகச் சொன்னால் துரைக்கண்ணன் ஒரு சகலகலாவல்லவன்.



துரைக்கண்ணனின் இந்த உயர் குணங்கள் போராளிகள் அனைவரையும் கவர்ந்தன; அவனைச் சுற்றி ஒரு கூட்டம் எப்போதுமே மொய்த்திருக்கும். விக்ரம் என்றால் வன்னியில் தெரியாத போராளிகள் இல்லை. போராட்ட வாழ்வில் அவனுடன் வாழ்ந்த நாட்களை நினைத்துப் பார்க்கிறேன். ஒவ்வொரு நாளுமே பசுமையாய் இனிமையாய்த் தெரிகின்றது.

பாசறையில் அவனில்லாத கலைமண்டபம் வெறிச்சோடிக் கிடப்பதைப் பார்க்கின்றேன். கண்மூடினால் கனவெல்லாம் அவனுடன் சேர்ந்து நாடகம் நடிக்கின்றேன். ஒவ்வொரு மாவீரரைப்பற்றியும் கவிதையோ 'விழுதுகளோ' எழுதிப் படித்துக் காட்டிவிட்டு, "பிழையிருந்தால் மன்னித்துக் கொள்ளுங்கள்" என்று கூறிவிட்டு மேடையிலிருந்து இறங்கி வருவது போன்ற பிரமை.

காலையில் கண்விழிக்கும்போது, பாரம் தூக்கும் பயிற்சியில் ஈடுபட்டிருக்கும் துரைக்கண்ணனே முன்னால் நிற்பான்.

"எப்படி மச்சான், நெஞ்சு அகலமாகியிருக்குதோ? 'வீ கட்' அடிக்கிறதா?" என்று கேட்பான்.

"ஏன்மச்சான் இப்படிக் கஸ்ரப்படுகிறாய்" என்று கேட்டால், 'கனரக ஆயுதங்களைத் தூக்கி வச்சு அடிபடோணுமென்டால்' சும்மாயிருந்தால் சரிவருமே மச்சான்" என்று பதிலிறுப்பான்.

'வீட்டுக்கொரு புலிவரணும்' என்ற பாடலை எந்தநேரமும் இவனது வாய் முணுமுணுத்துக் கொண்டிருக்கும்.

வட்டக்கச்சியில் தாயும் தந்தையும் சகோதரியும் வறுமையால் வாடியபோதும், துரைக்கண்ணன் அதைநெஞ்சில் போட்டுக் கொண்டதில்லை. போராட்டத்துடன் ஊறிப்போன தன் குடும்பத்தவர்கள், தான் துண்டு கொடுத்து வந்திடுவன் என்று பயப்பிடாமல் இருக்கவேண்டுமெனக்கூறி, கவிதைகள் எழுதி வீட்டுக்கு அனுப்புவான். உறுதிமிக்க வீரனை -பாசம்மிக்க நண்பனை -இழந்துவிட்டதை நினைக்கும்போது நெஞ்சு முட்டுகின்றது.

மண்கிண்டி இராணுவ தகர்ப்புக்குச் செல்லத் தயாராகிக் கொண்டிருந்தபோது என்அருகே ஓடிவந்தான்.

"மச்சான், இந்தச் சண்டையில் தப்பினா மணலாற்றில் நின்ற நாட்களைப்பற்றி ஒரு நாடகம் எழுதி நடிப்பம். நான் செத்திட்டா என்னைப் பற்றிகவிதை வாசித்துவிடு -விழுதுகள் எழுதிக் கொடுத்துவிடு" என்று சொன்னதை நினைக்கும்போதெல்லாம், மனம்விட்டு அழவேண்டும் போலுள்ளது.

போர்வாழ்வில் இன்னும் அவன் சேவைகள் இருக்க வேண்டுமென நினைத்தோம். தன் சேவை போதுமென்று கருதிப் போய்விட்டான்.....!

**2 ஆம் லெப். சியாமணி**
(யோகச்சந்திரன் ரவிசங்கர்)
திருக்கோணமலை.

பிறந்த மண்ணில், இருந்தால் குற்றம்; சிரித்தால் குற்றம்; கதைத்தால் குற்றம். தொடர்ந்தும் திருமலை நகரில் வாழ்வதா அல்லது வீணே சாவதுதான் முடிவா என்ற கேள்விக்கு, விடைகாண முடியவில்லை. தாமதித்தால் சாவு நிச்சயம் என்ற உண்மை 1990 இன் பிற்பகுதியில் ஏற்படத் தொடங்கியது. அங்கிருந்து வெளியேறுவது என்ற முடிவோடு படகேறினான் சியாமணி.

வாள்வெட்டுக்கும் கடற்படையின் பீரங்கிக்கும் இரையாகாமல் எஞ்சிவந்த படகுகள், மணலாற்றுக் கரையைத் தொட்டன. படகிலிருந்து கரையிறங்கிய அன்றே, தென்தமிழீழத்தில் நாம் வாழவேண்டுமாயின், மணலாறு சுதந்திரப் பூமியாக இருக்க வேண்டுமென்ற உணர்வு, அவனிடம் கருக்கொண்டது.

முல்லை மாவட்டத்தில் புதுக்குடியிருப்புப் பிரதேச சுதந்திரபுரம்



கிராமம், அவனது தாய்தந்தையரின் இருப்பிடமாகியது. குழந்தையுள்ளம் மாறாத வயது. கண்முன் நிகழ்ந்து முடிந்த கோரநிகழ்வுகள் அவனுள்ளத்தைப் பெரிதும் பாதித்திருந்தன.

படுத்து கண்ணுறங்கமுற்பட்டால் வீடுகள் எரிவது, குழந்தைகள் - பெண்கள் வாள் வெட்டுக்கு இரையாகித் துடிப்பது எல்லாம் நினைவுத் தொடராய்வந்து, அவனைத் துன்புறுத்தின.

இரவு பகலாக பலநாள் அழுதிருக்கின்றான். தூக்கத்தில் விழித்திருந்து அழுவதைவிட, விடுதலைப் போரில் விடிவுக்கு வழியமைத்து நிரந்தரமாகத் தூங்குவது மேல், என்ற முடிவோடு பாசறை தேடினான்.

பாசறையில், பயிற்சிக்காலம் அவனுக்குத் துன்பமாகப்படவில்லை. ஏனெனில், அதைவிடக் கொடிய துன்பங்களை அவன் சந்தித்துவிட்டான். போர்வாழ்வு அவனுக்கு அமைதியைக் கொடுத்தது.

மணலாற்றில் 'இதயபூமி-1' தாக்குதலுக்கு வன்னியிலிருந்து புறப்பட்ட அணியில் தானும் இடம் பெற்றது, மனதில் மட்டற்ற மகிழ்ச்சியைக் கொடுத்தது.

நடு இரவு. தாக்குதலுக்குச் சில நிமிடங்களே இருந்தன. மண்கிண்டிமுகாம் அவன் கண்களில் துல்லியமாய்த் தெரிந்தது. மனத்திரையில் வாள்வெட்டு.....வீடெரிப்பு.... உடலில் வெப்பம் அதிகரிக்கத் தொடங்கியது. இத்தாக்குதலின் வெற்றி தென்தமிழீழப் போருக்கு உத்வேகம் கொடுக்கும் என்ற உணர்வு மேலோங்கியது.

தாக்குதல் தொடங்கியது. சியாமணி மின்னலாய்ப் பாய்ந்தான். எங்கும் ஒரே முழக்கம். வெற்றியின் ஆரவாரம். முகாம் தகர்ந்தது. தமிழ்த்தாய் தன்னைக் கைநீட்டி அழைப்பது, சியாமணியின் கண்களுக்குத் தெரிகிறது. தாயின்மடியில் அவன் நிரந்தரத் தூக்கத்துக்குத் தயாராகிவிட்டான். சியாமணியைத் தூக்கி என் தோளில் சுமந்து கொண்டு.....

**லெப். ஈழவேந்தன் - அமிர்**
(கந்தசாமி விமலேந்திரன்)
கனகராயன்குளம், வவுனியா.

கிராமியத்துக்குரிய மிடுக்கு. தோற்றம் அனைத்தும் நிறைந்தவன் ஈழவேந்தன். ஈழவேந்தனால் அவன் பிறந்த கனகராயன்குளம் புனிதமடைகிறது. அவனால் அவன் பிறந்த மண்ணுக்குப் பெருமை; அந்த மண்ணில் பிறந்ததால் அவனுக்குப் பெருமை; ஒரு வீரப் புதல்வனைப் பெற்றதால் அவன் பெற்றோர்க்குப் பெருமை.

மணலாற்றுக் காட்டின் போர்ப் பாசறையில் போர்க்கலை பயின்ற ஈழவேந்தனுக்கு வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சிப் பிரதேசங்களில் களமுனைகள் கிடைத்தன.

பொறுமையும், பொறுப்பும், செயல்திறனும் இவனிடம் குறைவின்றி இருந்தன. கோபத்தை அடக்கியாளும் வல்லமையும் அதிகமுடைய இவனது முகத்தில், இனம்புரியாத சோகமொன்று என்றும் இழையோடிக் கிடக்கும். யாரிடமும் அதைச் சொல்லிப் பகிர்ந்துகொண்டதில்லை.

ஈழவேந்தன் சென்ற போர்க்களங்கள் பலவாக இருந்தாலும், வெற்றியைக் குவித்த களங்கள் சிலவுண்டு. அவற்றுள் குறிப்பிடத் தக்கவை:-

1991 ஆம் ஆண்டு மாசித் திங்கள் முல்லைத் தீவு இராணுவ முகாமின் முன்னணிக் காவலரண்களைத் தாக்கியழித்து, பன்னிரண்டு எஃப்.என்.சி., மூன்று மினிமினி எல்.எம்.ஜி. துப்பாக்கிகள் உள்ளிட்ட ஆயுதங்களைக் கைப்பற்றியமை.

1992 ஆம் ஆண்டு ஐப்பசித் திங்களில், முல்லைத் தீவு இராணுவ முகாமின் முக்கிய காப்பரண்களைத் தாக்கி, 50 கலிபர் துப்பாக்கி உள்ளிட்ட பல ஆயுதங்களைக் கைப்பற்றியமை.

மாங்குளம் முகாம் தகர்ப்பு.



மணலாற்றில், தலைவனின் காலடியில் பயிற்சிபெறும் வாய்ப்புக் கிட்டியபோதே, மணலாற்றின் முக்கியத்துவம் இவன் நெஞ்சில் பதிந்து கொண்டது. 'இதயபூமி -1' தாக்குதல் நடவடிக்கைக்கு, வன்னியில் இருந்து புறப்பட்ட அணியில் இடம்பெற்றபோதே மணலாற்றுப் பயிற்சிக்கால நினைவுகள் அவன் மனதில் நிழலாடத் தொடங்கின அன்று மனதில் ஏற்பட்ட மகிழ்ச்சியால், தன்மனதில் உறைந்து கிடந்த சோகத்தையும் வாய்விட்டுக் கூறினான்.

"வீட்டில சரியான கஸ்ரம் மச்சான். இந்தச் சண்டையில பெரிய சாதனையை நிலை நாட்டோணும். உயிரோட திரும்பி வந்தால், வீட்டுக் கஸ்ரத்தைச் சொல்லி, வீட்ட ஒரு நடவை போய்ப் பார்த்து, உதவி செய்துவிட்டு வாறன்" என்று சொல்லி, வீட்டு நினைவுற்றி மனம் விட்டுப் பேசினான். அவன் சொல்லியபடி சண்டையில் சாதனை நிலை நாட்டினான் ஆனால் வீட்டுக்குப் போகுமுன் நாட்டுக்காய் விடைபெற்றுக்கொண்டான்....!

**லெப். வாசன் - தமிழ்வாணன்**
(செல்லையா வேதா)
கோயில்போரதீவு, மட்டக்களப்பு

தென்தமிழீழத்தில், கோயில் போரதீவு கிராமத்தில் பிறந்தவன் வாசன். இராணுவத்திற்கு அஞ்சி காடுகளில் வாழ்ந்தது - பள்ளிக்குச் செல்ல [illegible] படிப்புக்கு [illegible] தது [illegible] வெட்டுக்கு [illegible] இளைஞர்கள் இராணுவ [illegible] களில் துாங்கிய [illegible] எலும்புக்கூடுகள் [illegible] நடந்த பாலியல் [illegible] எல்லாம் [illegible] மறக்க முடியும்? இராணுவ [illegible] அழிக்க வேண்டும் [illegible] விட, அவர்களது [illegible] வெட்ட வேண்டும் [illegible] தலை துடிப்பதை [illegible] வேண்டும் -என்ற ஆத்திர [illegible] னுள் நாளுக்கு நாள் [illegible] தபோதே களத்துக்கு வந்தவன்.

மணலாற்றுப் போர் வாழ்வில் தென்தமிழீழத்தில் நடக்கும் இராணுவ வெறியாட்டம் பற்றியே அடிக்கடி கதைத்துக்கொண்டிருப்பான். குழந்தைத்தனமான குறும்



புகள் இவனிடம் இல்லாமலில்லை. பிறந்த மண்ணில் சுதந்திரமாக செய்ய முடியாத குறும்புகளை தன்னை நேசித்த தோழர்களோடு செய்ய நினைத்ததில் தவறில்லை. குறும்புத்தனம் இவனிடம் இருந்தாலும் சண்டையில் இராணுவத்தைச் சுட்டுக் குவிக்க வேண்டும், சுடுவது மட்டுமல்ல வெட்ட வேண்டும் என்ற வன்மமும் தலைவெடுத்துவிடும்.

கனரக ஆயுதம் வைத்து அடிபட வேண்டுமெனத் தளபதியிடம் வேண்டி, ஏ.கே. எல்.எம்.ஜி. துப்பாக்கி பெற்றுக்கொண்டான். இறுக்கமான கட்டுக்கோப்பும் - வலிமையும் வன்மமும் -இத்துப்பாக்கி வைத்திருக்கும் தகுதியை, இவனுக்குக் கொடுத்தன.

சண்டைக்குச் செல்லத் தயாராகும்போது, கூரிய தன் கத்தியை உறைக்குள் முதலில் போட்டுக் கொள்வான். "என்ன மச்சான் கத்தியை கவனமாகச் செருகிறாய்" என்று கேட்டால்,

"கண்ணுக்கு முன்னால எத்தனை தலையை ஆமி வெட்டியிருக்கிறான். துடிக்கத் துடிக்க வெட்டிய நாய்களை சும்மா விடக்கூடாதுதான" என்று பதில் சொல்வான்.

'இதயபூமி-1' தாக்குதலுக்கு அணியுடன் சென்றபோது [illegible] இராணுவம் போட்டு நடந்து சென்ற காட்சி.....

இறுதி இரத்தத் துப்பாக்கியை அணைத்தபடி, மலர்ந்த முகத்தோடு செந்நீரால் வீரகாவியம் எழுதி விழிமூடிக் கிடந்த காட்சி.....!

**லெப். குயிலன்**
(சிவப்பிரகாசம் சாந்தகுமார்)
நுணாவில் தெற்கு, யாழ்ப்பாணம்.

யாழ். மண்ணிலிருந்து மணலாற்றுக்கு வந்தபோது மணலாற்றுக் காடுகளும், பறவைகளும் குயிலனுக்குப் புதிய அனுபவங்களாயின. இலகுவான வாழ்க்கை முறையிலிருந்து கடினமான வாழ்க்கை முறைக்கு அடியெடுத்து வைக்கும்போது

தொடர்ச்சி 13ம் பக்கம்.....

# உள்நாட்டுப் போர் வெடிக்கும் அபா...
# கம்போடியாவின் துயர்கதை தொடர்க...

உலகில் எத்தகைய மாற்றங்கள் நிகழ்ந்தாலும் -அமைதிக்காக எவ்வளவு முயற்சிகள் எடுக்கப்பட்டாலும் -விடிவை நோக்கி நகர முடியாத தென் ஆபிரிக்க கறுப்பின மக்கள் போல -வாடும் நிலையிலே உள்ள இன்னுமொரு மக்கள் தொகுதியாக கம்போடிய மக்கள் இன்றிருக்கிறார்கள். பல்லாண்டுகளாக தாய்லாந்தின் ஏதிலி (அகதி) முகாம்களில் தங்கிய பின், அமைதி வரும் என்ற நம்பிக்கையில் தாயகம் திரும்பிய மக்கள், மீண்டும் இன்று கம்போடியாவிலே ஏதிலி (அகதி) முகாம் வாழ்க்கையைத் தொடர வேண்டிய நிலை. நெல் விதைக்கப்பட்டது போல் பரவிக்கிடக்கும் நிலக்கண்ணிகளை ஐ. நா. முழுமையாக அகற்றாததின் காரணமாக, மாதத்திற்கு சராசரி 700 பேர் முடமாகும் அவலநிலை இன்றும் அங்கு நிலவுகின்றது. இதற்கிடையில் அமெரிக்காவினாலும் ஐ. நாவினாலும் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட இரு முடிவுகள், கம்போடிய மக்களின் துயர நிலைக்கு முற்றுப்புள்ளி இப்போதைக்கு இல்லை என்பதை தெளிவுபடுத்திவிட்டன. கடந்த 18 மாதத்திற்கு மேலாக தனது 22 ஆயிரம் ஆளணியினர் மூலமாக 'உன்ராக்' (UNTAC) எனப்படும் கம்போடிய இடைக்கால நிர்வாகத்திற்கு பொறுப்பாகச் செயற்பட்ட ஐ.நா., புரட்டாதி -ஐப்பசி மாதங்களுக்கிடையில் கம்போடியாவிலிருந்து விலகுவதற்கு முடிவுசெய்து விட்டது. அதே சமயம் அமெரிக்காவோ பெரும் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டமை, உடன்பாட்டை மீறி தேர்தலில் பங்குபற்றாமை, காரணமாக பொல்பொட்டின் கைமர்ரூச் போராளிக் குழு கம்போடியாவின் புதிய சனநாயக அரசியலிலோ அல்லது படையிலோ எவ்விதத்திலும் பங்குபற்றக் கூடாது என்றும், அவ்வாறு அவர்கள் சேர்க்கப்பட்டால், தனது கம்போடியாவிற்கான உதவிகள் யாவும் நிறுத்தப்படும் எனக் கடுமையாக எச்சரித்துள்ளது. இவ்விரண்டு முடிவுகளும் மீண்டும் கம்போடிய எதிர்காலத்தைக் கேள்விக்குறியாக்கிவிட்டன.

ஏனெனில் அண்மையில் தான், கம்போடிய அமைதி பற்றி நம்பிக்கை முளை விட்டிருந்தது. உலகிலே இதுவரை என்றுமே மேற்கொள்ளாத ஒரு பாரிய அமைதி முயற்சியை ஐ. நா. கம்போடியாவிலே மேற்கொண்டிருந்தது. வைகாசி மாத இறுதி வாக்கில்தான் அங்கு மிகப்புதுமையான தேர்தலொன்றை ஐ. நா. நடாத்தி முடித்திருந்தது. இரண்டு பில்லியன் (200கோடி) அமெரிக்க டொலர் செலவில் நடாத்தப்பட்ட இத்தேர்தலில், தானே வாக்காளர்களை பதிவு செய்து, அடையாள அட்டைகளை வழங்கி -வாக்குகளை எண்ணி -தேர்தல் முடிவினையும் அறிவித்திருந்தது. 120 பேரைக் கொண்ட நாடாளுமன்றத்திற்கான தேர்தலை நடாத்தி முடித்த பின், புதிய அரசியல் யாப்பொன்றை கம்போடியாவிற்கு உருவாக்க வேண்டும் என்பதே இலக்கு. ஆயினும், தேர்தல் முடிவுகள் எவருக்கும் அறுதிப் பெரும்பான்மையை அங்கு வழங்காததால், ஒருவித குழப்ப நிலை அங்கு தோன்றியுள்ளது. கைமர்ரூச் அணியினர் தேர்தலுக்கு எதிர்ப்புக் காட்டிய போதும் வாக்களிக்க தகமை பெற்ற மக்களில், (42இலட்சம் பேரில்) 80 வீதத்திற்கும் மேலாக வாக்களித்தனர். 17 இற்கும் மேற்பட்ட கட்சிகள் போட்டியிட்ட போதும், தற்போதைய கம்போடிய பிரதமர் கூன்சென்னின் (Hunsen) கம்போடிய மக்கள் கட்சிக்கும் இளவரசர் நரோத்தம் நணரிச்சின் (சிகானுக்கின் மூத்த மகன் ) புன்சிபெக் (Funcipec) கட்சிக்கும் இடையே கடும் போட்டி நிலவியது. முன்னாள் பொதுவுடமைவாதிகளின் கம்போடிய மக்கள் கட்சியே வெற்றிபெறும் என்கின்ற எதிர்பார்ப்பிற்கு மாறாக, புன்சி பெக் 58 இடங்களையும், (45.3 வீத வாக்குகளையும் ) கம்போடிய மக்கள் கட்சி 51 இடங்களையும் (38.7 வீத வாக்குகளையும் ) பெற்றுக்கொண்டன. இதைத் தொடர்ந்து பெரும் குழப்பங்களும் இழுபறிகளும் நிலவின. கடைசியில் நரோத்தம் சிகானுக்கின் முயற்சியால் இரு கட்சிகளும் இணைந்து ஒரு அரசை அமைப்பது என்றும், தேர்தலைப் புறக்கணித்த கைமர்ரூச் போராளி அணியோடு பேச்சு வார்த்தைகள் நடத்தி, அவர்களையும் அரசிலும், படையிலும் சேர்ப்பதென்றும் முடிவாகியது. இதன்படி கைமர்ரூச் அணித்தலைவர் கியு சம்பென் அண்மையில் மீண்டும் பினாம்பென் வந்து பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தார். இது ஒரு பெரும் திருப்பமாகவே கம்போடிய அரசியலில் கருதப்பட்டது. ஏனெனில், கருத்தொருமைப்பாடு என்பது கம்போடிய வரலாற்றிலேயே காணப்படாதது. கைமர் மொழியிலே இக்கருத்தைக் குறிக்கும் சொல்லே இல்லை எனப் பொதுவாகக் கூறப்படுவதுண்டு. ஆயினும் யதார்த்த நிலைமைகள் பகைமை உணர்வுகளை மழுங்கடித்தன. ஏனென்றால், கம்போடியாவின் செல்வ நிலையோ மிகமோசம். கம்போடிய அரச ஊழியர்களுக்கு -இராணுவத்தினருக்கு வேதனம் வழங்கவே பணம் இல்லை. நாட்டின் எல்லாக் கட்டமைப்புகளும் சீரழிந்துவிட்டன. நிர்வாகம் இல்லை. எல்லாவற்றிற்கும் வெளிநாட்டு உதவி மிக அவசியம். எனவே இந்த நிர்ப்பந்தம் எல்லாத் தரப்பினரையும் சமரசத்திற்குத் தள்ளியது. அதைவிட, கம்போடிய மக்கள் கட்சி எவ்வளவுதான் இளவரசர் நணரிச் எதிர்த்தாலும், நூற்றிஐம்பது ஆயிரம் இராணுவத்தினர் அந்த கட்சியின் கட்டுப்பாட்டிலேயே இருக்கின்ற உண்மை ஒருபுறம். அதைவிட நாட்டின் 15 வீத நிலப்பகுதியை தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் கைமர்ரூச் அணியுடன் இணக்கத்திற்கு வராவிட்டால், மீண்டும் பெரும் உள் நாட்டுப் போர் மூளும் என்கிற பயம் மறுபுறம். இவை காரணமாக கம்போடியாவில் தற்காலிக அமைதி நிலவும் சூழல் தோன்றியது.

50 வருட கால அரசியல் அனுபவமுள்ள 70 வயதான நரோத்தம் சிகானுக் ஒரு விசித்திர மனிதர். அவரது நீண்ட கால வரலாறு எவருக்கும் திகைப்பையே ஊட்டும். ஆனால், இன்று இவரே கம்போடிய குழப்ப நிலைக்கு தீர்வு காணக் கூடிய, எல்லாத்தரப்பினராலும் ஏற்கப்படக்கூடிய, ஒரு தலைவராகக் கருதப்படுகின்றார். கம்போடிய அரச பரம்பரையினரான இவர், பிரான்சு 1941 ஆம் ஆண்டுகளில் கம்போடியாவை அடிமைப்படுத்திய போது, வெறும் பொம்மை அரசாக செயற்பட்டவர். பின் 1970 இல், அமெரிக்க ஆதரவுடன் நடந்த சதிப்புரட்சியின் போது கைமர்ரூச்சின் உதவியால் உயிர் தப்பினார். பின் 1975 அளவில், பொல்பொட் அணியினர் பதவிக்கு வந்த போது சிலகாலம் பெயரளவில் தலைமைப் பதவியை வகித்தார். பின் பொல்பொட் அணியோடும் முரண்பட்டார். அவர்களால் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டார் . 1978 இல், வியட்னாம், கம்போடியா மீது படையெடுத்த போது, சீனா சென்று, கைமர்ரூச்சின் உதவியோடு கம்போடிய-வியட்நாம் ஆதரவு அரசுக்கு எதிராகச் செயற்பட்டார். இன்று அவரால் உருவாக்கப்பட்ட புன்சிபெக் கட்சியே வெற்றி பெறும் நிலையிலுள்ளது. இவரது குடும்பம் பெரியது. ஆறு தடவை மணம் முடித்தவர். பெரும் தொகை வாரிசுகள். இவரது குடும்ப வரலாறே கம்போடிய சிக்கலின் தன்மையை விளக்கும். இவரது சில புதல்வர்கள் கைமர் அணியினரால் கொல்லப்பட்டனர். ஒரு மகன் கைமர்ரூச் அணியோடு சேர்ந்துள்ளார். ஒரு மகனான நரோத்தம் சக்கரபோவ் கம்போடிய மக்கள்

**பாலகுமாரன்**

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

கட்சியில் உள்ளார். இன்னொரு மகனான நணரிச், புன்சிபெக் கட்சித் தலைவர். இவ்விரண்டு மகன்களுக்கும் இடையே கடும் பகைமை. இவ்வாறாக குடும்ப பிளவுகளையும், கம்போடியப் பிளவுகளையும் ஒருங்கே சமாளித்து வந்த இளவரசருக்கு, இப்போதைய அமெரிக்க எச்சரிக்கை பெரும் தலையிடியாக மட்டுமன்றி, பெருத்த சினத்தையும் ஊட்டிய போதும், வெளிநாட்டு உதவி இல்லாமல் எதுவுமே செய்ய முடியாது என்கின்ற தனது இயலாமையை ஒப்புக்கொண்டு, கைமர்ரூச்சோடான தனது பேச்சுவார்த்தையை இவர் அண்மையில் முறித்துக் கொண்டார்.

அண்மைக்காலமாக மறந்திருந்த தனது மனிதாபிமானத்தை -கம்போடியாவில் 1975 -1978 ஆம் ஆண்டிற்கு இடையில், 10 இலட்சத்திற்கும் (சிலர்15 இலட்சம் என்பர்) மேற்பட்ட கம்போடியரை படுகொலை செய்து, கம்போடியாவைக் கொலைக்களமாக்கிய கைமர்ரூச் அணியினரை உலக அரங்கில் இருந்து ஒதுக்குவதன் மூலம், மீண்டும் வெளிப்படுத்த இன்று அமெரிக்கா முயலலாம். ஆனால், உலகம் ஞாபக மறதி உள்ளது அல்ல. இந்த அமெரிக்கா அன்று கம்போடியாவில் நிகழ்த்திய அழிவுகள் -சோவியத் வியட்நாம் முகாமிற்கு எதிராக கைமர் அணியை வளர்த்த விதம் - அமெரிக்க சுயரூபத்தை தெளிவாக்கும். அமைதியாக நடுநிலை பேணிய கம்போடியா மீது, தனது இராட்சத B-52 விமானங்கள் தொன் கணக்கில் குண்டுமாரி பொழிந்து, கம்போடிய மக்களைக் கொன்றொழித்ததை யாரும் மறந்துவிட முடியுமா என்ன? அமெரிக்காவின் இந்த அட்டூழியங்களை சாட்டாக வைத்தே, பொது உடைமை வேடம் பூண்டு பொல்பொட் 1975 அளவில் பதவிக்கு வர முடிந்தது. பொல்பொட்டை ஆதரித்த வியட்நாம், இவர்களது அட்டகாசம் தாங்க முடியாமல் 1978 ஆம் ஆண்டில் படையெடுத்த போது, அமெரிக்க மனிதாபிமானம், வேறொரு முகத்தைக் காட்டியது.

வியட்நாம் படையெடுப்பின் பின்னர், கைமர்ரூச் பக்கம் அமெரிக்க ஆதரவு பொங்கி வழிந்தது. பொல்பொட் அணியினரை தென் தாய்லாந்தில் இராணுவப் பாதுகாப்போடு தங்க வைத்து, சீனாவுக்கு அறிவுறுத்தல்கள் கொடுத்து, வியட்னாமோடு மோதவைத்து -பொல்பொட் அணிக்கு மிகத்தரமான ஆயுத உதவிகள் செய்து, மீண்டும் கைமர்ரூச் அணிக்கு புத்துயிர் ஊட்டியதும் இதே அமெரிக்கா தான். அது மட்டுமன்றி, 1981 ஆம் ஆண்டளவில் இளவரசர் சிகானுக் தலைமையில் மூன்று போராளிக் குழுக்களை ஒன்றாக்கி, கம்போடிய விடுதலை முன்னணி என அணி ஒன்றை உருவாக்கி, பொல்பொட்டின் கொலை வெறித் தோற்றத்திற்கு சனநாயகம், விடுதலை எனப் பூச்சுப்பூசவும் அமெரிக்காவே பிரதான காரணம். பின்னர் பனிப்போர் நெருக்கடிகள் தளர்வடைய, 1989 ஆம் ஆண்டளவில் வியட்நாமியர் வெளியேறினர். இதைத் தொடர்ந்து தலையீடுகளை நிறுத்தி, ஐ. நா விற்கு [illegible] 'ஆசியான்' நாடுகள், சீனா, அவுத்திரேலியா, பிரான்சு போன்ற நாடுகளை முன்னிறுத்தி, சனநாயக கம்போடியாவை உருவாக்க எடுத்த முயற்சிகளிலும் அமெரிக்கா கணிசமான பங்காற்றியது. இதன் விளைவாக 1991 ஆம் ஆண்டு, பாரிசு உடன்பாட்டில் கைச்சாத்திட்டதின் மூலம், மீண்டும் உலக அரசியல் அங்கீகாரத்தை கைமர்ரூச் அணியினர் பெற்றுக்கொண்டனர். அதுமட்டுமன்றி, ஐ. நா. இன் மனித உரிமை ஆணைக்குழு கைமர் அணி மீது குற்றம் சாட்டிய இனப் படுகொலை குற்றச்சாட்டிலிருந்து இவர்கள் விடுவிக்கப்பட்ட அதிசயமும் நடந்தது.

இன்று நடப்பது என்ன? கைமர்ரூச் அணியினரே உடன்பாட்டின்படி தேர்தலில் பங்குபற்றவும் இல்லை. ஒரு ட... (ஆயுதம்) தாறுமா... ஒப்படைக்கவுமில்லை. பழைய நண்பர்கள் கைவிடுவர் என்பதை? திருந்த இவர்கள், நிலவிய இல் இ... காலத்தில் தமது கட்டுப்... பகுதிகளை விரிவாக்கி, ஒரு சீரான நிர்வாக முறை உருவாக்கி முழுக் கம்போடியாவிலும் இவர்கள் பகுதியில் ... டுமே ஒழுங்கான நிர்வாகம் இருப்பதாகக் கூறப்படுகின்றது. தாய்லாந்து இராணுவத்தோடு கூட்டுச்சேர்ந்து ஐ. நாவின் பொருண்மியத் (பொருளாதாரம்) தடையையும் மீறி, பாரிய இரத்தினக்கல், மர வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளது. இடைக்கிடை ஐ. நா. படைகளைச் சீண்டி, இதுவரை எட்டுப்பேரைக் கொன்றுவிட்டது. அதே சமயம் புற உலக அழுத்தத்தை உணர்ந்து, கம்போடிய மக்கள் மனநிலையையும் புரிந்து, புதிய கம்போடிய அரசோடு நல்லுறவைப் பேணும் இராசதந்திர முயற்சியிலும் ஈடுபட்டு, தனது அரசியல் விவேகத்தையும், வெளிக்காட்டியது. ஆனால், பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து நடாத்த அமெரிக்கா தடைவிதித்ததால், மீண்டும் அங்கே மோதல்கள் ஆரம்பித்துவிட்டன.

தற்போதைய நிலையில் தனது கட்டுப்பாட்டுப் பகுதிகளை வைத்துக்கொண்டு ஐ. நா. படை வெளியேறத் தொடங்கியதை சாதகமாக வைத்து, கைமர் அணி தனது தாக்குதல்களை மேலும் அதிகரிக்கும் என்று நம்பப்படுகிறது. எனவே இத்தகைய நிலையில், மீண்டும் ஒரு உள்நாட்டுப்போருக்கு முதலீடு செய்ய நாடுகள் முன்வருமா? சிகானுக் என்ன செய்யப் போகிறார். எவ்வாறு இனி கம்போடிய அமைதி ஏற்படும்? இவையெல்லாம் இப்போதைக்கு வினாக்களாகவே இருக்கும். ஆனால், 25 வருடங்களுக்கு மேலாக துயரிலே ஆழ்ந்திருக்கும் கம்போடிய மக்களுக்கு இப்போதைக்கு விடிவு இல்லை என்பதும், கம்போடியர் துயரம் என்பதே ஒரு தொடர்கதை தான் என்பதும் மட்டும், உறுதியாகத் தெரிகின்றன. ■

நன்றி-ஈழநாதம்

## கல்வி வளர்ச்சிக் கழகம் மாங்குளத்தில் திறப்பு

மாங்குளம் தச்சடம்பன் கிராம மக்களினால், தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறை, மாணவரமைப்பு ஆகியோரின் ஒத்துழைப்புடன் அண்மையில் மாங்குளத்தில் 'அறிவொளி கல்வி வளர்ச்சிக் கழகம்' என்ற பெயருடன் கல்வி வளர்ச்சிக் கழகம் திறந்து வைக்கப்பட்டது. இந்நிலையத்தில் தமிழீழத் தேசியக் கொடியை தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் திரு. கரிகாலன் ஏற்றி வைத்தார். மங்கள விளக்கினை முல்லை மாவட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. தணிகாசலம், பொருண்மிய மேம்பாட்டு நிறுவன வன்னி மாவட்ட இணைப்பாளர் திரு. இரகுநாதன் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

பெயர்ப் பலகையை வன்னி மாவட்ட மகளிர் அமைப்புத் துணைப் பொறுப்பாளர் செல்வி அன்பரசி திரைநீக்கம் செய்தார். இந்நிலையத்தில் பல பொதுமக்களும் கலந்து கொண்டனர். ■

சிறீலங்கா கடற்படை

## இந்திய மீனவரைச் சுடுவதற்குக் கண்டனம்

சிறீலங்கா கடற்படையினர் இந்தியக் கடற்பரப்பில் வைத்து இந்திய மீனவர்களை சுட்டுக் கொல்வதைக் கண்டித்து நாகபட்டினத்தில் 60 மீனவ கிராமங்களைச் சேர்ந்த மீனவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இச்சம்பவத்தில் இந்திய பொலிசார் தலையிட்டு நடாத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் இரண்டு மீனவர்கள் கொல்லப்பட்டனர். ■

# உள்நாட்டுப் போர் வெடிக்கும் அபாயம்: கம்போடியாவின் துயர்கதை தொடர்கிறது

உலகில் எத்தகைய மாற்றங்கள் நிகழ்ந்தாலும் -அமைதிக்காக எவ்வளவு முயற்சிகள் எடுக்கப்பட்டாலும் -விடிவை நோக்கி நகர முடியாத தென் ஆபிரிக்க கறுப்பின மக்கள் போல -வாடும் நிலையிலே உள்ள இன்னுமொரு மக்கள் தொகுதியாக கம்போடிய மக்கள் இன்றிருக்கிறார்கள். பல்லாண்டுகளாக தாய்லாந்தின் ஏதிலி (அகதி) முகாம்களில் தங்கிய பின், அமைதி வரும் என்ற நம்பிக்கையில் தாயகம் திரும்பிய மக்கள், மீண்டும் இன்று கம்போடியாவிலே ஏதிலி (அகதி) முகாம் வாழ்க்கையைத் தொடர வேண்டிய நிலை. நெல் விதைக்கப்பட்டது போல் பரவிக்கிடக்கும் நிலக்கண்ணிகளை ஐ. நா. முழுமையாக அகற்றாததின் காரணமாக, மாதத்திற்கு சராசரி 700 பேர் முடமாகும் அவலநிலை இன்றும் அங்கு நிலவுகின்றது. இதற்கிடையில் அமெரிக்காவினாலும் ஐ. நாவினாலும் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட இரு முடிவுகள், கம்போடிய மக்களின் துயர நிலைக்கு முற்றுப்புள்ளி இப்போதைக்கு இல்லை என்பதை தெளிவுபடுத்திவிட்டன. கடந்த 18 மாதத்திற்கு மேலாக தனது 22 ஆயிரம் ஆளணியினர் மூலமாக 'உன்ராக்' (UNTAC) எனப்படும் கம்போடிய இடைக்கால நிர்வாகத்திற்கு பொறுப்பாகச் செயற்பட்ட ஐ.நா. புரட்டாதி -ஐப்பசி மாதங்களுக்கிடையில் கம்போடியாவிலிருந்து விலகுவதற்கு முடிவுசெய்து விட்டது. அதே சமயம் அமெரிக்காவோ பெரும் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டமை, உடன்பாட்டை மீறி தேர்தலில் பங்குபற்றாமை, காரணமாக பொல்பொட்டின் கைமர் ரூச் போராளிக் குழு கம்போடியாவின் புதிய சனநாயக அரசியலிலோ அல்லது படையிலோ எவ்விதத்திலும் பங்குபற்றக் கூடாது என்றும், அவ்வாறு அவர்கள் சேர்க்கப்பட்டால், தனது கம்போடியாவிற்கான உதவிகள் யாவும் நிறுத்தப்படும் எனக் கடுமையாக எச்சரித்துள்ளது. இவ்விரண்டு முடிவுகளும் மீண்டும் கம்போடிய எதிர்காலத்தைக் கேள்விக்குறியாக்கிவிட்டன.

ஏனெனில் அண்மையில் தான், கம்போடிய அமைதி பற்றி நம்பிக்கை முளை விட்டிருந்தது. உலகிலே இதுவரை என்றுமே மேற்கொள்ளாத ஒரு பாரிய அமைதி முயற்சியை ஐ. நா. கம்போடியாவிலே மேற்கொண்டிருந்தது. வைகாசி மாத இறுதி வாக்கில்தான் அங்கு மிகப்புதுமையான தேர்தலொன்றை ஐ. நா. நடாத்தி முடித்திருந்தது. இரண்டு பில்லியன் (200கோடி) அமெரிக்க டொலர் செலவில் நடாத்தப்பட்ட இத்தேர்தலில், தானே வாக்காளர்களை பதிவு செய்து, அடையாள அட்டைகளை வழங்கி -வாக்குகளை எண்ணி -தேர்தல் முடிவினையும் அறிவித்திருந்தது. 120 பேரைக் கொண்ட நாடாளுமன்றத்திற்கான தேர்தலை நடாத்தி முடிந்த பின், புதிய அரசியல் யாப்பொன்றை கம்போடியாவிற்கு உருவாக்க வேண்டும் என்பதே இலக்கு. ஆயினும், தேர்தல் முடிவுகள் எவருக்கும் அறுதிப் பெரும்பான்மையை அங்கு வழங்காததால், ஒருவித குழப்ப நிலை அங்கு தோன்றியுள்ளது. கைமர்ரூச் அணியினர் தேர்தலுக்கு எதிர்ப்புக் காட்டிய போதும் வாக்களிக்க தகமை பெற்ற மக்களில், (42இலட்சம் பேரில்) 80 வீதத்திற்கும் மேலாக வாக்களித்தனர். 17 இற்கும் மேற்பட்ட கட்சிகள் போட்டியிட்ட போதும், தற்போதைய கம்போடிய பிரதமர் கூன்சென்னின் (Hunsen) கம்போடிய மக்கள் கட்சிக்கும் இளவரசர் நரோத்தம் நணரிச்சின் (சிகாணுக்கின் மூத்த மகன் ) புன்சிபெக் (Funcipec) கட்சிக்கும் இடையே கடும் போட்டி நிலவியது. முன்னாள் பொதுவுடைமைவாதிகளின் கம்போடிய மக்கள் கட்சியே வெற்றிபெறும் என்கின்ற எதிர்பார்ப்பிற்கு மாறாக, புன்சி பெக் 58 இடங்களையும், (45.3 வீத வாக்குகளையும் ) கம்போடிய மக்கள் கட்சி 51 இடங்களையும் (38.7 வீத வாக்குகளையும் ) பெற்றுக்கொண்டன. இதைத் தொடர்ந்து பெரும் குழப்பங்களும் இழுபறிகளும் நிலவின. கடைசியில் நரோத்தம் சிகாணுக்கின் முயற்சியால் இரு கட்சிகளும் இணைந்து ஒரு அரசை அமைப்பது என்றும், தேர்தலைப் புறக்கணித்த கைமர்ரூச் போராளி அணியோடு பேச்சு வார்த்தைகள் நடத்தி, அவர்களையும் அரசிலும், படையிலும் சேர்ப்பதென்றும் முடிவாகியது. இதன்படி கைமர்ரூச் அணித்தலைவர் கியு சம்பென் அண்மையில் மீண்டும் பினாம்பென் வந்து பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தார். இது ஒரு பெரும் திருப்பமாகவே கம்போடிய அரசியலில் கருதப்பட்டது. ஏனெனில், கருத்தொருமைப்பாடு என்பது கம்போடிய வரலாற்றிலேயே காணப்படாதது. கைமர் மொழியிலே இக்கருத்தைக் குறிக்கும் சொல்லே இல்லை எனப் பொதுவாகக் கூறப்படுவதுண்டு. ஆயினும் யதார்த்த நிலைமைகள் பகைமை உணர்வுகளை மழுங்கடித்தன. ஏனென்றால், கம்போடியாவின் செல்வ நிலையோ மிகமோசம். கம்போடிய அரச ஊழியர்களுக்கு -இராணுவத்தினருக்கு வேதனம் வழங்கவே பணம் இல்லை. நாட்டின் எல்லாக் கட்டமைப்புகளும் சீரழிந்துவிட்டன. நிர்வாகம் இல்லை. எல்லாவற்றிற்கும் வெளிநாட்டு உதவி மிக அவசியம். எனவே இந்த நிர்ப்பந்தம் எல்லாத் தரப்பினரையும் சமரசத்திற்குத் தள்ளியது. அதைவிட, கம்போடிய மக்கள் கட்சி எவ்வளவுதான் இளவரசர் நணரிச் எதிர்த்தாலும், நூற்றிஐம்பது ஆயிரம் இராணுவத்தினர் அந்த கட்சியின் கட்டுப்பாட்டிலேயே இருக்கின்ற உண்மை ஒருபுறம். அதைவிட நாட்டின் 15 வீத நிலப்பகுதியை தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் கைமர்ரூச் அணியுடன் இணக்கத்திற்கு வராவிட்டால், மீண்டும் பெரும் உள் நாட்டுப் போர் மூளும் என்கிற பயம் மறுபுறம். இவை காரணமாக கம்போடியாவில் தற்காலிக அமைதி நிலவும் சூழல் தோன்றியது.

50 வருட கால அரசியல் அனுபவமுள்ள 70 வயதான நரோத்தம் சிகாணுக் ஒரு விசித்திர மனிதர். அவரது நீண்ட கால வரலாறு எவருக்கும் திகைப்பையே ஊட்டும். ஆனால், இன்று இவரே கம்போடிய குழப்ப நிலைக்கு தீர்வு காணக் கூடிய, எல்லாத்தரப்பினராலும் ஏற்கப்படக்கூடிய, ஒரு தலைவராகக் கருதப்படுகின்றார். கம்போடிய அரச பரம்பரையினரான இவர், பிரான்சு 1941 ஆம் ஆண்டுகளில் கம்போடியாவை அடிமைப்படுத்திய போது, வெறும் பொம்மை அரசாக செயற்பட்டவர். பின் 1970 இல், அமெரிக்க ஆதரவுடன் நடந்த சதிப்புரட்சியின் போது கைமர்ரூச்சின் உதவியால் உயிர் தப்பினார். பின் 1975 அளவில், பொல்பொட் அணியினர் பதவிக்கு வந்த போது சிலகாலம் பெயரளவில் தலைமைப் பதவியை வகித்தார். பின் பொல்பொட் அணியோடும் முரண்பட்டார். அவர்களால் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டார். 1978 இல், வியட்னாம், கம்போடியா மீது படையெடுத்த போது, சீனா சென்று, கைமர் ரூச்சின் உதவியோடு கம்போடிய-வியட்நாம் ஆதரவு அரசுக்கு எதிராகச் செயற்பட்டார். இன்று அவரால் உருவாக்கப்பட்ட புன்சிபெக் கட்சியே வெற்றி பெறும் நிலையிலுள்ளது. இவரது குடும்பம் பெரியது. ஆறு தடவை மணம் முடித்தவர். பெரும் தொகை வாரிசுகள். இவரது குடும்ப வரலாறே கம்போடிய சிக்கலின் தன்மையை விளக்கும். இவரது சில புதல்வர்கள் கைமர் அணியினரால் கொல்லப்பட்டனர். ஒரு மகன் கைமர்ரூச் அணியோடு சேர்ந்துள்ளார். ஒரு மகனான நரோத்தம் சக்கரபோங் கம்போடிய மக்கள்

**பாலகுமாரன்**

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

கட்சியில் [illegible] மகனான நணரிச், புன்சிபெக் கட்சித் தலைவர். இவ்விரண்டு மகன்களுக்கும் இடையே கடும் பகைமை. இவ்வாறாக குடும்ப பிளவுகளையும், கம்போடியப் பிளவுகளையும் ஒருங்கே சமாளித்து வந்த இளவரசருக்கு, இப்போதைய அமெரிக்க எச்சரிக்கை பெரும் தலையிடியாக மட்டுமன்றி, பெருத்த சினத்தையும் ஊட்டிய போதும், வெளிநாட்டு உதவி இல்லாமல் எதுவுமே செய்ய முடியாது என்கின்ற தனது இயலாமையை ஒப்புக்கொண்டு, கைமர்ரூச்சோடான தனது பேச்சுவார்த்தையை இவர் அண்மையில் முறித்துக் கொண்டார்.

அண்மைக்காலமாக மறந்திருந்த தனது மனிதாபிமானத்தை -கம்போடியாவில் 1975 -1978 ஆம் ஆண்டிற்கு இடையில், 10 இலட்சத்திற்கும் (சிலர்15 இலட்சம் என்பர்) மேற்பட்ட கம்போடியரை படுகொலை செய்து, கம்போடியாவைக் கொலைக்களமாக்கிய கைமர்ரூச் அணியினரை உலக அரங்கில் இருந்து ஒதுக்குவதன் மூலம், மீண்டும் வெளிப்படுத்த இன்று அமெரிக்கா முயலலாம். ஆனால், உலகம் ஞாபக மறதி உள்ளது அல்ல. இந்த அமெரிக்கா அன்று கம்போடியாவில் நிகழ்த்திய அழிவுகள் -சோவியத் வியட்நாம் முகாமிற்கு எதிராக கைமர் அணியை வளர்த்த விதம் -அமெரிக்க சுயரூபத்தை தெளிவாக்கும். அமைதியாக நடுநிலை பேணிய கம்போடியா மீது, தனது இராட்சத B-52 விமானங்கள் தொன் கணக்கில் குண்டுமாரி பொழிந்து, கம்போடிய மக்களைக் கொன்றொழித்ததை யாரும் மறந்துவிட முடியுமா என்ன? அமெரிக்காவின் இந்த அட்டூழியங்களை சாட்டாக வைத்தே, பொது உடைமை வேடம் பூண்டு பொல்பொட் 1975 அளவில் பதவிக்கு வர முடிந்தது. பொல்பொட்டை ஆதரித்த வியட்நாம், இவர்களது அட்டகாசம் தாங்க முடியாமல் 1978 ஆம் ஆண்டில் படையெடுத்த போது, அமெரிக்க மனிதாபிமானம், வேறொரு முகத்தைக் காட்டியது.

வியட்நாம் படையெடுப்பின் பின்னர், கைமர்ரூச் பக்கம் அமெரிக்க ஆதரவு பொங்கி வழிந்தது. பொல்பொட் அணியினரை தென் தாய்லாந்தில் இராணுவப் பாதுகாப்போடு தங்க வைத்து, சீனாவுக்கு அறிவுறுத்தல்கள் கொடுத்து, வியட்னாமோடு மோதவைத்து -பொல்பொட் அணிக்கு மிகத்தாராளமான ஆயுத உதவிகள் செய்து, மீண்டும் கைமர்ரூச் அணிக்கு புத்துயிர் ஊட்டியதும் இதே அமெரிக்கா தான். அது மட்டுமன்றி, 1981 ஆம் ஆண்டளவில் இளவரசர் சிகாணுக் தலைமையில் மூன்று போராளிக் குழுக்களை ஒன்றாக்கி, கம்போடிய விடுதலை முன்னணி என அணி ஒன்றை உருவாக்கி, பொல்பொட்டின் கொலை வெறித் தோற்றத்திற்கு சனநாயகம், விடுதலை எனப் பூச்சுப்பூசவும் அமெரிக்காவே பிரதான காரணம். பின்னர் பனிப்போர் நெருக்கடிகள் தளர்வடைய, 1989 ஆம் ஆண்டளவில் வியட்நாமியர் வெளியேறினர். இதைத் தொடர்ந்து தலையீடுகளை நிறுத்தி, ஐ நா [illegible] கள், சீனா, அவுத்திரேலியா, பிரான்சு போன்ற நாடுகளை முன்னிறுத்தி, சனநாயக கம்போடியாவை உருவாக்க எடுத்த முயற்சிகளிலும் அமெரிக்கா கணிசமான பங்காற்றியது. இதன் விளைவாக 1991 ஆம் ஆண்டு, பாரிஸ் உடன்பாட்டில் கைச்சாத்திட்டதின் மூலம், மீண்டும் உலக அரசியல் அங்கீகாரத்தை கைமர்ரூச் அணியினர் பெற்றுக்கொண்டனர். அதுமட்டுமன்றி, ஐ.நா.வின் மனித உரிமை ஆணைக்குழு கைமர் அணி மீது குற்றம் சாட்டிய இனப் படுகொலை குற்றச்சாட்டிலிருந்து இவர்கள் விடுவிக்கப்பட்ட அதிசயமும் நடந்தது.

இன்று நடப்பது என்ன? கைமர்ரூச் அணியினரே உடன்பாட்டின் படி தேர்தலில் பங்குபற்றவும் இல்லை. ஒரு படைக்கலத்தைத் (ஆயுதம்) தானும் ஐ.நாவிடம் ஒப்படைக்கவுமில்லை. தனது பழைய நண்பர்கள் தன்னைக் கைவிடுவர் என்பதை உணர்ந்திருந்த இவர்கள், அமைதி நிலவிய இவ் இடைப்பட்ட காலத்தில் தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளை விரிவாக்கி, அங்கு ஒரு சீரான நிர்வாக முறையை உருவாக்கி முழுக் கம்போடியாவிலும் இவர்கள் பகுதியில் மட்டுமே ஒழுங்கான நிர்வாகம் இருப்பதாகக் கூறப்படுகின்றது. தாய்லாந்து இராணுவத்தோடு கூட்டுச்சேர்ந்து ஐ.நாவின் பொருண்மியத் (பொருளாதாரத்) தடையையும் மீறி, பாரிய இரத்தினக்கல், மர வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளது. இடைக்கிடை ஐ.நா. படைகளைச் சீண்டி, இதுவரை எட்டுப்பேரைக் கொன்றுவிட்டது. அதே சமயம் புற உலக அழுத்தத்தை உணர்ந்து, கம்போடிய மக்கள் மனநிலையையும் புரிந்து, புதிய கம்போடிய அரசோடு நல்லுறவைப் பேணும் இராசதந்திர முயற்சியிலும் ஈடுபட்டு, தனது அரசியல் விவேகத்தையும், வெளிக்காட்டியது. ஆனால், பேச்சு வார்த்தைகளைத் தொடர்ந்து நடாத்த அமெரிக்கா தடைவிதித்ததால், மீண்டும் அங்கே மோதல்கள் ஆரம்பித்துவிட்டன.

தற்போதைய நிலையில் தனது கட்டுப்பாட்டுப் பகுதிகளை [illegible] ஐ.நா. படை வெளியேற்றத் தொடர்ச்சிகளை சாதகமாக வைத்து கைமர் அணி தனது தாக்குதல்களை மேலும் அதிகரிக்கும் என்று நம்பப்படுகிறது. எனவே இத்தகைய நிலையில், மீண்டும் ஒரு உள்நாட்டுப்போருக்கு முதலீடு செய்ய நாடுகள் முன்வருமா? சிகாணுக் என்ன செய்யப் போகிறார். எவ்வாறு இனி கம்போடிய அமைதி ஏற்படும்? இவையெல்லாம் இப்போதைக்கு வினாக்களாகவே இருக்கும். ஆனால், 25 வருடங்களுக்கு மேலாக துயரிலே ஆழ்த்திருக்கும் கம்போடிய மக்களுக்கு இப்போதைக்கு விடிவு இல்லை என்பதும், கம்போடியர் துயரம் என்பது ஒரு தொடர்கதை தான் என்பதும் மட்டும், உறுதியாகத் தெரிகின்றன. ■

நன்றி ஈழநாதம்

## கல்வி வளர்ச்சிக் கழகம் மாங்குளத்தில் திறப்பு

மாங்குளம் நச்சடம்பன் கிராம மக்களினால், தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறை, மாணவரமைப்பு ஆகியோரின் ஒத்துழைப்புடன் அண்மையில் மாங்குளத்தில் 'அறிவொளி கல்வி வளர்ச்சிக் கழகம்' என்ற பெயருடன் கல்வி வளர்ச்சிக் கழகம் திறந்து வைக்கப்பட்டது. இந்நிலையத்தில் தமிழீழத் தேசியக் கொடியை தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் திரு. கரிகாலன் ஏற்றி வைத்தார். மங்கள விளக்கினை முல்லை மாவட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. தணிகாசலம், பொருண்மிய மேம்பாட்டு நிறுவன வன்னி மாவட்ட இணைப்பாளர் திரு. இரகுநாதன் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

பெயர்ப் பலகையை வன்னி மாவட்ட மகளிர் அமைப்புத் துணைப் பொறுப்பாளர் செல்வி அன்பரசி திரைநீக்கம் செய்தார். இந்நிலையத்தில் பல பொதுமக்கள் கலந்து கொண்டனர். ■

சிறீலங்கா கடற்படை

## இந்திய மீனவரைச் சுடுவதற்குக் கண்டனம்

சிறீலங்கா கடற்படையினர் இந்தியக் கடற்பரப்பில் வைத்து இந்திய மீனவர்களை சுட்டுக் கொல்வதைக் கண்டித்து நாகபட்டினத்தில் 60 மீனவ கிராமங்களைச் சேர்ந்த மீனவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இச்சம்பவத்தில் இந்திய பொலிசார் தலையிட்டு நடாத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் இரண்டு மீனவர்கள் கொல்லப்பட்டனர். ■

# பத்தாண்டுப் போர்

## ஒரு நோக்கு

பதுங்கித்தாக்குதல் ஒன்றின் மூலம், பதின்மூன்று இராணுவத்தினரைக் கொன்று தொடங்கிய பத்தாண்டுப் போர் வரலாறு, எழுபது இராணுவத்தினரைக் கொன்ற ஒரு இராணுவ முகாம் தகர்ப்புடன் முடிவடைந்துள்ளது.

இப் பத்தாண்டுப் போரின் தொடக்கமும் முடிவும், இவை இரண்டிற்கும் இடையில் நடந்த தேசிய போராட்டச் சம்பவங்களும், தமிழர்படையணியின் படிமுறைவளர்ச்சியையும், சிங்களப் படையின் இயலாமையையும் தெளிவாகக் காட்டுகின்றன.

சிறீலங்காப் படை உயர்பீடத்தின் அறிக்கையின்படி 'ஈழப்போர் 1' இல் சிங்களப் படை 797 ஆட்களை இழந்திருந்தது 1479 பேர் காயமடைந்திருந்தனர். இதே காலப்பகுதியில் புலிகள் இயக்கத்தின் உத்தியோகபூர்வ அறிக்கையின்படி, 680 புலிவீரர்கள் வீரச்சாவடைந்தனர். இதே காலப் பகுதியில், பெருந்தொகையான தமிழ் மக்கள் படுகொலைசெய்யப்பட்டிருந்தனர். 'இனக்கலவரங்கள்' என்ற பெயரில் 1977, 1981, 1983 ஆகிய ஆண்டுகளில் இலங்கைத்தீவு முழுவதும் நடந்த தமிழ் இனப் [illegible]

[illegible] கூறமுடியாதுள்ளது. ஆயினும் அது 12,000 இற்கும் அதிகமானது என்று கருதப்படுகின்றது. அதேவேளை பல்லாயிரம் தமிழர்கள் காணாமல் போயுள்ளனர். அமெரிக்காவில் இருந்தபடி இயங்கும் 'ஏசியா வோச்' என்ற மனித உரிமைக் கழகம், இவ்விதம் காணாமல் போனோர் 40,000 என அறிவித்துள்ளது. இவர்களில் பெரும்பான்மையினர் தென் தமிழீழத்தை, அதுவும் குறிப்பாக மட்டக்களப்பு, அம்பாறைப் பிராந்தியங்களைச் சேர்ந்தோர் ஆவர்.

[illegible]



அதேவேளை, இந்தப் பத்தாண்டுப் போர் ஈழத்தமிழர் வாழ்வில் ஏற்படுத்திய வேதனைகளும் இழப்புக்களும் ஒரு துயரகாவியமாகவே உள்ளன. எனினும் தனியாசொன்றை அமைப்பது தொடர்பான தமிழீழ மக்களின் இலட்சியக்கனவு வெறும் கனவல்ல அது ஒரு நடைமுறை உண்மை என நிரூபிக்கும் வகையிலேயே இந்தப் பத்தாண்டுகளும் அமைந்திருந்தன. இதில் இந்தியப் படைகளின் வருகையும், அதன் ஆக்கிரமிப்புச் செயல்களுக்கெதிரான புலிகளின் போரும், [illegible] இடத்தை வகிக்கின்றன.

இந்தப் பத்து ஆண்டுப் போரை மூன்று கட்டங்களாக வகுத்து, அதன் விளைவுகளைத் தெரிந்துகொள்ள முனைவது, போரின் பரிமாணத்தை அறியப் பெரிதும் உதவும்.

தமிழீழ விடுதலைக்கான ஆயுதப் போராட்டம் ஆரம்பித்த காலத்திலிருந்து, 1987 ஆடி 29 இந்திய-சிறீலங்கா ஒப்பந்தத்தின் பிரகாரம், இந்தியப் படைகள் தமிழீழம் வந்தது வரையான காலப் பகுதியை 'ஈழப்போர் -1' என அழைப்பர்.

1987 ஐப்பசி 10 ஆம் திகதி தொடக்கம், இந்தியப் படைகள் தமிழீழ மண்ணைவிட்டு வெளியேறும் வரை 1990 பங்குனி (24) நடந்த இந்திய ஆக்கிரமிப்புக்கெதிரான போரை இந்திய-புலிகள் போர் என அழைப்பர்.

இந்தியப் படைகளின் முழுமையான வெளியேற்றத்தின்பின், மீண்டும் 1990 ஆனி 10 ஆம் திகதி சிங்களப்படைகளுடன் தொடங்கி இன்றும் தொடர்ந்து நடைபெறும் போரை, 'ஈழப்போர் -2' என அழைப்பர்.

[illegible] படுகொலைகளாலும், தமிழீழத்தில் நடந்த இராணுவ அட்டூழியங்களாலும் ஏறக்குறைய 30,000 தமிழர்கள் பலியாகியுள்ளனர்.

இந்தப் பத்தாண்டுப் போர்க்காலத்தில் மட்டுமல்ல, சிங்களவர்களின் கைகளிற்கு என்று இலங்கைத்தீவின் ஆட்சி கைமாறி [illegible]

> கூப்பிய கரங்களுடன் வானத்தை அண்ணாந்து பார்த்து நின்ற தமிழினத்தைப் பார்த்து, "போர் என்றால் போர்; சமாதானம் என்றால் சமாதானம்" என்று அன்றைய சிங்களத் தேசத்தின் அதிபதி ஜெயவர்த்தனா முழங்கினார். 16 ஆண்டுகளின் பின் இன்று, அதே வார்த்தைகளை அதே அரசிற்கு எதிராக அச்சமின்றி முழங்கும் சக்தியுடன் தமிழினம் இருக்கின்றது. இந்த மகா சக்தியை பிரபாகரன் என்ற பெருந்தலைவன் தமிழினத்திற்குப் பெற்றுக்கொடுத்துள்ளார்.

இந்திய ஆக்கிரமிப்புக்கெதிரான போரில் 1165 சிப்பாய்கள் கொல்லப்பட்டுள்ளனர். 1300 பேர் காயமடைந்துள்ளனர் என இந்திய அரசின் உத்தியோகபூர்வ அறிக்கைகள் கூறுகின்றன. இதே காலப்பகுதியில் 673 புலிகள் வீரச்சாவடைந்துள்ளனர் என, புலிகள் இயக்கத்தின் செய்திக் குறிப்புக்கள் கூறுகின்றன. அதேவேளை, இக்காலப்பகுதியில் 6000 இற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் இந்தியப் படையினரால் கொல்லப்பட்டனர்.

'ஈழப்போர் 2' இல் இதுவரை ஏறக்குறைய 5000 சிங்களப்படையினர் பலியாகியுள்ளனர். [illegible] ஏறக்குறைய 3500 புலிவீரர்கள் வீரச்சாவடைந்துள்ளனர். அதேவேளை இக்காலப்பகுதியில் கொல்லப்பட்ட தமிழ் மக்களது சரியான எண்ணிக்கை [illegible]

[illegible]



தமிழீழ விடுதலைப் புலிகளால் தகர்க்கப்பட்ட இந்திய ஆக்கிரமிப்புப் படையின் தாங்கி

[illegible]

தொடர்ச்சி 15ம் பக்கம்



"புலிகள் பிரமிக்கத்தக்க நுட்பத்துடன் தாக்கி, ஐந்துகோடி ரூபா பெறுமதியான ஆயுதங்களை எடுத்துச் சென்றுவிட்டனர்".

# மண்கிண்டி
# மண் கவ்விய

## □ சிங்களதேசத்துப் பத்

- வெட்கத்துக்குரிய நாள்
  (Day of Shame)
- விழித்தெழு!
  (Wake up)
- ஜானகபுரவில் பின்னடைவு
  (Setback at Janakapura)
- எது பிழையாகிப் போனது?
  (What went wrong?)
- ஜானகபுரவில் இருந்து சாம்பல்கள்
  (Ashes from Janakapura)
- வேட்டைக்காரர்கள் இப்போது வேட்டையாடப்படுகின்றார்கள்
  (Hunters now hunted)
- ஜானகபுரவின் அவல நாள்
  (Janakapura's Day of the Jackal)

மண்கிண்டிமலை முகாம் வீழ்ச்சியை, மேற்குறித்த தலையங்கங்கள் மூலம் சிறீலங்காவின் ஆங்கிலச் செய்தித்தாள்கள் மதிப்பீடுசெய்துள்ளன. (மண்கிண்டிமலை என்ற பழந்தமிழ்க் கிராமத்திற்கு 'ஜானகபுர' என்ற பெயரைச் சூட்டிய சிங்கள அரசு, அங்கே சிங்களவர்களைக் குடியமர்த்தியுள்ளது.)

வெற்றிகரமாக முடிவடைந்த இந்த மண்கிண்டிமலை முகாம் தகர்ப்பானது தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படுத்திய வெற்றிக் களிப்பையும் -நம்பிக்கைகளையும்விட, சிங்கள தேசத்தில் அது ஏற்படுத்திய அதிர்ச்சியும் -ஆத்திரமும் -விரக்தியும் மிக அதிகம் என்பதற்கு, மேற்குறித்த தலைப்புக்களில் வெளியிடப்பட்ட எழுத்துக்கள் ஒரு சான்றாக அமைந்துள்ளன.

'வெட்கத்துக்குரிய நாள்' என்ற தலைப்பில், 'சண்டே ரைம்ஸ்' வார இதழ் (01.08.1993) ஆசிரியர் தலையங்கம் எழுதியுள்ளது. மண்கிண்டி முகாம் தகர்க்கப்பட்ட அன்று கொழும்பில், இந்தியாவுக்கும் சிறீலங்காவுக்கும் இடையில் 'கிரிக்கட்' போட்டி நடைபெற்றுக்கொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது. இதைக் கருத்திற்கொண்டபடி அந்த ஆசிரியர் தலையங்கம் இப்படித் தொடர்கின்றது.....

"கடந்த சனிக்கிழமை மட்டுமல்ல, கடந்த வாரம் முழுவதும் உலகெங்குமுள்ள இலட்சக்கணக்கான மக்கள் 'பித்திய ஓட்ட எண்ணிக்கை என்ன' என்று அங்கலாய்த்தபோது, ஜானகபுரவில் நடந்த பயங்கர இழப்பின் 'எண்ணிக்கை என்ன?' என்று அறிய, 'சண்டே ரைம்ஸ்' சிறப்புக்குழு ஒன்றை அங்கே அனுப்பியது"

.....ஏறக்குறைய 500 பேர்கொண்ட புலிகள் அணி, மின்னல் வேகத்தில், பிரமிக்கத்தக்க நுட்பத்துடன் தாக்கி, ஐந்துகோடி ரூபா பெறுமானமுள்ள ஆயுதங்களை எடுத்துச்சென்றுவிட்டது.

.....'கறுப்பு யூலையை' நினைவுகூர புலிகள் தாக்குதல்களை நடாத்துவார்கள் என்று அபாய எச்சரிக்கை செய்யப்பட்டிருந்தும், இந்த முகாமை எப்படிப் புலிகள் சுலபமாகத் தாக்கி அழித்தனர் என்றொரு கேள்வியையும் எழுப்பி, அதற்குப் பின்வருமாறு பதிலும் அளித்துள்ளது.

"அரசியல் உறுதிப்பாடின்மையும், தெளிவற்ற வழிகாட்டல்களும், இராணுவ உயர் தளபதிகள் மத்தியிலுள்ள தனிப்பட்ட அபிலாசைகள் மற்றும் முரண்பாடுகளும், அத்துடன் தேவையான ஆட்பலத்தையும் -அதற்குரிய வளங்களையும் கொடுக்காமல் விட்டதுமான குறைபாடுகள் ஒன்றுசேர்ந்து புலிகளின் வெற்றிக்கு உதவிய அதேவேளை, சிங்களத் தேசத்தின் 'வெட்கத்துக்குரிய தேசிய நாளாக' அன்றைய நாளை மாற்றிவிட்டது."

இதேபோன்று, 'விழித்தெழு!' என்ற தலைப்பில் 'சண்டே ஐலண்ட்' (01.08.1993) ஆசிரியர் தலையங்கம் தீட்டியுள்ளது.

"நாட்டிற்கு வந்துள்ள ஆபத்தைக் கருத்திலெடுக்காது, சிங்களவர்கள் 'கிரிக்கட்டில்' ஆர்வம் காட்டுகின்றனர்" என்று சிங்கள மக்களைச் சபித்தபடி தொடங்கும் இந்த 'சண்டே ஐலண்ட்'.....

".....ஈழம் என்ற ஒன்றைத் தாம்பாளத்தில் வைத்துக்கொடுத்தாலொழிய மற்றெந்தத் தீர்வையும் புலிகள் இயக்கம் ஏற்கமாட்டாது என்பதைத்தான், கடந்த பத்தாண்டுகளில் நடந்த சமாதானப் பேச்சுவார்த்தைகள் எடுத்துக்காட்டுகின்றன" என்ற 'கண்டுபிடிப்பைச்' செய்து, புலிகள் இயக்கம்மீதான தனது சீற்றத்தை வெளிப்படுத்தியுள்ளது. அத்துடன் அரசுக்கு அது சில ஆலோசனைகளையும் வழங்கியுள்ளது.

"..... இப்போது சனாதிபதியே பாதுகாப்பு அமைச்சின் வேலையையும் செய்கின்றார். சனாதிபதிக்கு வேலைப்பளு அதிகம், எனவே இதைவிட்டுவிட்டு சிறீமாவோ பண்டாரநாயக்கா வலியுறுத்தியதுபோல, "பாதுகாப்பு அமைச்சு என்று ஒன்று உருவாக்கப்பட்டு முழுநேரப் பாதுகாப்பு அமைச்சராக ஒரு ஆள் நியமிக்கப்பட வேண்டும். அதற்கு முழுமையான அதிகாரம் வழங்கப்பட்டு அதன்கீழ் ஆயுதப்படைகள் வழிநடாத்தப்பட வேண்டும். அதேவேளை இவர்கள் இணைந்து ஒரு புதிய போர்முறைத் திட்டத்தை வரைய வேண்டும்"..... என்று சொல்லிக்கொடுக்கின்றது.

"எல்லாவற்றையும்விட முக்கியமானது என்னவெனில் சிங்களத் தேசத்தின் அனைத்து நடவடிக்கைகளும் இந்தப் போர்முயற்சியை நோக்கியதாக வழிநடாத்தப்பட வேண்டும்" என்று போருக்கு ஆதரவு தெரிவித்து எழுதி முடித்துள்ளது.

இதேபோல யூலை 27 ஆம் திகதிய 'டெயிலி நியூஸ்' நாளிதழ், 'ஜானகபுரவில் பின்னடைவு' என்ற தனது ஆசிரியர் தலையங்கத்தில் இவ்வாறு குறிப்பிடுகின்றது.....

".....வெலிஓயாப் பகுதியில் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்ட முதலாவது இராணுவ முகாம் இதுதான்...... நன்றாகத் திட்டமிடப்பட்டு வடிவமைக்கப்பட்ட ஒரு தாக்குதல் இது..... இந்த ஆண்டின் மிகமோசமான இழப்பு.

.....இந்தப்போர் நிறுத்தமுடியாத ஒரு கட்டத்திற்குச் சென்றுவிட்டது என்பதுடன் புலிகள் இயக்கத்தின் வீரியம் எந்தவகையிலும் குறைந்துவிடவில்லை என்பதையே இந்த முகாம் தகர்ப்பு நிரூபித்துக் காட்டுகின்றது."

"ஜானகபுரவின் சாம்பலிலிருந்து" என்ற தலைப்பில் 'சண்டே ரைம்ஸ்' (01.08.1993) ஒரு கட்டுரையை எழுதியுள்ளது. அதில் கூறப்பட்டுள்ளதாவது:

".....பாறிலியனகே என்ற ஒரு பிரிகேடியரின் தலைமையிலேயே இப்பகுதி (மணலாறு) படைமுகாம்கள் உள்ளன. (இப்போது இவர் மட்டக்களப்புக்கு இடம்மாற்றப்பட்டுவிட்டார்.) இந்தப் பிரிகேடியர் வெலிஓயா இராணுவ முகாமில் தனது தலைமை அலுவலகத்தை வைத்திருக்கின்றார். தாக்குதல் நடந்த அன்று தனது சொந்த ஊரான குருநாகலுக்கு இரவு விடுமுறையில் சென்றிருந்தார். செய்தியைக் கேள்வியுற்றுத் திரும்பி வந்த இவர் இப்பகுதிப் படை முகாம்களின் பொறுப்பதிகாரிகளை அழைத்துக் கலந்துரையாடி சில தீர்மானங்களை எடுத்தார்.

1. ......தம்மைத்தாமே பாதுகாக்கக்கூடிய குடியேற்றங்கள் அதிகரிக்கப்படவேண்டும். குறிப்பாக, இன்னுமொரு தாக்குதலின்போது புலிகள் பயன்படுத்தலாம் என்று கருதப்படும் பகுதிகளிலுள்ள குடியேற்றங்கள் ஆயுதமயப்படுத்தப்பட வேண்டும்.....

2. ......புலிகளால் தாக்கப்படலாம் என்ற அச்சத்தில் இருக்கும் இரண்டு பகுதிகள் இராணுவத்தால் காவல் காக்கப்படும் அதேவேளை, குறைந்தளவு அபாயமுள்ள மூன்றாவது பகுதி, வேட்டைத்துப்பாக்கி தாங்கிய சிங்கள ஊர்காவல் படையினரால் காவல் காக்கப்படல் வேண்டும்.

ஆனால் சுற்றிவளைந்து நீண்டு செல்லும் இந்த மூன்றாவது பாதையையே புலிகள் விருப்பத்துடன் தேர்ந்தெடுத்து வெற்றியும் பெற்றுச் சென்றார்கள் என்று கட்டுரையாளர் அங்கலாய்த்துள்ளார். மேலும் கட்டுரையாளர் இப்படித் தொடர்கின்றார். "......கடந்த காலத்தில் செய்துவந்தது போல் பரந்தளவிலான பாரிய படை நடவடிக்கைகளை விட, சிறப்புப் பயிற்சிபெற்ற அதிரடிப்படையினரையே காட்டு நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்தவேண்டும்.....

ஜானகபுரவிற்கு அருகில் உள்ள குடியேற்றத்திலிருந்து புஞ்சிபண்டா என்ற ஆளைப் பிடித்துச்சென்ற புலிகள், கிராமத்தின் உள்ளே அமைந்திருக்க இராணுவ தங்குமிடங்களுக்குச் செல்ல புஞ்சிபண்டாவையே வழிகாட்டியாகப் பயன்படுத்தினர்....."

"எது பிழையாகிப் போனது?" என்ற தலைப்பில் 'சண்டே ஐலண்ட்'டில் (01.08.1993) வரையப்பட்ட கட்டுரை இப்படித் தொடர்கின்றது.

சிறீலங்காவின் பாதுகாப்பு வட்டாரத்தை முழுமையாகவே உலுக்கி எடுத்த துணிகரமான இந்த வெற்றித் தாக்குதலுடன், 1983 யூலை வன்செயலின் பத்தாவது ஆண்டைப் புலிகள் நினைவுகூர்ந்துள்ளனர்.

1985 இல் ஜானகபுர குடியேற்றம் அமைக்கப்பட்டது. அதற்கு முன் 1984 ஆம் ஆண்டு அப்பகுதியில் இருந்த தமிழர்களைப் பலவந்தமாக வெளியேற்றிவிட்டு அந்த நிலத்திலேயே ஜானகபுர சிங்களக் குடியேற்றம் அமைக்கப்பட்டது.....என தமிழரின் நிலத்தை அபகரித்த செயலை இக்கட்டுரை ஆசிரியர் பச்சையாக ஒப்புக்கொள்கின்றார்.

.....ஒவ்வொரு ஆடி மாதமும் இரத்தக் களரி நிறைந்ததாகவே இருக்கின்றது என, அதிகாரிகள் கூறுகின்றனர்.

1. 1990 ஆடியில் கொக்காவில் முகாம் அழிப்பு.
2. 1991 ஆடியில் ஆனையிறவுச் சமர்.
3. 1992 ஆடியில் 19 அதிகாரிகளுடன் வைசி கட்டு வீழ்த்தப்பட்டது.
4. 1993 ஆடியில் 70 இற்கு மேற்பட்ட படை பலி.

இந்த முகாமை புலிகள் ஏன் தாக்கி அழிக்கத் தீர்மானித்தார்கள் என்ற கேள்விக்கு இக்கட்டுரையாளர் இப்படிப் பதில் கூறுகின்றார்.....

"...... ஜானகபுர இராணுவ முகாமிலுள்ள படையினர் C. L. I. (Ceylon Light Infantry) எனப்படும் படைப்பிரிவைச் சேர்ந்தோராகும். இந்த C. L. I. படைப்பிரிவைச் சேர்ந்தவர்களில் பதின்மூன்று பேர்தான் 1983 இல் திருநெல்வேலியில் கொல்லப்பட்ட படையினராகும். எனவே அதை நினைவுகூர, அதே படைப்பிரிவு மீது தாக்கப் புலிகள் தீர்மானித்திருக்கலாம்" எனக் கட்டுரையாளர் எழுதுகின்றார்.



புலிகளுக்கு எதிரான சண்டைகளில் ... சித்திரிக்க இத்தொடர்புசாதனங்கள் இ... படைகளுக்கு எதிரான சண்டைகளி...

'ஜானகபுரவின் அவலம்' என்று பொருள் கொள்ளக்கூடிய ஒரு தலைப்பில் 'சண்டே ரைம்ஸ்' இல் வெளிவந்த முகாம் தகர்ப்புக் கட்டுரை, ஒரு மர்மக் கதை போலத் தொடங்குகின்றது.....

மணிக்கூட்டின் இரண்டு கைகளும் பன்னிரண்டில் நின்றபொழுது, காவல் கடமை முடிந்த சிப்பாய்கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தார்கள். அது ஆடி 25 ஞாயிற்றுக்கிழமை அதிகாலை, காவல் கடமையில் இருந்தவர்கள் தமது துப்பாக்கியை இறுகப்பற்றியபடி, தமது காவல் அரண்களிலிருந்து இருளை ஊடறுத்துப் பார்த்துக்கொண்டிருந்தனர். சிலிர்ப்பூட்டும் காற்று மரக்கிளைகளைத்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# …டமலையில்
# … இராணுவம்

## …திரிகைகளின் ஒப்பாரி



நடவிச் செல்லும் அந்தச் சத்தம் மட்டும்தான், அங்கிருந்த அமைதியைக் குலைத்துச் சலசலத்தது.

திடீரென ஆர்.பி.ஜி. மோட்டார்கள் ஏவப்படும் சத்தம் கேட்டது.


ஜானகபுரவிற்கு அருகில் இருந்த கொக்குத்தொடுவாய் மற்றும் கோவில் பொயின்ற் முகாம்கள் ஒரே சமயத்தில் தாக்கப்பட்டன. ஜானகபுரவிலிருந்து தமக்கு உதவிவரும் என, இவர்கள் எதிர்பார்த்துள்ளனர். ஆனால், ஜானகபுரவின் தொலைத்தொடர்பு வேலை செய்யவில்லை.

இதேவேளை, 12 கி.மீ. அப்பாலிருந்த கஜபாகு முகாமுக்குத் தகவல் கொடுக்கப்பட்டது. அதுவும் ஜானகபுரவுடன் தொடர்பு கொண்டது; பதில் இல்லை. ஆனாலும் உடனடியாகவே கொக்குத்தொடுவாய்க்கும், கோவில்பொயின்றுக்கும் உதவிப்படைகள் அனுப்பப்பட்டன.

ஜானகபுர முகாம், கப். லசாந்தா பெரேரா என்ற இராணுவ அதிகாரியின் பொறுப்பிலிருந்தது. சண்டை உக்கிரம் அடைந்த பொழுது இந்தப் பொறுப்பதிகாரி உட்பட மொத்தம் பதினான்கு சிப்பாய்கள் மட்டுமே உயிர்தப்பி ஓடினர்.

அதில் ஒருவர், தாக்குதலின் ஆரம்பக் கட்டத்தை இப்படி விபரிக்கின்றார்....

"ஆர். பி. ஜிகள் அடிக்கப்படும் சத்தம் எங்களுக்குக் கேட்டது. அடுத்த கணம் பெருந்தொகையான புலிகள், முகாமி



…ங்களப் படைகளுக்கு உதவிய …போது புலிகளிடம். இனி, சிங்களப் … இவை புலிகளுக்கு உதவும்.

னுள்ளே காணப்பட்டார்கள்".

இன்னொரு சிப்பாய், இப்படிச் சொல்கின்றார்...

"நாங்கள் முற்றுமுழுதாகவே ஆச்சரியத்தில் மூழ்கிப்போனோம். ஆர். பி. ஜி ஏவப்படும் சத்தங்கள் கேட்டபோது, முன்னணிக் காவலரண்களிலுள்ள சிப்பாய்கள் பதில் தாக்குதலைத் தொடுப்பார்கள் என்று எதிர்பார்த்தோம். ஆனால் எமது முகாமில் இருந்த ஒரு பலவீனமான பாதை வழியே புலிகள் முகாமினுள் நுழைந்து, எங்களைத் திணறடித்து விட்டார்கள். அதன் பின் எமது கூடாரங்களுக்குள்ளேயே துப்பாக்கிச் சத்தங்கள் கேட்கத்தொடங்கின. அப்போது எங்களுடைய சகாக்கள் எல்லாப் பக்கத்தாலும் ஓடிக் கொண்டிருந்தனர்; சிலர் புலிகளால் வேட்டையாடப்பட்டார்கள்."

இன்னுமொரு இராணுவச் சிப்பாய் தெரிவித்தார்......

" ஜானகபுரவிலிருந்து பதுங்கித்தாக்குதலுக்கு என எங்கோ புறப்பட்ட இராணுவத்தின் ஒரு சிறு அணி, இடையில் ஜானகபுரவைத் தாக்கச் சென்ற புலிகளின் அணியைக் கண்டதாம். ஆனால் புலிகளின் அந்த அணி ஆட்தொகையில் அதிகமாக இருந்ததாலும், அவர்களிடம் பாரிய ஆயுதங்கள் இருந்ததாலும் நாம் தாக்கவில்லை; மௌனமாக இருந்துவிட்டோம்" எனக் கூறினார்.

இந்தத் தாக்குதலின் உடனடி விளைவாக, முழுக்குடியேற்ற வாசிகளும் வெளியேறினர். இவர்களைச் சந்தித்து நிலைமையை அறிவதற்காக அரசு ஒரு குழுவை அனுப்பியிருந்தது. ஜெனரல் வணசிங்கா, லெப். ஜெனரல் சிசில் வைத்தியரட்ணா, புனர்வாழ்வு அமைச்சர் பி. தயாரத்ன, மகாவலி அமைச்சர் காமினி அத்துக்கோறளை ஆகியோர் அதில் அடங்கியிருந்தனர்.

"....அரசு எமக்குப் போதிய பாதுகாப்பை வழங்கவில்லை" என இந்த அரச பிரதிநிதிகள் முன்னிலையில் குடியேற்றவாசிகள் அரசைக் குற்றம்சாட்டினர். அதேவேளை, "குடியேற்றவாசிகள் போதுமான அளவுக்கு படையினருடன் ஒத்துழைக்கவில்லை" என்று, ஒரு பிரிகேடியர் கோபத்துடன் கூறினார்.

"....தனது முகாமையே பாதுகாக்க முடியாத இந்த அவலமான கட்டத்துக்கு இராணுவம் எப்படி வந்தது?" என்றொரு கேள்வியை எழுப்பிய இக் கட்டுரையாளர், கொக்காவில், மாங்குளம், கொண்டச்சி, வெற்றிலைக்கேணி, ஜானகபுர என்று பல உதாரணங்களை வடபகுதியில் நிகழும் போர் காட்டியுள்ளது எனப் பெருமூச்சு விட்டுள்ளார்.

..... இராணுவரீதியாக பலவீனமான நிலையிலும் நிதிவிடயத்திலும், படுமோசமான கட்டத்திலும் புலிகள் இயக்கம் இருப்பதாக கொழும்பில் செய்யப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையிலேயே, கைதிகளின் விடுதலை விடயத்தையும் அரசு பிழையாகக் கையாண்டு விட்டது என்று, சிங்களத் தேசத்தை நொந்தும் கொள்கின்றார்.

[illegible] 'சண்டே [illegible]' [illegible] செய்தியில்,

ஜானகபுர முகாம் தாக்கப்படமுன்னரே, புலிகள் அதை நன்றாக வேவு பார்த்துவிட்டார்கள் என்று எழுதியுள்ளது.

".... சிறு வியாபாரிகள் போல நடித்த புலிகளின் வேவு வீரர்கள், தாக்குதல் நடைபெறச் சில வாரங்கள் இருக்கும் போதே ஜானகபுரவிற்கு விஜயம் செய்து தகவல்களைச் சேகரித்தனர். இதன் மூலம்தான், முகாமினுள் நுழைந்தவுடனேயே தொலைத் தொடர்புச் சாதனங்கள் இருக்குமிடத்தை உடனடியாகவே அடைந்து, மற்றைய முகாம்களுடனான தொடர்புகளைத் துண்டித்து வெற்றிக்கு வழி சமைத்தார்கள்...." என்று அது எழுதியுள்ளது.

இதே போன்றுதான், "வேட்டைக்காரர்கள் வேட்டையாடப்பட்டு விட்டார்கள்" என்ற தலைப்பில் 'சண்டே ஐலண்ட்' (01.08.1993) வெளியிட்ட உருவகப் பாணியிலான ஒரு கட்டுரையில் "...படையினர் எங்கெங்கே நித்திரை கொள்கின்றனர் மற்றும் அவர்களின் முதன்மையான தங்குமிடங்களையும், புலிகளின் வேவு வீரர்கள் முன்னரே கண்டறிந்து சென்றனர்...." என்று கூறப்பட்டுள்ளது.

மண்கிண்டிமலை இராணுவ முகாம் வீழ்ச்சி தொடர்பாகப் புலிகளின் இராணுவ வல்லமையையும், படையினரின் இயலாமையையும் இந்தச் செய்தித்தாள்கள் பகிரங்கமாகக் குறிப்பிட்டிருந்தாலும், போரை நிறுத்தி அரசியல் தீர்வு காணுமாறு இந்தச் செய்தித்தாள்கள் அரசுக்குப் புத்திமதி கூறவில்லை. அதற்குப் பதிலாக, புதிய தந்திரோபாயங்கள்-போர்முறைத் திட்டங்களுடன் போரை முழு மூச்சுடன் நடத்த வேண்டுமென்றே வலியுறுத்திக் கூறியுள்ளன. அரசியல்வாதிகள்-இராணுவத் தளபதிகள் மட்டுமல்ல, சிங்கள இனத்தின் செய்தித்தாள் ஆசிரியர்கள், புத்திஜீவிகள் என்று ஒட்டுமொத்தமாக சிங்கள தேசம், தமிழரின் இனப்பிரச்சினைக்குப் போர்மூலம்தான் தீர்வு காணவேண்டுமென்று, சாதாரண சிங்கள மக்களுக்கு போர்வெறி ஊட்டி வருவதையே காணமுடிகின்றது.

சிங்கள தேசத்தின் இப்போர் வெறியை, சர்வதேச சமூகம் இப்போது மெல்ல மெல்லப் புரிந்து வருகின்றது. ■

நன்றி: 'விடுதலைப்புலிகள்'

## மண்கிண்டிமலை இராணுவ முகாமின் மாதிரி அமைப்பு




பிரதான முகாம், குடியேற்றவாசிகளுக்கு மத்தியிலிருந்த மினி முகாம், அவதானிப்பு நிலைய முகாம் (மலை) ஆகிய மூன்று முகாம்களும் தாக்கியழிக்கப்பட்டு சுமார் ஏழு கிலோ மீற்றர் பகுதி புலிவீரர்களினால் கைப்பற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பிரதான முகாமைச் சூழ நான்கு தடுப்புக்களை இராணுவத்தினர் இட்டிருந்தனர். முகாமைச் சூழ கம்பிச் சுருள்களாலான ஒரு தடுப்பும், அதற்கும் உள்ளே சில மீற்றர்கள் தள்ளி இன்னுமொரு கம்பி வேலியும், அதற்கும் உள்ளே சில மீற்றர்கள் தள்ளி நான்கு ஐந்து அடி உயரமுள்ள மண் அணையும் போடப்பட்டிருந்தன. இவை அனைத்தையும் தாண்டியே இப்பிரதான முகாமைப் புலிவீரர்கள் கைப்பற்றினர்.

அதேவேளை, இப்பிரதான முகாமிலிருந்து சுமார் 500 மீற்றர் தொலைவில் இருந்த ஒரு சிறு மலையை (183 அடி) அவதானிப்பு நிலையமாக இராணுவத்தினர் பயன்படுத்திவந்தனர். உயரமான இடத்திலிருந்த அந்த அவதானிப்பு நிலைய முகாமானது, பிரதான முகாமின் சுற்றுச் சூழலை இலகுவாகக் கண்காணிக்கக் கூடியதாக அமைக்கப்பட்டிருந்தது. இதுவும் புலிவீரர்களால் கைப்பற்றப்பட்டு, பின் அழிக்கப்பட்டது.

அதேவேளை, பிரதான முகாமிலிருந்து சற்றுத்தள்ளி அமைக்கப்பட்டிருந்த சிங்களக் குடியேற்றப்பகுதிக்குள் இருந்த ஒரு மினிமுகாமும் புலிவீரர்களால் கைப்பற்றப்பட்டது.

இந்த மூன்று முகாம்களையும் உள்ளடக்கிய மண்கிண்டிமலை முகாம் தனித்திருக்கவில்லை. ஒரு பக்கத்தில் கோட்டைக்கேணி முகாமையும் மறுபக்கத்தில் முந்திரிகைக்குள முகாமையும் கொண்டு பலமாக விளங்கியமை குறிப்பிடத்தக்கது. இத்தகைய பலம்வாய்ந்த ஒரு முகாமைக் கைப்பற்றியே புலிவீரர்கள் ஒரு வீர சாதனையை நிலைநாட்டினர்!

# ஸ்ரீலங்கா தொடுத்த இரண்டாம் போர்



சிறீலங்காவுடன் மீண்டும் போர் வெடித்து மூன்று ஆண்டுகள் முடிந்துவிட்டன. 10-06-90 இல் மீண்டும் போர் வெடித்தமைக்கான காரணங்கள் பலவற்றைச் சுட்டிக் காட்டுவதே, இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சிங்கள, தமிழ் மக்களிடையே இயல்பாக உள்ள நம்பிக்கையின்மை, இணக்கம் காணப்பட்ட விடயங்களை செயல்படுத்தத் தவறியமை, குடியேற்றம், படையம் -காவல்துறையினரின் அத்துமீறல்கள், முஸ்லீம் கொங்கிரசினதும் முஸ்லீம்களினதும் செயற்பாடுகள் ஆகிய பல காரணங்களோடு, விடுதலைப் புலிகளின் தனித்தன்மையை -முதன்மையைக் குறைக்க நடந்த முயற்சிகளும் இக்காரணங்களுள் அடங்கும்.

02-01-89 அன்று பிரேமதாசா சனாதிபதியாகப் பதவியேற்றபோது, இலங்கைத் தீவில் தமிழீழப் பகுதி அவரின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கவில்லை.

தென் இலங்கையில் ஜனதா விமுக்திப் பெரமுன (ஜே. வி. பி.) சிங்கள ஆட்சிக்குப் பெரும் நெருக்கடியைக் கொடுத்துக் கொண்டிருந்தது.

இந்தியப் படை இலங்கையில் இருக்கும்வரை, தான் இலங்கைக்குப் பெயரளவில் மட்டுமே சனாதிபதி என்பதை பிரேமதாசா உணர்ந்திருந்தார். அத்துடன் இந்தியப்படையை இங்கு நீண்ட காலம் இருக்கவிட்டால் இலங்கை, இந்திய ஆதிக்கத்துக்குள் நிரந்தரமாகச் சென்றுவிடும் என்பதையும் உணர்ந்திருந்தார். தனது ஆட்சிக்கு அவர்களால் பெரும் ஆபத்து உண்டு என்பதையும் உணர்ந்திருந்தார்.

இந்தியப் படையை முதலில் திருப்பி அனுப்ப வேண்டுமாயின் ஜனதா விமுக்தி பெரமுனவுடனும், தமிழீழ விடுதலைப் புலிகளுடனும் ஏதாவது இணக்கத்திற்கு வரவேண்டும் என எண்ணியதன் விளைவாக, இருவரையும் பேச்சு வார்த்தைக்கு அழைத்தார்.

13-04-89 இல் சிறீலங்கா அரசு உத்தியோகபூர்வமாக விடுதலைப் புலிகளைப் பேச்சு வார்த்தைக்கு அழைத்தது. நாங்கள் அழைப்பை ஏற்றுக் கொண்டதைத் தொடர்ந்து 04-05-89 அன்று, முதன் முதலாக சனாதிபதி பிரேமதாசாவைச் சந்தித்தோம். அதைத் தொடர்ந்து ஆரம்பமான பேச்சுவார்த்தை 10-06-90 அன்று முறிவடையும் வரை தொடர்ந்தது.

பேச்சுவார்த்தையின் போது பொதுவான சில விடயங்களில் இணக்கம் காணப்பட்டது.

1. மாகாணசபையை இடைக்காலத் தீர்வாக ஏற்று மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுவது; அதில் வெற்றிபெறுபவர்களோடு நிரந்தர தீர்வுத் திட்டம் பற்றிப் பேசுவது.

2. இருக்கும் மாகாணசபையைக் கலைப்பது; ஆறாவது சட்டத் திருத்தத்தை நீக்குவது.

3. தமிழீழத்தில் சிங்களவர் வாழும் பகுதியைத் தவிர்ந்த மற்றைய பகுதிகளில், காவல்துறைக்கு தமிழ் பேசும் மக்களை மட்டும் நியமிப்பது.

4. குடியேற்றத்தை முழுமையாக நிறுத்துவது.

5. படையம் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது. தமிழ் பேசும் காவல்துறையினர் போதியளவில் சேர்க்கப்படும் வரை, புதிதாகக் காவல்துறை நிலையங்கள் திறக்கப்படல் கூடாது.

மாகாணசபையானது, மீண்டும் தமிழீழ -சிறீலங்கா போர் தொடங்கும் வரை கலைக்கப்படவில்லை. 01-03-90 இல் இருந்து வட -கிழக்கு மாகாணசபையானது, ஈழ சனநாயகக் குடியரசின் தேசிய அரசுப் பேரவையாகச் செயற்படும் என வட -கிழக்கு மாகாணசபை பிரகடனப்படுத்தியது. அப்படி அது பிரகடனப்படுத்திய பின்பும் கூட, அதைக் கலைக்க சிறீலங்கா அரசு முயலாமல், ஏன்?.... கலைப்பது கடினம்... என காரணங்களைத் தேடிக்கொண்டிருந்தது. போர் வெடித்த பின், வட -கிழக்கு மாகாணசபை கலைக்கப்பட்டது எல்லோரும் அறிந்தவிடயமாகும்.

ஆறாவது சட்டத்திருத்தம் குறித்து நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கூறப்பட்டபோதும், அது குறித்து எதுவும் செய்யப்படவில்லை. 05-04-90 அன்று நாடாளுமன்றத்தில் பேசிய, சூழல் பாதுகாப்பு நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் திரு.- வின்செந் பெரேரா, ஆறாவது சட்டத் திருத்தம் குறித்து இன்னும் முடிவு இல்லை என அறிவித்தார். (தினபதி 06-04-90). அதை நீக்க முயற்சி எடுக்கப்படவில்லை என்பது மட்டுமல்ல, இச்சிக்கல்கள் குறித்து சிங்கள மக்களுக்குச் சரியான விழிப்புணர்வைத் தரும் நடவடிக்கைகள் எடுக்கப்படவுமில்லை.

1958 ஆம் ஆண்டு இனக்கலவரத்திற்குக் காரணமான சிங்கள சிறீ எழுத்து, ஒரு சாத்திரக்காரன் கூறினான் என்பதற்காக, இரவோடு இரவாக 01-01-90 இல் இருந்து வாகனங்களில் இருந்து எடுக்கப்பட்டதை, இங்கு சுட்டிக் காட்டுதல் அவசியமாகும். ஆறாவது சட்டத் திருத்தத்தை நீக்க மூன்றில் இரண்டு பெரும்பான்மை வேண்டும் எனக் கூறலாம். அதை அரசு பெற வாய்ப்பிருந்தது. அப்படிப் பெறமுடியாமல் போனாலும் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்து அது தோற்கடிக்கப்படுவதையே விரும்புகிறோம் என்றும், அதன் மூலம் பலரை அம்பலப் படுத்தலாம் எனவும் கூறியிருந்தோம் என்பதனையும் இங்கு குறிப்பிடுதல் அவசியமாகும்.

திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் நிறுத்தப்படும் என பல தடவைகள் கூறப்பட்ட போதும், அவை நிறுத்தப்படவில்லை. போர்ச்சூழல் காரணமாக வெளியேறியவர்கள் திரும்ப வருகின்றார்கள் எனக் கூறிக்கொண்டு பெருமளவில் சிங்கள மக்களை அழைத்து வந்து குடியேற்றங்கள் செய்யும் முயற்சி தொடர்ந்தது. இது குறித்து பல தடவைகள் நேரடியாகச் சனாதிபதியின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டபோதும், எமக்குத் தந்த வாக்குறுதி காக்கப்படவில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகளோடு பேசுவதால் மட்டுமே இச்சிக்கலைத் தீர்க்க முடியும் என்பது, சிறீலங்கா அரசுக்குத் தெரியும். எம்மோடு அரசு பேசிய காலத்தில், மற்றைய குழுக்கள் எல்லாம் இந்திய அரசின் கூலிப்பட்டாளங்களாகச் செயற்படுகின்றன என்பதும், சிங்கள அரசுக்குத் தெரியும்.

எம்மைப் பேச்சு வார்த்தைக்கு அழைத்தபோது, நாம் பலவீனமான நிலையில் இருப்போம் என அரசு நினைத்தது. தான் விரும்பியவண்ணம் எம்மைக் கையாளலாம் எனவும் சிங்கள அரசு எண்ணியது. நடைமுறையில் நாம் பலவீனமாக இல்லை என்பதை அறிந்துகொண்டது. தாம் இதுவரை சந்தித்த தமிழ் அரசியல்வாதிகளுக்கும் கூலிப் படைகளுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் உள்ள வேறுபாடுகளையும் புரிந்துகொண்டது.

## யோகி

எங்களுக்குத் தரும் முதன்மையைக் குறைக்க விரும்பியது. எம்மோடு நேரடியாகப் பேசுவதில் இருந்து தப்பமுயன்றது. இதன் மூலம் இனச்சிக்கலுக்கான தீர்வைக் காண்பதில் இருந்து விலக முயன்றது. வழமையான சதுரங்க ஆட்டம்தான். ஆனால் இம்முறை சிங்கள அரசுக்கு எதிராக ஆடியவர்கள் பாண்டவர்கள் இல்லை என்பதை, அரசு புரிந்துகொள்ள, நீண்டகாலம் எடுக்கவில்லை.

இந்தியப்படையை, விடுதலைப் புலிகளுக்கு எதிரான தாக்குதலை நிறுத்தும்படி சிறீலங்கா அரசு 28-06-89 அன்று உத்தியோகபூர்வமாகக் கேட்டபோதும், இந்திய அரசு 20-9-89 வரை தாக்குதலை நிறுத்த இணங்கவில்லை. நாம் முன்பு கூறியது போல் இலங்கை சனாதிபதியின் கட்டுப்பாட்டுக்குள் இந்தியப் படையோ, தமிழீழமோ இருக்கவில்லை என்பதை இந்நிகழ்ச்சி எடுத்துக் காட்டும்.

இந்தியப்படை 20-09-89 இல் விடுதலைப் புலிகளுக்கு எதிராகத் தாக்குதல் நிறுத்தும் என்பதையும், 15-10-89 இல் அம்பாறையில் இருந்து வெளியேறத் தொடங்கும் என்பதையும் ஓரளவு உறுதி செய்துகொண்ட சிங்கள அரசு, தனது அடுத்த கட்ட நகர்வை நகர்த்தியது. தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு கொடுத்துவரும் முதன்மை நிலையைக் குறைப்பதே, அந்நகர்வாகும்.

8-9-89 அன்று, இத்தீவில் உள்ள பல சிக்கல்களைத் தீர்க்க, குறிப்பாக இனச்சிக்கலைத் தீர்க்க 13-9-89 இல் இருந்து சர்வ கட்சி மகாநாடு கூட்டப்படுமென அறிவித்தது. அறிவித்தது மட்டுமல்லாமல் எம்மையும் கலந்துகொள்ளும்படி வலியுறுத்தியது. இவர்களின் நோக்கத்தைப் புரிந்துகொண்ட நாங்கள் அதில் பார்வையாளர்களாக மட்டும் கலந்துகொண்டோம்.

இந்தியப்படை வெளியேறிய பின், தமிழீழப் பகுதியில் எமக்கும் மற்றைய குழுக்களுக்கும் இடையே பெரும் மோதல் வெடிக்கும்; அதைத்தடுக்க ஒரு சமாதானக் குழு அமைக்கவேண்டும் என அரசு கூறியது. அக் குழுவில், மோதலில் ஈடுபடலாம் எனக் கணிப்பிட்டோர் [illegible] தோரும் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். இறுதியாக, எல்லாக் கட்சிகளில் இருந்தும் மூவர் வீதம் கிட்டத்தட்ட 54 பேர் கலந்துகொள்வர் என அறிவிக்கப்பட்டது.

54 பேருக்குள், தமிழீழத்தில் இந்தியப் படையை வெளியேற்ற முழுத் தற்கொடையும் செய்த புலிகளின் சார்பில் மூவர் கலந்துகொள்வர். மிகத் திறமையான நகர்வு. 9-10-89 இல் கூடவிருந்த சமாதானக் குழுவில் நாம் கலந்துகொள்ள மறுத்துவிட்டோம்.

இதேவேளை 22-2-90 அன்று ரஞ்சன் விஜேரத்தினா செய்தியாளர் மகாநாட்டில் (வீரகேசரி -22-2-90) "இந்த நாட்டை ஆயுதங்கள் எதுவுமற்ற நாடாக மாற்ற அரசாங்கம் தீர்மானித்துள்ளது. எனவே மார்ச் முதலாம் திகதிக்கு முன்னர் வட -கிழக்கு உட்பட நாட்டின் சகல பகுதிகளில் இருந்தும் சட்டவிரோத ஆயுதங்களை பாதுகாப்பு) படையினர் கைப்பற்றுவர். இந்த முடிவு குறித்து விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கம் உத்தியோகபூர்வமாக அறிவிக்கும்" எனக் கூறியிருந்தமை, குறிப்பிடத்தக்கதாகும்.

இப்படி அவர் கூறியபோது, வட -கிழக்குத் தவிர்ந்த ஏனைய பகுதிகளில், சட்டத்திற்குப் புறம்பாக ஆயுதங்கள் வைத்திருப்பவர்கள் கைது செய்யப்பட்டுக்கொண்டும் அழிக்கப்பட்டுக் கொண்டும் இருந்தார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும்.

இவ்வறிவித்தல் எதிர்காலத்தில் அரசாங்கம் என்ன செய்ய எண்ணியுள்ளது என்பதை எமக்குத் தெளிவாக எடுத்துக் காட்டியது.

இந்தியப்படை வெளியேறியபின் இந்தியக் கூலிப்பட்டாளமான தமிழ்த் தேசியப் படையின் கை ஓங்கக் கூடாது என்பதில், அரசாங்கம் அக்கறையாக இருந்தது. அதன் கை ஓங்கும் என்பது மறைமுகமாக இந்திய அரசின் ஆட்சி இங்கு தொடர வழிவகுக்கும் என்று, சிறீலங்கா அரசுக்குத் தெரியும்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் தமிழ்த் தேசியப் படைக்கும் இடையே, மோதல் தவிர்க்க முடியாத ஒன்று என்றும், இம் மோதலால் விடுதலைப் புலிகளின் பலம் பெருமளவில் இழக்கப்படும் என்றும் சிறீலங்கா அரசு கணிப்பிட்டது.

அதன் பின் வட - கிழக்கில் ஆயுதக் களைவு என்ற பெயரில் விடுதலைப் புலிகளிடம் இருந்து ஆயுதங்களைக் களையலாம் என சிறீலங்கா அரசு எண்ணியிருந்தது. இது மீண்டும் சிறீலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதலை உருவாக்கும் என்பது, சிறீலங்கா அரசுக்கு நன்றாகத் தெரியும்.

சிறீலங்கா அரசு எம்முடன் நேரடியாகவும், எல்லோருடனும் சர்வகட்சி மகாநாடு என்னும் நாடகம் ஆடிக்கொண்டிருந்த வேளையில், மறைமுகமாக ஈ.பி.ஆர்.எல்.எவ். உடனும் மற்றைய இந்திய சார்புக் குழுக்களுடனும் தொடர்பை வைத்திருந்தது. பிரேமதாசாவுக்கு எப்போதுமே இரண்டு முகங்கள் உண்டு. ஒன்று அன்பைப் போதிக்கும்; மற்றையது அழிவுக்கு தலைமை தாங்கும்.

பேச்சுவார்த்தையின் போதும் அமைதியான முகமான கமீட் எம்முடனும் சர்வகட்சிகளுடனும் பேச, அழிவு முகமான ரஞ்சன் ஈ.பி.ஆர்.எல்.எவ். உடன் பேச்சுவார்த்தை நடத்தி வந்தார். அவர் அவர்களோடு பேசியது மட்டுமல்ல, அக்குழுவில் உள்ளோரை எமக்கு எதிராக எப்படிப் பயன்படுத்தலாம் என்பது குறித்தும் பேசியும், அதற்குச் செயல் வடிவம் கொடுத்தும் வந்தார்.

இதுபற்றி பலமுறை நாம் சனாதிபதியிடம் கூறி எம் திருப்தியின்மையைத் தெரிவித்தபோதும், அவை கருத்தில் கொள்ளப்படவில்லை. இக்கூற்றை அன்று ஏற்க மறுத்த பலர், இன்று நேரடியாக அதைக் காண்கின்றபோது காலம் கடந்து எம் கருத்தை ஏற்கத் தயங்கவில்லை.

15-5-90 இல் ஈ.பி.ஆர்.எல்.எவ். உடன் அரசு பகிரங்கமாகப் பேச முன்வந்தது. அரசு தரப்பில் ரஞ்சனும், பிரட்மன் வீரக்கோனும் பேசினர். கமீட் அவர்கள் எமது அழுத்தம் காரணமாக அதில் கலந்துகொள்ளவில்லை.

நாம் இதைத் தொடர்ந்து, சர்வகட்சி மகாநாட்டில் பார்வையாளர்களாகக் கலந்துகொள்வதில் இருந்து விலகினோம்.

தொடர்ச்சி 12ம் பக்கம் ....

தமிழீழ ஆவணகம் Tamileelam Archive

# சுவடுகள்

## சிறு கதை

**வே.மகரிஷி**

நீண்ட நாட்களின் பின்னர், 'இல்லை' ஒரு சில வருடங்களின் பின்னர் என்று சொல்லலாம். "ராஜன்" தாண்டிக்குளம் தடைமுகாம் பகுதியில் நின்று கொண்டிருந்தான். நேரம் மதியம் இரண்டு மணியை எட்டியிருந்தது. ஏதோ வேலையாகத் தடை முகாம் பகுதிக்கு வந்திருந்த ராஜன் அவ்விடத்தை விட்டகல மனமின்றி அங்கிருந்த கொட்டிலொன்றில் அமர்ந்திருந்து சிந்தனையில் ஆழ்ந்திருந்தான். "மாலைவரை நின்று விட்டுச் செல்வோம்" மனம், தானே எண்ணியதை ஆமோதித்துக் கொள்கின்றது.

வவுனியா நகரில் இருந்து இராணுவத் தடைமுகாமைத் தாண்டி மக்கள் வரத் தொடங்கியிருந்தனர். இளைஞர்கள், யுவதிகள், வயோதிபர், குழந்தைகள்..... வயது, பால் வேறுபாடுகளிற்கு அப்பாற்பட்டு, கைகளில், தோள்களில், தலைகளில் சுமையுடன் பல மைல்தூரம் நடந்து வந்து கொண்டிருந்த மக்கள்..... சுமை அவர்களது தோள்களில் மட்டுமல்ல மனங்களிலும் தான் துன்பச்சுமை. அவனின் மனம் கனத்தது.

பல ஆண்டுகளுக்கு முன்னால்.-.... அவனது மனம் வேகத்தோடு பின்னோக்கிப் பார்த்தது. இதே பாதையால் சொகுசு வாகனங் களில் சொகுசான பயணம். அங்கு நீண்ட தூரப் பயணத்தின் களைப்பில்லை. தோள்களிலோ, மனங்களிலோ சுமையும் இல்லை. ஆனாலும் கால்களில் மாத்திரம் விலங்கு..... ஆம் அடிமை விலங்கு. அது ஓர் இடைக் காலச் சுதந்திரம். ஆம் நீண்டகால அடிமைக்கு அது ஓர் இடைக்காலச் சுதந்திரம்தான். இன்று..... கண்ணெதிரே..... ஆனாலும் எம்மக்கள் இன்னும் இன்னும் உறுதியோடு, நாளைய விடியலின் நம்பிக்கையோடு நடந்து வருவது மட்டும் தெளிவாகப் புரிகின்றது. அவர்களுக்குத் தெளிவாகத் தெரியும், இந்த இடைக்காலத் துன்பத்தின் பின்னால் ஒரு நிலையான சுதந்திரம், அமைதி, நிம்மதியான வாழ்க்கை என்பது - எண்ணும்பொழுது மனம் அமைதியடைந்து கொள்கின்றது.

"என்ன மச்சான் ஆழ்ந்த யோசனை. எந்தக் காம்ப் அடிக்கப் போறாய்." அருகில் வந்த நண்பன் ஆதரவாகத் தோள்களைத் தொட்டான்.

> **"இது கற்பனையில் உதித்ததல்ல. கட்டுக்கதையுமல்ல. சில ஆண்டுகள், மாதங்கள், வாரங்கள் என்று காலம் பல கடந்ததும் அல்ல. நாட்கள்.... ஆம் சில நாட்களுக்கு முன்னால் எங்கள் கண்ணெதிரே.....**

"இல்ல மச்சான் எங்கள் மக்களை நினைத்துக் கொண்டேன். பாவம் இன்னும் எத்தனை நாளைக்குத்தான் இந்தத்துன்பம்" -நிச்சயம் நீண்டநாட்களுக்கில்லை. விரைவில் மிக விரைவில் எம் தேசத்தின் விடிவில் இத்துன்பங்களிலிருந்து விடுதலை" சொல்ல நினைத்தான். ஆனாலும் வார்த்தைகள் அவனுக்கு ஒத்துழைக்கவில்லை. "மச்சான் சனம் எல்லாம் வந்து முடிஞ்சிது. வா போவம். நீ கிளிநொச்சிக்குப் போக வேண்டும் அல்லோ" நிமிர்ந்த ராஜன் "சரி போவோம்" எழுந்து கொள்கின்றான். இருவரும் மெல்ல நடந்து வஸ் நிற்கும் இடத்தை அடைகின்றனர். நின்றிருந்த ஓரிரண்டு வஸ்களில் இடம்பிடித்துக் கொள்வதற்கு மக்கள் முண்டியடித்துக் கொண்டிருந்தனர். இங்கேயும் ஒரு போராட்டம்.

"மச்சான் என்னண்டு இதில போகப் போறாய்? நில்லு வேற வாகனம் வரும் ஏத்திவிடுறன்." கூறிய நண்பனை ஏறிட்ட ராஜன், "இல்ல மச்சான் இவ்வளவு சனங்களும் இதிலதானே போகப் போகுதுகள். நான் நின்று கொண்டெண்டாலும் போறன்" தடுத்த நண்பனையும் பொருட்படுத்தாது வஸ்சில் ஏறிக்கொள்கின்றான் அவன்.

"தம்பி இதில இருங்கோ" அரக்கி இடம் தந்த அப்புவின் அருகில் அப்பாடா என்று அமர்ந்துகொள்கின்றான் ராஜன். அப்புவின் மடியில் இருந்த சின்னக்குழந்தை செல்லத்துடன் அவன் தலையைத் தொட்டு மாமா என்றது மழலை மொழியில். ஆனாலும் அதனை ரசிக்கும் மன நிலையில் அவன் இல்லை. போலியாகப் புன்னகைத்துக் கொண்டான். வஸ்சில் காற்றுப்புக இடமில்லாத சனக்கூட்டம். இருந்தும் மனம் நிறைவடையாத றைவர் அரைமனதுடன் வஸ்சை எடுத்தார். "வழியில் ஏற்றிக்கொள்வோம்" என்று அவர் நினைத்திருக்கக் கூடும். உடைந்த வஸ், ஓடமுடியாத வீதி. இதுவும் வாழ்க்கைப் போராட்டம். சிந்தனையில் ஆழ்ந்தான் ராஜன்.

வஸ் புறப்பட்டு பத்து நிமிடங்கள் சென்றிருக்கும். வாசலில் நின்ற கிளினர் றைவரை நோக்கி, "அண்ணை பொம்பர் சுத்துது. கொஞ்சம் வேகமா ஓடுங்கோ" என்றான். கண்ணாடியைத் திறந்து வானத்தைப் பார்த்தான் ராஜன். இரண்டு பொம்மர்கள் சுற்றியபடி இருந்தன. குண்டுவீச்சுக்கான அறிகுறி. பெருமூச்சுடன் தலையை இழுத்துக்கொள்கின்றான் அவன். சனங்களைத் திரும்பிப் பார்த்த றைவர், "வெளியில பொம்மர் சுத்துது. ஒருவரும் பயப்பிடாதையிங்கோ ஒன்றும் நடக்காது." கூறியபடி வஸ்சின் வேகத்தை அதிகரித்தார். பொம்மர் என்றவுடன் சைற் கண்ணாடிகளால் வானத்தைப் பார்த்த மக்கள் ஆரம்பத்தில் சற்றுப் பதற்றப்பட்டார்கள். எனினும் பின்னர் அதற்கான அறிகுறியே இல்லை. பொம்மர் அடிப்பதொன்றும் எங்கள் மண்ணில் புதிதல்லவே. இது எங்கள் நாளாந்த வாழ்க்கையோடு ஒன்றிப்போய்விட்ட ஒன்று. மக்களும் அதற்குப் பழகிப் போய்விட்டார்கள். அருகில் இருந்த அப்பு அர்த்தத்தோடு அவனைப் பார்த்தார். "தம்பி காலம் எவ்வளவு மாறிப் போட்டுது பார்த்தீரே. முந்தி எண்டால், இப்பொழுது இந்தச் சனங்கள் எத்தனை கடவுளை அழைத்து, எத்தனை நேர்த்தி வைத்து ஒப்பாரி வைக்கத் தொடங்கியிருப்பார்கள்" அப்புவின் ஆழமான, சிந்தனைக்குரிய வார்த்தைகள். புன்னகைத்துக் கொண்டான் அவன். மக்களும் போராட்ட வாழ்க்கைக்குத் தங்களைப் பழக்கப்படுத்திக் கொண்டுவிட்டார்கள். தனக்குள் எண்ணிக் கொள்கின்றான் ராஜன். திடீரென சிந்தனையைக் கலைத்தது அவனது திறந்திருந்த காதுகள். அவனது கவனம் வஸ்சின் நடுப்பகுதிக்கு ஈர்க்கப்பட்டது.

அங்கே மிகுந்த பதற்றத்துடன் காணப்பட்ட ஒரு குடும்பம். தந்தை, தாய், மூன்று இளம் குழந்தைகள். இரண்டு ஆண்கள், ஒரு பெண் பிள்ளை. வயது போய்விடவில்லை. இளங்குடும்பம். ஆனாலும், அவர்களின் மேல் ராஜனின் கவனம் திரும்பியதற்கு காரணம் வேறு. அவர்கள் ஆளுக்காள் அவனுக்குப் புரியாத ஆங்கிலத்தில் புதிராகக் கதைத்துக் கொண்டார்கள். அந்தச் சின்னக்குழந்தைகளும் சரளமாக ஆங்கிலம் பேசியதால் ஆர்வத்துடன் அவர்களை நோக்கினான் ராஜன். அவர்கள் பொம்மர் பயத்தில் கிட்டத்தட்ட அழும் நிலைக்கே வந்துவிட்டார்கள். அவர்களின் அருகில் இருந்த ஒருவர் 'நோபிராப்பிளம், நோபிராபிளம்' என்று தனக்குத் தெரிந்த ஆங்கிலத்தில் அவர்களைச் சமாதானப்படுத்த முயன்றார். அவர்களுக்குத் தமிழ் தெரியாது போல் இருக்கின்றது என்று மனதில் எண்ணிக்கொண்ட ராஜன், தூண்டப்பட்ட ஆர்வத்துடன் அவர்களை ஆராய முற்பட்டான்.

யார் இவர்கள்? கணவன், மனைவியின் உருவத்தில் தமிழ்வாடை அடித்தாலும், உடையோ ஆங்கில நாகரீகமாக இருந்தது. குழந்தைகளின் உடையும், பேச்சும் முற்று முழுதாக ஆங்கிலப் பிள்ளைகளைப் போன்றே இருந்தது. ஆங்கில உச்சரிப்பு சுத்தமான வெள்ளைக்கார ஆங்கிலம். ஆராயும் ஆர்வத்தில் அருகில் இருந்தவரை மெல்லத்தட்டி, "யார் அண்ண இவர்கள்"? என்றான் ராஜன். "தம்பி! இவர்கள் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களாம். நீண்டகாலமாக லண்டனில இருந்து விட்டு இப்பதான் இங்கு வந்திருக்கிறார்களாம்" என்றார் பெரியவர். ஓ என்றபடி அவர்களைப் பார்த்தான் அவன். அவர்களின் பதற்றம் இன்னும் ஓய்ந்தபாடில்லை. நீண்டகாலம் 'லண்டனில் இருந்துபின் வருகின்றார்களா? இவர்களுக்குப் பொம்மரைத் தெரிந்திருக்காதோ! அதுதான் இந்தப் பதற்றம். 'அம்மா இதுதான் எங்களின் நாளாந்த வாழ்க்கையம்மா' மனதிற்குள் கூறியபடி அவர்களை நோக்கினான். அவர்களைப் பற்றி மேலும் அறியும் ஆர்வம் அவனுக்கு. இத்தனை நேரத்தில் வஸ் நீண்டதூரம் வந்துவிட்டதால் அவர்களின் பதற்றம் தணிந்து இயல்பு நிலைக்குத் திரும்பியிருந்தனர். அந்த அரை ஆங்கிலப் பெண்மணி அருகில் இருந்த பெண்களுடன் அளவளாவத் தொடங்கிவிட்டார். அரைகுறைத் தமிழ் ஆங்கிலக் கலப்பு உரையாடலின் நடுவே காதைப் புகுத்திக்கொண்டான் ராஜன். உரையாடலில் நடுவே கணவனுடனும் பிள்ளைகளுடனும் முழுமையான ஆங்கிலத்தில் கதைத்துக் கொள்கின்றாள் அந்தப் பெண்மணி. வஸ்சில் இருந்த அனைவருமே இவர்களையே நோக்கியிருந்தனர்.

"எங்கை இருந்து வாறியள்? எங்கை போறியள்"? அருகில் இருந்த ஒரு பெண்ணின் அடுக்கடுக்கான கேள்விகள். அவளிடம் அறியும் ஆவல் மட்டுமல்ல; அவர்களுடன் கதைப்பதை ஒரு பெருமையாகவும் கருதிக் கொள்ளும் அந்தப் பெண்ணின் அப்பாவித்தனம் புரிகின்றது. "நாங்க லண்டனில் இருந்து வாறம். கலம்பிற்கு வந்து ரு டேயிஸ் தான். ருடேதான் வவுனியா வந்து வாறம். யப்னாவிற்கு போறம்" கூறி முடிக்கின்றாள் அந்தப் பெண்மணி. "நீங்க லண்டனுக்குப் போய் எவ்வளவு காலம்"? அருகில் அமர்ந்திருந்த அடுத்த பெண்ணின் கேள்வி. "ரென் இயேஸ் ஆகிற்றிது. நான் ருவன்ரி பைவ் இயேஸ் ஒல்ட்டா இருக்கேக்குள்ள லண்டனுக்கு போனனான். அப்பவே இவர் அங்கதான் இருந்தவர். இருவரும் ரென் இயேசிற்கு பிறகு இப்பத்தான் சிலோனிற்கு வந்திருக்கிறம்."

"என் பிள்ள, இப்ப யப்னாவிற்கு என்னத்திற்குப் போறியள்?" இடையில் புகுந்தார் அருகில் இருந்த வயதான அப்பு ஒருவர். ராஜன் காதுகளை இன்னும் கூர்மையாக்கிக் கொள்கின்றான். "நான் மம்மியைப் பார்க்கப் போறன். என்ர மம்மியும் டடியும் மட்டும்தான் யப்னாவில் இருக்கினம். இவற்ர சிஸ்ரர் ஒருவர் இருக்கிறார். அதுதான் பாத்திட்டு வருவம் எண்டு போறம்" கூறி முடிக்கிறாள் ஆங்கிலப் பெண்மணி.

"உங்கள் பிள்ளைகள் தமிழ் கதைக்க மாட்டார்களோ? கொஞ்சமும் தெரியாதோ?" ராஜனின் சிந்தனையை கலைத்தது மற்றுமோர் பெண்மணியின் கேள்வி. "ஐயோ இல்லை! அவர்களுக்குக் கொஞ்சமும் தெரியாது. நாங்களும் வீட்டில இங்கிலிசில்தான் கதைக்கிறது. நாங்கள் கதைச்சா பேந்து பிள்ளைகளும் தமிழ் கதைக்கத் தொடங்கிடும்."

தமிழ் பேசுவது என்பதனை அவமானமாகக் கருதும் அந்த ஆங்கில மோகத் தாய் பெருமையுடன் கூறிக் கொள்கின்றாள். "தமிழன் என்று சொல்லடா, தலை நிமிர்ந்து நில்லடா"..... யாரோ ஒரு ஏழைக் கவிஞனின் வரிகளை வேதனையுடன் நினைத்துக் கொண்டான் ராஜன். தாய் நாட்டை மறந்தவர்கள் ஏராளம். தாயை மறந்தவர்களோ ஏராளம் ஏராளம். ஆனாலும் தாய் மொழியை மறந்தவர்களை இன்று தான் அவன் பார்க்கின்றான். தமிழ் பேச வெட்கப்பட்டு மிகவும் கஷ்டப்பட்டுத்தான் மறந்திருப்பார்களோ..... இருக்கும்.

"வட் இஸ் த நேம் ஒவ் திஸ் பிளேஸ் மம்மி?"..... சிந்தனையைக் கலைக்கின்றான் சின்னப்பையன். இவ்வளவு நேரமும் கதையில் சேர்த்துக்கொள்ளாத தந்தையார் குறுக்கிட்டு "கிளிநொச்சி" என்கின்றார். பன்னல் வழியே எட்டிப்பார்த்த ராஜனுக்கு சிரிப்புத்தான் வந்தது. இன்னும் மாங்குளம் வந்திருக்கவில்லை. அது பாவமில்லை. ஏன் 'கிளிநொச்சி' என்றால் என்ன? உங்கள் பிள்ளை அந்த உச்சரிப்பைப் புரிந்து கொண்டுவிடும் என்று பயப்படுகின்றீர்களா? நா கேட்கத் துடித்தது எனினும் நெஞ்சு தடுத்தது.

திடீரெனக் குலுக்கலுடன் நின்று கொண்டது பஸ். என்ன என்பது போல் வெளியில் எட்டிப்பார்த்தான் ராஜன். வஸ் முறிகண்டியில் நின்று கொண்டிருந்தது. நேரம் போனதே தெரியவில்லை. இவ்வளவு தூரம் வந்து விட்டோமா! ராஜன் தனக்குள் ஆச்சரியப்பட்டுக் கொண்டான். சற்று நேர அமைதிக்காகவும், தாக

தொடர்ச்சி 14ம் பக்கம் ....

# தமிழீழ நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைகள் ஆரம்பமாகின

தமிழீழத்தின் முதலாவது மாவட்ட நீதிமன்றம் 21/08/1993 அன்று சுண்ணாகத்தில் திறந்து வைக்கப்பட்டது. இந் நீதிமன்ற திறப்புவிழா நிகழ்ச்சியில், விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள், வெளிநாட்டுச் செய்தியாளர்கள் உட்பட பெருந்திரளான மக்களும் கலந்துகொண்டனர்.

தமிழீழக் காவல்துறையினரின் வாத்திய அணியின் இசை முழங்க, இத்திறப்பு விழா நிகழ்ச்சி இடம்பெற்றது. இத்திறப்பு விழா நிகழ்ச்சியின்போது தமிழீழக் காவல்துறைப் பொறுப்பாளர் திரு. நடேசன் தேசியக் கொடியை ஏற்றிவைத்தார். மங்கள விளக்கை யாழ். மாவட்டத் தளபதி அன்பு ஏற்றிவைத்தார். அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் நாடாவை வெட்டி நீதி மன்றத்தை சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைத்தார்.

நீதிமன்றம் சம்பிரதாய பூர்வமாகத் திறந்துவைக்கப்பட்ட பின்னர் நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பரா விழாவிற்கு வருகை தந்திருந்த விருந்தினர்களை நீதிமன்றத்தினுள் அழைத்துச்சென்றார். இவ்விழாவில் மேலும் அரசியற்துறைத் துணைப் பொறுப்பாளர் கரிகாலன், யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, நிதர்சனம் பொறுப்பாளர் ஜவான், செஞ்சோலைப் பொறுப்பாளர் செல்வி ஜனனி மற்றும் விடுதலைப் புலிகள் உறுப்பினர் பலரும் கலந்து கொண்டனர்.

ஆரம்பிக்கப்பட்ட நீதி மன்றின் நீதியாளர்களான திரு. க. தேசிகன், திரு. ச. பூவேந்தன், திரு. சி. ஒப்பிலான் ஆகியோர் கடமையேற்றுக் கொண்டனர். இதனை அடுத்து வழக்கு விசாரணை ஒன்றின் மூலம் நீதிமன்றின் பணிகள் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டன. ■



## தமிழீழ நீதிமன்றத்தின் முதலாவது வழக்கு தீர்ப்பு

அனுமதியின்றி மதுபானம் உற்பத்தி செய்தமைக்காகவும் விற்பனை செய்தமைக்காவும் கைது செய்யப்பட்ட இருவர் தொடர்பான வழக்கு தமிழீழ காவல்துறையினரால் முதலாவது வழக்காக நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

மேற்படி இரு குற்றவாளிகளும் தங்கள் குற்றங்களை ஒப்புக்கொண்டதையடுத்து தமிழீழ சட்டக் கோவை பிரிவு 14 இன் பிரகாரம் நீதிமன்றினால் தலா ஐந்நூறு ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. மேற்படி தண்டப்பணத்தை கட்டுவதற்கு இவர்கள் தவணை கோரியதையடுத்து, அவர்களுக்கு உரிய கால அவகாசம் வழங்கப்பட்டது.

### பி.பி.சி. செய்தியாளர்

பி.பி.சி.யின் கொழும்பு முகவர் சிவாக்கா நூலோவும் மேற்படி திறப்பு விழா நிகழ்ச்சிகளை பதிவு செய்தலிலும், நீதிமன்ற நடவடிக்கைகளை பதிவு செய்தலிலும் ஈடுபட்டிருந்தார். ■

## சிறீலங்கா தொடு....

எம்மோடு பேசிக் கொண்டு எம்மைச் சர்வ கட்சி மகாநாடு, சமாதானக்குழு என இழுத்து எம்முதன்மையைக் குறைக்கும் செயலில் ஈடுபட்ட அரசு, ஈ.பி.ஆர்.எல்.எவ். உடன் தனியாகப் பேச முயன்றது. இது அவர்களின் உண்மையற்ற போக்கையே காட்டியது.

மாகாணசபையில் ஈ.பி.ஆர்.எல்.எவ். இருந்தபோது, இணங்கியிருந்த அதிகாரப் பரவலாக்கங்களையே செயற்படுத்த மறுத்த அரசு, தற்போது அவர்களுடன் பேசி இனப்பிரச்சினையைத் தீர்க்கப் போவதாக நடித்தது. மாகாணசபை முதல் அமைச்சருக்கு இருக்க கதிரை கூட இல்லை என்று அன்று கேட்ட குரலை, இன்று (93 இல்) மேல் மாகாண சபை முதல்வர் சந்திரிகாவின் குரலில் வேறு வகையில் கேட்கிறோம்.

சர்வகட்சி மகாநாடு, சமாதானக் குழு என்பதெல்லாம் கடத்தல் நாடகமே என்பதை இன்றைய தெரிவுக்குழுவுடன் ஒப்பிட்டுப் பார்த்துப் புரிந்து கொள்ளலாம்.

பேச்சு வார்த்தையின் போது படையம், காவல்துறை ஆகியவற்றின் செயற்பாடுகள் குறித்து மீண்டும் மீண்டும் பேசி பல விடயங்களில் இணக்கம் காணப்பட்டது. முக்கியமாக படையம் ரோந்தில் ஈடுபடுவதில்லை என்பதும், தமிழ் பேசும் மக்கள் வாழும் பகுதிகளில் தமிழ் பேசும் காவல்துறையினரே கடைமை ஆற்ற வேண்டும் என்பதும் அதில் இணக்கம் காணப்பட்ட விடயங்களாகும்.

சிறீலங்கா அரசு, இந்தியப் படையம் வந்தபின்பு தன் படையச் செலவைக் குறைக்கவில்லை. படையத்திற்கு ஆட்சேர்ப்பதையும் நிறுத்தவில்லை.

தமிழீழப் பகுதி, இந்தியப் படை வந்தபின் உங்கள் கட்டுப்பாட்டில் இருக்கவில்லை. 1985 ஆம் ஆண்டில் இருந்து வட தமிழீழத்தில் காவல்துறையினரின் செயற்பாடு இருக்கவில்லை. தமிழ் மக்களுக்கு சிங்கள அரசின் மீது இருக்கும் நம்பிக்கையற்ற தன்மை காரணமாக, அவசரப்பட்டு காவல்துறை நிலையங்கள் திறக்கும் முயற்சியோ, அரச கட்டுப்பாட்டைக் கொண்டுவரும் நிகழ்ச்சியோ செய்ய வேண்டாம் எனப் பலமுறை கேட்டும், செவிடாகிவிட்ட சிங்களப் பேரினவாதத்திற்கு அது கேட்கவில்லை.

காரைநகர் கடற்படை முகாம் விஸ்தரிப்பு ; ஈ.பி.ஆர்.எல்.எவ். கண்டனம் (வீரகேசரி -27-7-89)

முதல்வரின் வேண்டுகோளை அடுத்து அம்பாறைக்கு மேலதிக இராணுவம் -ரஞ்சன் (தினபதி 18-11-89)

1-2-90 சாவகச்சேரி காவல்துறை நிலையம் திறக்க முயற்சி -புலிகள் தடை (ஐலண்ட் 3-12-90)

மட்டக்களப்பு , கல்லடி , கும்புறுமூலை, கரடியனாறு, புல்லுமலை, களுவாஞ்சிக்குடி, மங்கல ஓயா ஆகிய இடங்களிலுள்ள இராணுவ முகாம்களுக்கு மேலதிப் படையினர் (வீரகேசரி -20. 2. 90)

22-2-90 அம்பாறையில் படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டு அவமானப்படுத்தப்பட்ட போராளி (இரண்டாம் லெப். தரன்) சயனைட் அருந்தி வீரச்சாவு.

13-3-90 மட்டக்களப்பு, கல்முனை பகுதி வீதித்தடையை அகற்ற முயன்றபோது காவல்துறையினர், மேல்நோக்கிச் சுட்டுக் குழப்பம். கல்முனையில் இருந்து அம்பாறைக்குச் செல்லும் பாதையில் கல்மடு என்ற இடத்தில் இலங்கை இராணுவம் புதிய முகாம் அமைக்கின்றது. மட்டக்களப்பு விமான நிலையம் விரிவாக்கப்படுகின்றது. (ஈழநாதம் 8-4-90 )

16-4-90 பருத்தித்துறைக் காவல் துறையினர் பெண்களுடன் சேட்டை.

13-4-90, 15-4-90 மட்டக்களப்பு காவல்துறையினர் பெண்களுடன் சேட்டை. மேலே சுட்டுக் குழப்பம்.

16, 17-5-90 குண்டு வீச்சு வானூர்திகள் தர்மபுரம், விஸ்வமடு, யாழ் நகர் மீது தோட்டம். (ஈழநாதம் 18-5-90)

19-5-90 ஆனையிறவில் படைகுவிப்பு. (ஈழநாதம் 21-5-90)

மங்கி பிரிட்ஜ் முகாமில் படைகுவிப்பு (ஈழநாதம் 29-5-90)

28-5-90 பாவற்குளத்தில் சிறீலங்கா இராணுவம் திடீர்ச் சோதனை (ஈழநாதம் 3-6-90)

கோட்டை முகாமுக்கு மேலதிக இராணுவம். (ஈழநாதம் 1-6-90)

27-6-90 வவுனியாவில் இருந்து அனுமதி பெறாமல் முல்லைத்தீவு செல்ல முயன்ற படையினருடன் மோதல்.

இப்படிப் பல நிகழ்ச்சிகள் தொடர்ச்சியாக இடம்பெற்றன.

22-10-89 இல் அம்பாறையில் இருந்து இந்தியப் படை வெளியேறியதைத் தொடர்ந்து 5-11-89 அன்று திருக்கோயில், தம்பிலுவில் ஆகிய இடங்களில் இருந்த தமிழ்த் தேசியப் படையினரின் பாசறைகள் எம்மால் அழிக்கப்பட்டன. இதைத் தொடர்ந்தே முதல்வரின் வேண்டுகோளுக்கு இணங்க, தாம் படையை அனுப்பியதாக ரஞ்சன் கூறியபோதும் மாகாணசபை முதல்வர், தான் அப்படிக் கேட்கவில்லை என அதை மறுத்தார். எமக்கும் அரசுப் படைகளுக்கும் இடையே மோதல் ஏற்படும் எனத் தெரிந்தும் ரஞ்சன் படைகளை அனுப்பியிருந்தார் என்பது முக்கிய விடயமாகும்.

சிக்கற்பட்ட காவல்துறையினரை -குறிப்பாக சிங்களக் காவல்துறையினரை இடமாற்றம் செய்கிறோம் எனக்கூறிக்கொண்டு அவர்களின் இடத்திற்கு -குறிப்பாக [illegible] சிங்களக் காவல்துறையினர் மீண்டும் அனுப்பப்பட்டனர். பருத்தித்துறையில் 11-4-90 இல் காவல்துறையினருடன் ஏற்பட்ட சிக்கலின்பின் யாழ் மாவட்டத்தில் இருந்து சிங்களக் காவல்துறையினரை மாற்றும்படி கேட்ட போது, யாழ் நகரில் இருக்கும் 6 காவல்துறை நிலையங்களுக்கும் குறைந்தது 600 காவல்துறையினர் வேண்டும்; எம்மிடம் இருப்பதோ 486 தமிழ்க் காவல்துறையினரே (இவர்களுள் 172 முஸ்லீம்கள்) எப்படிச் சிங்களக் காவல்துறையினரை அனுப்ப முடியுமென யாழ் மாவட்ட காவல்துறை அத்தியட்சகர் ஜெயராஜ் (ஈழநாதம் 16-4-90 ) கேட்டார்.

சிறீலங்கா அரசு காவல்துறையில் போதியளவு தமிழ் பேசும் காவல்துறையினர் இல்லாதிருந்தும் -தமிழீழப் பகுதியில் அவசரமாகக் காவல்துறையின் செயற்பாடுகள் தேவையற்று இருந்தும் -அரசு தன் ஆதிக்கத்தைச் செலுத்த முயன்றமையையும் எம் நல்லெண்ணக் கருத்துக்களை மதிக்க மறுத்தமையையும் இந் நிகழ்ச்சிகள், செயற்பாடுகள் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன.

இதேவேளை அரசுடன் நாம் பேசி இணங்கியதற்கு ஏற்ப புதிய தமிழ்க் காவல்துறையினரைச் சேர்க்கும் முயற்சியில் நாம் இறங்கியிருந்தோம்.

அரசில் இருந்த, தமிழ் பேசும் காவல்துறையினருள் பல முஸ்லீம் காவல்துறையினர் பிழையாக அரசாலும், அரசு தரப்பாலும் வழிநடத்தப்பட்டனர்.

இந்தியப் படை இங்கிருந்த போது தமிழ், முஸ்லீம் மக்களின் உறவு நன்றாக இருந்தது. வட - கிழக்கு மாகாணசபைத் தேர்தலின் போதும் நாடாளுமன்றத் தேர்தலின் போதும், நாம் அவற்றை ஏற்காத போதும் மறைமுகமாக அஸ்ரப்புக்கு ஆதரவு தந்தோம்.

இந்தியப் படை வெளியேறத் தொடங்கியதும் நாம் வெளியே வந்தபோது, எமக்கு முஸ்லீம் மக்களிடம் இருந்த செல்வாக்கைக் கண்ட சிங்கள அரசாலும், அஸ்ரப்பாலும் அதைத் தாங்க முடியவில்லை. தம் தேவைக்காக, தம் நலனைக் காக்க சிங்கள அரசாலும் அஸ்ரப்பாலும் வளர்க்கப்பட்ட முஸ்லீம் ஆயுதக் குழுக்கள் தம்மை 'ஜிகாத்' எனக் கூறிக்கொண்டு தமிழ், முஸ்லீம் ஒற்றுமைக்கு ஆப்பு வைத்தன. இதைப் பிரேமதாசா அரசு ஊக்குவித்தது.

மட்டக்களப்பில் எமது போராளி ஆதமும் (3.1.90 ) பல ஆதரவாளர்களும் (21-5-90 கல்முனை சாய்ந்தமருது விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி உறுப்பினர் யு.எல்.எவ். ஆதம்பாவா) சுட்டுக் கொல்லப்பட்டனர்.

தமிழீழத்தில் தீர்வு காண முஸ்லீம்கள் தடை என்ற கருத்து, அஸ்ரப் மூலம் பரப்பப்பட்டது. உண்மை என்னவெனில், பிரேமதாசா ஆட்டுவிக்கும் வகையில் ஆடும் நிலையில்தான் அஸ்ரப் இருந்தார். ஆறாவது சட்ட திருத்தத்திற்கு அஸ்ரப் எதிர்ப்பு என பிரேமதாசா அடிக்கடி கூறினார். மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற அஸ்ரப்பின் துணை வேண்டும் எனக் கூறினார். அஸ்ரப்பை ஆதரவாக வாக்களிக்கவும் என பிரேமதாசா கூறினாலே போதும்; அஸ்ரப் வேறு பேச்சுப் பேசாமல் வாக்களிக்கும் நிலையிலேயே இருந்தார்.

அதேபோல் செய்தித்தாள்கள், எதிர்க்கட்சிகள் தெரிவிக்கும் எதிர்க்கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து இப்போது பல விடயங்களைச் செய்ய காலம் சரியில்லை எனப் பிரேமதாசா நடித்து வந்தார்.

உதாரணமாக ஆறாம் சட்டத்திருத்தம், மாகாணசபைக்கு தமிழ் ஆளுனர், திருக்கோணமலை அரச அதிபராக ஒரு தமிழர், அம்பாறை அரச அதிபராக ஒரு முஸ்லீம் போன்ற சாதாரண கோரிக்கைகளைக் கூட நிறைவேற்ற மறுத்தார்.

பத்திரிகை எதிர்ப்பு, எதிர்க்கட்சியினரின் கருத்துக்கு பிரேமதாசா கொடுக்கும் மதிப்பு யாருக்கும் தெரியாததல்ல. புலிகளுக்குப் பிரேமதாசா ஆயுதம் தந்தார் என்ற மிகப்பெரிய குற்றச்சாட்டையே சாதாரணமாக எதிர்கொண்ட பிரேமதாசாதான், அப்போது அப்படிக் கூறிக்கொண்டு இருந்தார்.

பதினெட்டு ஆண்டுகள் ஆயுதப் போராட்டத்தில் சிங்களவரைப் பொறுத்தவரை இரண்டாவது ஈழப்போராகவும், தமிழர்களைப் பொறுத்தவரை மூன்றாவது ஈழப் போராகவும் வெடித்த போரைத் தடுக்கக் கூடிய அரிய சந்தர்ப்பத்தை சிங்களப் பேரினவாத அரசு சரியாகப் பயன்படுத்தத் தவறியது.

1972 ஆம் ஆண்டில் இருந்து நிலைகுலையத் தொடங்கிய சிறீலங்காவின் காவல்துறை 1985 க்குப் பிறகு முற்றாகவே செயலிழந்திருந்தது. சிறீலங்காப் படையமும் பல இடங்களில் கட்டுப்பாட்டை இழந்திருந்தது. இந்தியப் படை வந்தபின் சிங்கள அரச கட்டுப்பாடு என்பது தமிழீழத்தில் இருக்கவேயில்லை.

இந்தச் சூழ்நிலையில் இந்தியப் படை வெளியேறியதும், தமிழர்களின் இனச்சிக்கலுக்குத் தீர்வு காணுவதை விட்டுவிட்டு சிறீலங்கா அரசு தன் ஆதிக்கக் கால்களை தமிழீழ மண்ணில் பதிப்பதிலேயே கூடிய கவனம் செலுத்தியது. தமிழ், முஸ்லீம் மக்களின் உறவுகளைச் சிதைத்தது. திட்டமிட்ட குடியேற்றத்தைத் தொடர்ந்தது. பேசிப் பேசி தமிழ் மக்களை ஏமாற்றலாம் என்ற கடந்த கால பட்டறிவும், இரத்தத்தோடு ஊறிப்போய் விட்ட சிங்களப் பேரினவாத உணர்வுமே மீண்டும், தமிழீழ - சிறீலங்காப் போர் வெடித்தமைக்குக் காரணங்களாகும்.

மட்டக்களப்பில் நடந்த சிறு பூசல் காரணமாக போர் வெடித்தது என்பது, உண்மையைச் சரியாகப் பார்க்காததால் ஏற்பட்ட கருத்தாகும்.

இக்கட்டுரையில், அக்கால கட்டத்தில் போராட்டம் வெடிப்பதற்குக் காரணமாக இருந்த நிகழ்ச்சிகள் ஓரளவே எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

இந்தியப் படை வெளியேறிய பின், சிங்கள மக்கள், தமிழ் மக்கள் மீதும் புலிகள் மீதும் மிகுந்த மரியாதை வைத்திருந்தார்கள். தம் நாட்டைக் காத்த வீரர்கள் என்றும் இந்தியப் படையை வெளியேற்றியமைக்காக இலங்கைத் தீவில் வாழும் நாங்களும் பெருமை கொள்ளலாம் என்றும் பேசிக்கொண்டிருந்தார்கள். இந்தச் சூழலில் மிகவும் பலம் வாய்ந்த தமிழீழ விடுதலைப் புலிகளோடு சிங்கள அரசு உண்மையாக முயன்று நல்ல தீர்வைக் கண்டிருக்க முடியும்.

பௌத்த சிங்களப் பேரினவாதம் தொடர்ந்து சிங்கள அரசியல்வாதிகளின் கண்களை மறைத்ததால் மூன்றாம் தமிழீழப் போர் வெடித்தது. ■

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# துணைப்படையின் மூன்றாண்டு வளர்ச்சியில்...

**1984** ஆம் ஆண்டு மார்கழித் திங்கள் 21 ஆம் நாள், முல்லை மாவட்டத்தின் மணலாற்றுப் பிரதேசத்தை, தடை செய்யப்பட்ட பிரதேசமென சிங்கள அரசு பிரகடனம் செய்தது. அன்று வெளியேற்றப்பட்ட மக்கள் இன்றுவரை மீளக் குடியமர்த்தப்படவில்லை. மாறாக சிங்கள மக்களை அப்பிரதேசத்தில் ஆயுததாரிகளாய் குடியமர்த்தி வருகின்றது.

இடம்பெயர்ந்த தமிழர்களுக்கென வந்த -வருகின்ற வெளிநாட்டு உதவிகளை, இப்பிரதேசத்தில் குடியமர்த்திய சிங்கள மக்களுக்கு வழங்கிவருகின்றது.

முல்லைப்பட்டினக் கிராமங்களின் மக்கள், முல்லைத்தீவு இராணுவ நடவடிக்கையின் போது வெளியேற்றப்பட்டனர். மூன்று ஆண்டுகளாகியும் அந்த மக்கள் நிலைபற்றி, சிங்கள அரசு சிந்திக்கவில்லை. எதிர் மாறாக முல்லை மணலாற்றுப் பிரதேசத்தில் மக்களின் வீடுகள், கல்விக்கூடங்கள், வழிபாட்டிடங்கள், மருத்துவமனைகள் என்பன வான்படைக் குண்டுவீச்சுக்கு இலக்காக்கப்பட்டன.

தொடர்ச்சியாக இம்மண்ணின் மக்களுக்கு சிங்கள அரசால் இழைக்கப்பட்ட கொடுமைகளின் வெடிப்பே, துணைப்படை தம்மைத்தாமே காத்து, தமது மண்ணில் சுதந்திரமாக வாழ, 1990 இன் ஆரம்பத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் துணை அமைப்பாக, துணைப்படை தோற்றம் பெற்றது.

முல்லை - மணலாற்றுப்பிரதேசக் கிராம மக்கள் அனைவரும் இப் படையணியில் இணைந்துகொண்டனர்.

ஒரு சில கிராமங்கள் தவிர்ந்த ஏனைய கிராம மக்கள், விடுதலைப் புலிகளின் துணையோடு அவர்தம் மண்ணில் மீண்டும் குடியமர்த்தப்பட்டனர். தம்மைத் தாமே தற்காத்துக்கொள்ளும் பயிற்சியோடு, வேட்டைத் துப்பாக்கியணியாகத் துணைப்படை எழுச்சி பெற்றது.

1991 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில், துணைப்படை இரண்டாம் கட்ட வளர்ச்சியை எட்டியது. விசேட பயிற்சிபெற்று 303 ரக துப்பாக்கி, எஸ். எல். ஆர். ரகத் துப்பாக்கியணியாக மாற்றம் பெற்றது. 1993 இன் ஆரம்பகாலம்வரை முல்லை -மணலாற்றுப் பிரதேசங்களில் சிங்களப் படை மேற்கொண்ட பாரிய நடவடிக்கைகளை விடுதலைப் புலிகள் முறியடித்த போது, புலிகளின் தாக்குதலணிக்குப் பலவழிகளில் துணை நின்றனர்.

இன்று வரை மூன்று துணைப் படை வீரர்கள் மாவீரர் துயிலும் இல்லத்தில் பூசிக்கப்படும் கல்லறைகளாயினர்.

1993 ஆம் ஆண்டு ஆனி மாதம், துணைப் படை மூன்றாம் கட்ட வளர்ச்சியினை எட்டியது. பயிற்சியிலும் ஆயுதப் பயன்பாட்டிலும் மாறுபட்ட வளர்ச்சிநிலை கண்டது. விசேட அதிரடிப் பயிற்சிபெற்று, கனரக இயந்திரத் துப்பாக்கியணியாய் நிமிர்ந்து நிற்கிறது.



மணலாற்றில் வரலாறு படைக்கும் எமது இயக்கத்தின் துணைப்படை வீரர்கள்.

தமிழீழ மக்களின் மனதில் நம்பிக்கை ஒளி ஏற்படுத்தியதும், சிங்கள அரசையும் இராணுவத் தளபதிகளையும் நிலைதடுமாற வைத்ததுமான 'இதயபூமி -1' என்னும் விடுதலைப் புலிகளின் சிறப்பு நடவடிக்கையில், முல்லைமாவட்ட துணைப்படையணிகள் நேரடியாகக் களத்தில் நின்று உதவிபுரிந்தன.

விடுதலைப் போராட்ட வரலாற்றில் இது ஒரு புதிய திருப்புமுனையாகும். இது மட்டுமல்ல, மக்கள் தம்மண்ணை மீட்டுவிடமுடியுமென்ற நம்பிக்கையின் தொடக்கமும்கூட.

அன்று - சென்ற ஆண்டுகளில் - உயிரைப் பிச்சையெனக் கையேந்தியும் உயிர் பறிக்கப்பட்டது. இன்று அந்நிலைமாறி, "பகைவனே ! உனது உயிரில் ஆசையிருந்தால் எங்கள் மண்ணில் கால்பதிக்காதே" என்ற நிலையில், முல்லை மாவட்ட மக்கள் களத்திலும் எல்லையிலும் ஆயுதத்துடன், சொந்த மண்ணைக் காத்து நிற்கின்றனர். ■

## இதயபூமி -1....

துன்ப அத்தியாயங்கள் அதிகமிருந்தபோதும், இராணுவத்தால் அனுபவித்த துன்பங்களின் முன்னே இது அரும்பாகத் தெரிந்தது குயிலனுக்கு.



ஏழாவது பயிற்சிப் பாசறையில் பயிற்சி முடித்த கையோடு, முல்லைத் தீவில் இலங்கை இராணுவ முகாம் மீதான தாக்குதற்களம் காத்துக் கிடந்தது. மிதி வெடி வைக்கும் திறமை மிகுதியாக இருந்ததால், அதற்கான சிறப்புப் பயிற்சியோடு களத்துக்கு விரைந்தான்.

மிதி வெடி வைக்கும் பணியில் குயிலனது வலது கரம் போனதும், யாழ் சென்று சிகிச்சை பெற்றதும், ஒரு கரத்துடன் என் முன் வந்து நின்றதும் ஒரு சோகம் கலந்த வீர வரலாறு.

கரமொன்று போனபின் சண்டை செய்ய வேண்டும் என்ற துடிப்பு குயிலனிடம் மேலோங்கியது. தனது உள்ளக்கிடக்கையை தளபதியிடம் வாய்விட்டுக் கேட்டுவிட்டான். தளபதியும் அவனது ஆசைக்குத் தடை போடவில்லை. ஆனால், அவனது பொறுப்புணர்ச்சியைக் கருத்திற் கொண்டு அணியொன்றின் பொறுப்பாளனாக நியமித்தார். பொறுப்பாளனாக இருக்கவிரும்பாத குயிலன், சாதாரண வீரனாயிருந்து இரண்டு மூன்று சண்டைகள் செய்தபின், பொறுப்பாளனாக வருவதையே விரும்பினான். அதையும் வெளிப்படையாகவே கேட்டுக்கொண்டான். வேண்டுதல் நிறைவேற்றப்பட்டது.

குயிலன், மணலாற்றில் பெரும்பாலான களங்களில் மனமாரச் சண்டை செய்தாலும், சில சண்டைகளுக்குத் தன்னைக் கூட்டிச் செல்லாததையிட்டு குறைப்பட்டிருக்கிறான் -அழுதிருக்கிறான். அழுதாவது சண்டைக்குச் செல்ல அனுமதி எடுத்துவிட வேண்டுமென்ற சண்டைக்காரன் குயிலன்.

'இதய பூமி-1' நடவடிக்கைக்கான பயிற்சி நடைபெற்றுக்கொண்டிருந்தபோது, குயிலன் சலிப்பும் களைப்புமின்றி பயிற்சியிலீடுபட்டான். இயலாவாளி என்று தன்னைக் கூட்டிச் செல்லாமல் விட்டுவிடுவார்களோ என்ற சந்தேகம் அவனுக்கு.

பயிற்சி முடிந்து அணிகள் வகுக்கப்பட்டபோது, தளபதியின் கை தன்னை நோக்கி அசையுமா என்ற ஆவலோடு இமைக்காமல் பார்த்துக்கொண்டிருந்தான். அசைந்தது! குயிலனின் மகிழ்ச்சிக்கு அளவில்லை. அந்த மகிழ்ச்சியில் அவன் அடித்த மரியாதை வணக்கம், இன்னும் கண்முன் நிற்கிறது!

---

**2 ஆவது லெப். புகழரசன்**
*(சின்னத்துரை கோணேஸ்வரன்)*
காரைநகர், யாழ்ப்பாணம்.

**யா**ழ். மண்ணில் காரைநகர் தந்த புதல்வன் புகழரசன். தான் பிறந்த மண்ணில் சிங்களப்படைகள் ஆதிக்கம் செலுத்துவதும், பிறந்தகத்தைவிட்டு இடம் பெயர்ந்துவாழும் தாய் தந்தையர் வறுமையால் நொந்து தவிப்பதும், புகழரசனின் நெஞ்சில் நெருப்பை மூட்டின. சிங்களத்தின் கொடுமைகள்கண்டு கொதிப்பதா? வறுமையின் நிலைகண்டு வாய்விட்டு அழுவதா.....?

அழுவதற்கு அவன் தயாரில்லை. தன்மான உணர்வோடு களப்பலி எடுக்கவேண்டுமென்ற சினம் ஓங்கி நின்றது. பயிற்சிக் காலத்தில் வீட்டு வறுமை நிலைபற்றி அடிக்கடி சொல்லிக்கொள்வான். வறுமை அவனுள்ளத்தில் ஒரு போராட்டத்தை எழுப்பியுள்ளதை உணர்ந்து கொண்டேன்.

மட்டக்களப்பில் உணவின்றி, இருப்பிட வசதியின்றித் தவிக்கும் தம் தாய் தந்தையர் துயர்பற்றிச் சகதோழர்கள் கூறும் சோகக்கதைகளைக் கேட்கும் போது, புகழரசன் மன ஆறுதல் கொண்டான்.



காலத்துக்கேற்ப, நேரத்துக்கேற்ப, இடத்துக்கேற்ப தோழர்களோடு பழகிவிட்டு ஏனைய நேரங்களில் அமைதியாக இருப்பதையே விரும்பினான் புகழரசன். இவனுள்ளத்தில் இசை வெள்ளம் நிறைந்துகிடப்பது எவருக்கும் தெரியாது. அமைதியாக இருந்த அவனைத் தட்டியெழுப்பிப் பாடவைத்த நாள், நெஞ்சில் நிலையாய் நிற்கிறது. புகழரசன் நல்லாய்ப் பாடுவான் என்ற உண்மை தெரிந்ததும் தோழர்கள் சும்மாவிடுவார்களா? அவனைச் சுற்றி என்றும் ஒரு கூட்டம் மொய்த்திருக்கும்.

புகழரசனின் போர்வாழ்வு குறுகியது. குறுகியகாலப் போர் வாழ்வில் நிறைவான வரலாற்றுப்பதிவை ஏற்படுத்திக் கொண்டான். மண்கிண்டி இராணுவ முகாமைத் தகர்த்தெறிந்து 'இதயபூமி'க்கு உயிரூட்ட உயிர்கொடுத்த உத்தம வீரர்களின் வரிசையில், தன்னையும் இணைத்துக்கொண்டான்.

வதைபடுவதைவிட மானத்துடன் புதைபடுவதுமேல் என்று கருதி விழிதூங்க மறுத்த புகழரசன், நிலையான தூக்கத்தோடு வரலாறாகிவிட்டான். அவனிசைத்த கானங்கள் கானகமெங்கும் ஒலிப்பதை உணர்கின்றேன்.... காரைநகர் தந்த கானக்குயிலின் மானம் இந்த மண்ணில் என்றும் வாழும்!


## மாவீரர் நாள் போட்டிகள்
### கார்த்திகை 27-1993

மாவீரர் நாளை முன்னிட்டு பிரான்ஸ் வாழ் தமிழீழ மக்களிடையே சிறுகதை, கவிதை, கட்டுரை, ஓவியம், பேச்சுப்போட்டிகள் நடாத்தப்படவுள்ளன.

மூன்று பிரிவுகளாக நடைபெறும் இப்போட்டிகள்:

- ★ [illegible]
- ★ [illegible]
- ★ [illegible]

- ★ [illegible]
- ★ [illegible]
- ★ [illegible] 13-11-1993.
- ★ [illegible]

T.C.C.
341, RUE DES PYRENEES
75020 PARIS

தொலைபேசி இல: 43 58 11 42

மண்ணையும் மக்களையும் காக்க
மரணித்த மாமனிதர்களின் நினைவுகளில் மூழ்கி எழுவோம்.
தமிழர் கலை பண்பாட்டுக் கழகம் - பிரெஞ்சுக்கிளை

## தமிழர் புனர் வாழ்வுக் கழக ஜேர்மன் கிளையினர் நடத்திய

# இரங்கும் இன்னிசை இரவு



அடிப்படை வசதிகள் எதுவுமின்றி மரநிழல்களிலும், தெருக்களிலும், அகதி முகாம்களிலும் வாழ்ந்துகொண்டிருக்கும் தமிழீழ மக்களின் துயரத்தைத் தமிழ் மக்களின் உதவியுடன் நிவர்த்தி செய்யப் பாடுபட்டுக் கொண்டிருக்கும் தமிழர் புனர் வாழ்வுக் கழகத்தின் யேர்மன் கிளை, இவ்வாண்டு ஏழாவது 'இரங்கும் இன்னிசை இரவு' நிகழ்ச்சியை 25-09-93 சனிக்கிழமை 'டோட் மூண்ட்' நகரில் மக்களின் ஆதரவுடன் நடாத்தி உதவிக் கரம் நீட்டிய தன் பயணத்தைத் தொடர்ந்தது.

இதுவரை காலமும் மண்மீட்புப் போரில் மரணித்த மக்களுக்கும்,





மாவீரர்களுக்கும் மௌன அஞ்சலி செலுத்தி நிகழ்ச்சி ஆரம்பமானது. நிகழ்ச்சியில் வரவேற்புரை நிகழ்த்திய தமிழர் புனர் வாழ்வுக் கழகத்தின் ஜேர்மன் கிளையின் பிரச்சாரப் பிரிவுப் பொறுப்பாளர் தமிழர் புனர் வாழ்வுக் கழகத்தின் செயற்பாடுகள் பற்றிக் குறிப்பிட்ட தனது உரையில், "இனவிடுதலைப் போராட்டத்தில் அகதிகள் உருவாக்கம் தவிர்க்க முடியாதது. உருவாகும் அகதிகள் தொடர்ந்தும் அகதிகளாக இருப்பார்களேயானால் நலன் குன்றிய எதிர்கால சமுதாயத்தையும் உருவாக்கி, விடுதலைப் போராட்டத்தை முன்னோக்கி நகர்த்தத் தடையாகவும் இருப்பர். நிவாரணத்தின் மூலம் உருவாகும் சமுதாயத்தை உருவாக்காமல், தானாக உழைத்து வாழும் சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்ற அடிப்படைக் கொள்கை நோக்கம் கொண்டு தமிழர் புனர் வாழ்வுக் கழகம் தனது திட்டங்களைச் செயற்படுத்தி வருகின்றது. இன்று சிங்கள அரசின் கண்மூடித்தனத்தால் தொடர்ந்து செல்லும் பொருளாதாரத் தடையாலும், வைத்தியவசதியின்மையாலும் குழந்தைகள், சிறுவர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள், வயோதிபர்கள் பெரும்பாதிப்பை எதிர்நோக்கியுள்ளனர். இந்நிலை தொடருமேயானால் தமிழீழம் சோமாலியா, எதியோப்பியா போன்ற நாடுகளின் நிலைக்குத் தள்ளப்படக்கூடிய அபாயகரமான சூழ்நிலை ஏற்படக்கூடும். சுயநலம் கருதாமல் எந்த அந்நிய சக்திகளும் எமக்கு உதவ மாட்டார்கள். ஒரு முறை ஏற்பட்ட அந்நிய அரசின் வருகை எமக்குப் பெரும் பாதிப்பையே ஏற்படுத்தியது. தமிழீழத்தை அடகு வைத்துக் கிடைக்கப்பெறும் உதவியால் நாம் வாழவேண்டிய அவசியமில்லை. தமிழனுக்குத் தமிழனே உதவி செய்ய வேண்டும். எம்மில் சிலர், உலகப் பொது ஸ்தாபனங்களுக்கு தாங்கள் உதவுவதாகவும் தமிழர் புனர் வாழ்வுக் கழகத்துக்கு உதவ மாட்டோம் என்றும் கூறுகின்றார்கள். உலகப் பொது ஸ்தாபனங்கள், எம் மக்களிடம் பணத்தைப் பெற்றுத்தான் எம்மக்களுக்கு உதவ வேண்டும் என்று அவசியமில்லை. அதேவேளை இலங்கை அரசின் கட்டுப் பாட்டுக்குள்ளேயே இவர்கள் செயற்படுவார்கள். தமிழர் புனர் வாழ்வுக் கழகம், மக்களின் தேவையை அறிந்து எல்லோருக்கும் சமமாக உதவுகிறது என்பதை உணரவேண்டும். காலம் கடந்து உதவுவோம் என்றில்லாமல், பிரச்சினையை முளையிலேயே கிள்ளியெறிய வெளிநாடுகளில் உள்ள மக்கள் அனைவரும் மனித நேயத்துடன் சிந்தித்து தமது கடமையைச் செய்ய வேண்டும். எப்படிக் குருதிச் சுற்றோட்ட முறை மூலம் இதயம், உடலின் எல்லாப் பாகங்களுக்கும் குருதியைச் செலுத்திச் சுத்தம் செய்து உடலை இயங்கவைக்கிறதோ அதுபோன்று தமிழீழத்தின் இதயமான தமிழர் புனர் வாழ்வுக் கழகம், தனது உதவித் திட்டங்களைச் செயற்படுத்தி வருகின்றது" என்றார். தமிழர் புனர் வாழ்வுக் கழகத்தின் ஆயிரம் குழந்தைகளைத் தத்தெடுக்கும் திட்டம் பற்றியும் கூறிய அவர், மனிதாபிமானம் உள்ளவர்கள் இத்திட்டத்திற்கு உதவ முன்வரவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து பரதநாட்டியம், நாளலயம் (புதிரும் முதிரும்), சோலோக் கச்சேரி, தமிழீழம் இசைக் குழுவினரின் மெல்லிசை என்பன நடைபெற்றன. ■

## சுவடுகள்....

சாந்திக்காகவும் மக்கள் இறங்கிக் கொள்கின்றனர். ராஜனுக்கு இறங்க வேண்டும் போல் இல்லை. மனம் பாரமாக இருந்தது. வஸ்சில் இருந்தபடியே லண்டன் குடும்பத்தைப் பார்த்தான். இறங்கி நின்ற பிள்ளைகள் முறிகண்டிப் பிள்ளையார் கோவிலை அதிசயப் பொருள் போல் பார்த்துக் கொண்டு நின்றனர்.

உங்களுக்கு இந்தக் கோயிலை தெரிந்திருக்க நியாயமில்லை. ஆனாலும் இது எங்கள் வாழ்வோடும், பயணத்தோடும் பின்னிப் பிணைந்துவிட்ட ஒன்று. மனதில் கூறிக்கொண்ட ராஜனின் கண்கள் அந்தப் பிள்ளைகள் மேல் ஆழப்பதிந்தன. அந்த மூன்று பிள்ளைகளும் மிகவும் அழகாக இருந்தார்கள். ஆங்கில மண் அவர்களுக்கு அழகை அள்ளி வழங்கியிருந்தது. ஆனாலும் அவர்களுக்கோ இந்த மண்ணைத் தெரியாது; இந்த மக்களையும் தெரியாது; இந்த மண்ணில் நடப்பதும் புரியாது. தற்பொழுதும் அவர்களால் ஒரு சிறிதளவு கூட தெரிந்து கொள்ள முடியாது. ஏனென்றால் அவர்களுக்கு தாய் மொழி தெரியாதே. பெருமூச்சொன்று வெளிப்பட்டது அவனிடமிருந்து.

வஸ் புறப்படுகின்றது. பேட்டிக்காக மீண்டும் காதுகளைக் கூர்மையாக்கிக் கொள்கின்றான் ராஜன். வஸ்சிற்குள் மிகுந்த புழுக்கம். எங்களுக்கு இது பழகிப் போய்விட்ட ஒன்று. ஆனாலும் லண்டனில் இயற்கையின் ஏ. சி. இல் வாழ்ந்த அவர்களுக்கு அது ஒத்துக்கொள்ளவில்லை. பிள்ளைகள் நெளிந்தனர். பெற்றோரோ அவர்களை மிஞ்சினர். இவர்கள் அவஸ்தைப்படுவதனைப் தாங்கிக் கொள்ள முடியாத ஒரு பெரியவர், "நோ பிராப்பிளம் திஸ் இஸ் போ சம்ரைம்." கனிவுடன் கூறுகின்றார். அன்னிய நாட்டில் இருந்து தனது நாட்டிற்கு வந்த ஒருவரை ஆறுதல்படுத்துகின்றாரோ, இல்லை தனக்கும் ஆங்கிலம் தெரியும் என்று, தனது அரைகுறை ஆங்கிலத்தில் காட்டத் துடிக்கின்றாரோ?


"இவ்வளவு கஸ்ரம் என்று தெரிந்திருந்தால் நாங்கள் வந்திருக்கவே மாட்டம். இவ்வளவு கஸ்ரம் என்று நாங்கள் நினைக்கவேயில்லை. ஐயோ வெறி வெறி டிபிக்கல்ற் யேணி" வேதனையுடனும் பெருமூச்சுடனும் கூறிக் கொள்கின்றாள் அரை ஆங்கிலப் பெண்மணி. வந்த செயலுக்காக அவள் வருத்தப்படுவது புரிகின்றது. வஸ் ஓடிக்கொண்டேயிருக்கிறது. இப்பொழுது நன்றாக இருட்டிவிட்டது. நேரம் 8 மணி இருக்கும். இன்னும் அரைமணித்தியாலம் ஆவது செல்லும். ராஜன் மனதில் கணக்கிட்டுக் கொள்கின்றான். "நாளைக்கு போட் ஓடுமா?" அருகில் இருந்தவரை கேள்வியோடு நோக்கினாள் அப்பெண். "தெரியாதக்கா. சிலவேளை ஓடும்; இரண்டு மூன்று நாளும் செல்லும்" சாதாரணமாகவே சொல்கின்றார் அருகிலிருந்தவர். ஐயோ ரூ. திறி டேயிஸ் செல்லுமா? நாளைக்கே ஓடிட்டுது என்றால் பிரச்சினை இல்லை. நாங்கள் திறி வீக்ஸ் றிற்றேண் ரிக்கற்றில தான் வந்தனாங்கள். கெதியாய்ப் போய்விட வேண்டும். "மன ஆதங்கத்துடன் வெளிப்பட்டது அப்பெண்ணின் வார்த்தைகள். ராஜனுக்கு சிரிப்பைவிட வேதனைதான் மனதை நெருடியது. எங்கள் தேசத்தில் என்ன நடக்கின்றது என்பதே இவர்களுக்கு தெரியவில்லை, புரியவில்லை. நாங்கள் யாழ்ப்பாணத்தில் இருந்து வன்னிக்கு வந்து செல்வதற்கே நாள் குறிப்பதில்லை. போகும் நேரம் கண்டுகொள்ள வேண்டியதுதான். இவர்கள் லண்டனில் இருந்து 3 வாரம் நாள் குறித்து வந்திருக்கிறார்கள். இவர்கள் தங்கள் தாய்மொழியை மட்டுமல்ல, தாயகத்தையே மறந்துவிட்டார்கள்.

இந்த மண்ணில் என்ன நடக்கின்றது [illegible] புரியவில்லை. [illegible] என்ன சொல்வது? எப்படிச் சொல்வது?.....

"அண்ணை, அண்ணை, நீங்கள் இதிலதானே இறங்க வேண்டும்" வஸ் றைவரின் குரல் கேட்டு திடுக்கிட்டு விழித்தான் ராஜன். சுற்றும் பார்த்த அவன் கிளிநொச்சிக்கு வந்துவிட்டோமா? வந்ததே தெரியவில்லை, மனதில் எண்ணிக்கொண்டவன் றைவருக்கு நன்றி கூறிவிட்டு, மனச்சுமையுடன் வஸ்சைவிட்டு இறங்கிக் கொள்கின்றான். இறங்கும் முன்னர் அவர்கள் எல்லோரையும் ஆழமாகப் பார்த்துக் கொள்ளுகின்றான் அவன். அந்தப் பார்வையில் ஆத்திரமா? அனுதாபமா? இல்லை. அது உணர்ச்சியற்ற பார்வை. இன்னும் இன்னும் அவன் மனம் கனத்தது. தங்கள் சொந்த மண்ணிலேயே அகதிகளாகி நிற்கும் ஆயிரக்கணக்கானோரை அவனுக்குத் தெரியும். பார்த்திருக்கிறான். ஆனாலும் தமது சொந்த மண்ணிலேயே அன்னியராகி நிற்கும் ஒரு குடும்பத்தை இன்று தான் அவன் பார்க்கிறான். "இன்னும் ஒரு வாரத்தில் நீங்கள் போய் விடுவீர்கள். உங்களைப் பொறுத்தவரை இந்த மண்ணுக்கும் உங்களுக்கும் இருந்த தொடர்பு அறுபட்டு ஆண்டுகள் பத்தாகி விட்டது. இது ஒரு இடைக்காலத் தொடர்பு. அதுவும் நீங்கள் விரும்பாத ஒன்று. ஆனாலும் இந்த மண்தான் உங்கள் சொந்த மண் என்பதனை நினைவுபடுத்தியபடி உங்கள் பெற்றோர். அந்தச் சுவடுகள் மறையும்வரை இந்த மண்ணுக்கும், உங்களுக்கும் நீங்கள் விரும்பாத அந்தத் தொடர்பு இருந்துகொண்டேதான் இருக்கப் போகின்றது உங்களுக்கு. உங்கள் தாயகம் மன்னிக்க வேண்டும்; எங்கள் தாயகம் ஏதோ கூறிக்கொள்ள ஆசைப்படுவது புரிகின்றது. "இங்கே ஓர் உரிமைப் போர் நடக்கின்றது. நிச்சயம் இந்தத் தாயகம் விடியும். அந்த நாள் விரைவில் மிகவிரைவில். அன்று "எங்களின் தேசம் இது எங்களின் தேசம்" என்று தமிழினம் தலைநிமிர்த்திக்கொள்ள தமிழீழம் மாத்திரம்தான். அன்றும் நீங்கள் வாருங்கள். உங்கள் பாதச்சுவடுகளை நாங்கள் மகிழ்வுடன் தாங்கிக் கொள்வோம்." அவர்கள் செவிமடுப்பார்களா என்ற சந்தேகத்துடன் தலைநிமிர்த்தி உறுதியுடன் உரைக்கின்றது எங்கள் தாயகம்.

"அன்று இந்த மண்ணில் பதிந்த உங்கள் பாதச் சுவடுகள் இன்றுவரை இல்லை. இல்லாவிடில் நீங்கள் இருக்கும்வரை....." சிரித்துக் கொள்கின்றான் ராஜன். இந்த மண்ணுக்கு அவர்களின் வெறுப்பு புரிந்திருக்க நியாயம் இல்லை.

மௌனமான மன அமைதியுடன் மெல்ல மெல்ல நடந்தான் ராஜன். ■




தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelamarchive

# நீதிமன்றச் செயற்பாடுகள் பற்றி பொறுப்பாளர் திரு. பரா விளக்கம்

## ■ மேல்முறையீட்டு மன்றம் விரைவில் அமையும்

"தமிழீழ நீதிமன்றம் வலிகாமம் கோட்டத்தில் அமைக்கப்பட்டதையடுத்து எமது நீதி நிர்வாகப் பிரிவினரால் தென்மராட்சியில் - சாவகச்சேரியிலும், அதனைத் தொடர்ந்து வடமராட்சியிலும், யாழ். நகரப்பகுதியிலும் நீதிமன்றங்கள் அமைக்கப்படவுள்ளன என அண்மையில் நடைபெற்ற தமிழீழத்தின் முதலாவது நீதிமன்றத் திறப்பு விழாவினையடுத்து பத்திரிகையாளரைச் சந்தித்து உரையாடிய நீதி நிர்வாகப் பொறுப்பாளர் திரு. பரா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "இந் நீதிமன்றம் சுன்னாகம், சங்கானை காவல் பணிமனைப் பிரதேச வழக்குகளையே தற்போது கையாளும். நீதிமன்றங்கள் விஸ்தரிக்கப்படும்போது சகல பிரதேசங்களிலும் கோட்ட ரீதியாக நீதிமன்றங்கள் அமையும்."

"இந் நீதிமன்றமானது சனி, ஞாயிறு தவிர்ந்த வாரநாட்களில் மூன்று தினங்களில் சிவில் வழக்குகளையும், மற்றைய இரு தினங்களில் கிரிமினல் வழக்குகளையும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளும். எனினும், சிவில் வழக்குகளை நேரடியாக நீதிமன்றத்திலும், கிரிமினல் வழக்குகளை காவல் துறையினூடாகவும் மட்டுமே மாவட்ட நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும். வழக்குத் தீர்ப்பு பிழையெனக் கருதும் வழக்காளி மேல்முறையீடு செய்யவும் முடியும். இதற்கான மேன்முறையீட்டு நீதிமன்றங்கள் விரைவில் அமைக்கப்படவுள்ளன" என்றார்.



தமிழீழ மாவட்ட நீதிமன்றத்தின் முதலாவது அமர்வில் நீதியாளர்கள் திரு.ஒப்பிலான், திரு.பூவேந்தன், திரு.தேசிகன்

நீதிமன்றின் செயற்பாடுகள் பற்றி அவர் மேலும் தெரிவிக்கையில்,

"வலிகாமத்தில் அநேகமான சட்டத்தரணிகள் இந் நீதிமன்றில் வாதிடுவதற்கு சத்தியப்பிரமாணம் எடுத்துள்ளனர். மக்கள் சட்டவாளர்களை தெரிவுசெய்யலாம். சட்டவாளர்களுக்கு ஒரு வழக்குக்குரிய கட்டணமாக நூற்றிஐம்பது ரூபா மாத்திரமே வழங்க முடியும். இதை விடக் குறைவான கட்டணத்தை சட்டவாளர்கள் பெறலாம். ஆனால் கூடுதலாகப் பெறமுடியாது. அளிக்கப்படும் கட்டணம் நீதிமன்றிலேயே செலுத்தப்பட வேண்டும். நீதிமன்றம் சட்டவாளர்களுக்குரிய கட்டணங்களை வழங்கும். மக்கள் விரும்பினால் தமக்காகத் தாமே வாதாடவும் வழி செய்யப்பட்டுள்ளது", என்றும் விளக்கினார். ■

# யாழ். வைத்தியசாலையில் 'எக்ஸ்றே' எடுப்பதில் சிரமம்

யாழ். குடாநாட்டில் யாழ். போதனா மருத்துவமனையில் மாத்திரமே 'எக்ஸ்றே' படம் எடுக்கப்படுவதால் பெரும் சிரமமேற்பட்டுள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலை வட்டாரங்களில் இருந்து தெரியவந்துள்ளது.

இதற்குக் காரணம் முன்பு தெல்லிப்பளை, பருத்தித்துறை மருத்துவமனைகளிலும் 'எக்ஸ்றே' படம் எடுக்கப்பட்டு வந்ததால் போதனா மருத்துவமனைக்கு மேலதிக சிகிச்சைக்காக வருவோருக்கு மட்டுமே 'எக்ஸ்றே' எடுக்கப்பட்டு வந்தது. தற்போது தெல்லிப்பளை மருத்துவமனை இராணுவத்தின் பிடிக்குள் அகப்பட்டுள்ளதாலும், பருத்தித்துறை மருத்துவமனையில் 'எக்ஸ்றே' தொழில்நுட்பவியலாளர் இல்லாததன் காரணமாகவும் அப்பகுதியில் இருக்கும் நோயாளிகளும் யாழ். போதனா மருத்துவமனைக்கே வருவதனால், போதனா மருத்துவமனை 'எக்ஸ்றே' பகுதியில் பெரும் வேலைச்சுமை ஏற்பட்டுள்ளதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை போதனா மருத்துவமனையில் மின்பிறப்பாக்கிகள் பழுதடைந்து போதிய மின்சாரவசதியும் இல்லாதிருப்பதால் இப்பகுதி வேலைகள் மேலும் பாதிக்கப்பட்டுள்ளன. ■

# ஐந்தரை வருடத்தில் மட்டும் 17,721 கொலைகள் நடந்தன

சிறீலங்காவில் கடந்த ஐந்தரை வருட காலத்தில் 17 ஆயிரத்து 721 பேர் கொலை செய்யப்பட்டுள்ளனர். இதில் இவ்வருட முதல் ஆறுமாத காலத்தில் 602 பேர் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் தலைமையக குற்றத் தடுப்பு அறிக்கையின்படி 1988 ஆம் ஆண்டு ஜனவரி முதல் 1993 யூன் மாதம் வரையிலான காலப்பகுதியிலேயே 17,721 பேர் கொலை செய்யப்பட்டுள்ளனர். இதில் 1989 ஆம் ஆண்டிலேயே மிகக் கூடுதலான கொலைகள் நடந்துள்ளன. அவ்வருடத்தில் 8127 பேர் கொலை செய்யப்பட்டுள்ளனர் என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ■

# மாதிரிக் குடியேற்றம் சுன்னாகத்தில் திறப்பு

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் சுன்னாகம் தெற்கில் ஏற்படுத்தப்பட்ட மாதிரிக் குடியேற்றத் திட்டம் அண்மையில் திறந்துவைக்கப்பட்டது. சுன்னாகம் சிற்றூர்ப் பொறுப்பாளர் திரு. கலியுகன் தலைமையில் திறப்பு விழா நடந்தது. தமிழீழத் தேசியக் கொடியை யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி ஏற்றிவைக்க, வலிகாமம் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. திருக்குமரன் மங்கள விளக்கை ஏற்றிவைத்தார். மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வி ரதி குடியேற்றத் திட்டத்தைத் திறந்து வைத்தார். குடியிருப்பாளர்களுக்கான திறப்புக்களை தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பொறுப்பாளர் திரு. ரவி வழங்கினார். இக்குடியேற்றத் திட்டத்தில் 14 குடிமனைகள் நீர்வசதியுடன் அமைக்கப்பட்டுள்ளன. அளவெட்டி, கட்டுவன், மயிலிட்டி பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து மிகவும் பாதிக்கப்பட்ட 14 குடும்பங்களுக்கு இவை வழங்கப்பட்டுள்ளன. 21 பரப்பில் இந்தக் குடியேற்றம் அமைக்கப்பட்டுள்ளது. ■

### பத்தாண்டுப் போர்....

அனைத்தையும் தமிழீழத்தின் காடுகளுக்குள்ளும், பனங்கூடல்களுக்கு அடியிலும், வயல்வெளிகளிலும் தொலைத்துவிட்டு, இந்தியப்படைகள் அவமானத்துடன் தமிழீழத்தைவிட்டு வெளியேறின.

மீண்டும் சிங்கள அரசு தமிழர் இனப்படுகொலையை பொறுப்பெடுத்துக்கொண்டது. இம்முறை மிகவும் கோரமான வடிவத்தில் இனப்படுகொலையைச் செய்யத் திட்டமிட்டது. தென்தமிழீழம் இத்திட்டத்தின் பிரதான குறியாக இருந்தது. மிகப்பெரியதொரு தமிழ் இனப்படுகொலைக்கு தென்தமிழீழம் இலக்கானது. சிங்களப் படைகளுடன் இணைந்து முஸ்லீம் காடையர்களும் தமிழர்களைக் கொன்று குவித்தனர்.

வடதமிழீழத்தின் மீது ஒரு பூரண பொருண்மியத் (பொருளாதாரம்) தடையை சிங்கள அரசு விதித்து, அத்தியாவசியப் பொருட்களை தமிழர்களுக்கு எதிராக ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தி வருகின்றது. அதேவேளை கிழக்கில் அப்பட்டமான ஒரு இனப்படுகொலையை சிங்களப்படைகள் மேற்கொண்டு வருகின்றன. எனினும் புலிகளை நசுக்கவோ, போராட்டத்தை ஒடுக்கவோ முடியவில்லை.

ஆனாலும் தொடர்ந்தும் போர் மூலமே தமிழினத்தை அழிக்க, சிங்கள அரசு உறுதிபூண்டது. இதன்பொருட்டுத் தனது படைப்பலத்தைப் பன்மடங்கு பெருக்கி - நவீனமயப்படுத்தி வந்தது. இதற்குரிய பணத்தை, அபிவிருத்தி மற்றும் உதவிகள் என்ற பெயரில் மேலைநாடுகளிடம் இருந்து பெற்றுக்கொண்டது.

இப் பத்தாண்டுப் போரின் தொடக்க ஆண்டான 1983 இல் சிறீலங்கா அரசு, 184 கோடி ரூபாய்களை படைத்துறைக்கெனச் செலவிட்டது. ஆனால் 1993 இல் இத்தொகை பத்துமடங்குகளிலும் அதிகமாக -அதாவது 2000 கோடி ரூபாவாக அதிகரித்தது. அதேவேளை சிங்களப்படைகளின் ஆட்பலமும் இப்பத்தாண்டு முடிவில் அண்ணளவாக 10 மடங்காக அதிகரிக்கிறது. 1983 ஆம் ஆண்டு 15,000 ஆட்களைக் கொண்டு விளங்கிய சிங்களப் படை, 1993 இல் 1,60,000 இற்கு மேல் சென்றுவிட்டதாக, அரசின் புள்ளிவிபரங்கள் கூறுகின்றன.

போர்ச்செலவில் பத்துமடங்கும் அதேபோல ஆட்பலத்தில் பத்துமடங்கும் சிங்களத் தேசத்தின் தரப்பில் அதிகரித்திருந்தும், இப் பத்தாண்டுப் போரின் முடிவில் புலிகள் இயக்கமும் -தமிழீழ விடுதலைப் போராட்டமும் எந்த நிலையில் இருக்கின்றன?

ஆயுதப் போராட்டத்தின் மூலம் சிங்களப்படையை எமது மண்ணிலிருந்து விரட்டி, தமிழீழ அரசை நிறுவிவிடமுடியும் என, பத்தாண்டுப் போரின் ஆரம்பத்தில் பெரும்பாலான மக்கள் நம்பியிருக்கவில்லை. ஆனால் இதன் முடிவில் பெரும்பாலான மக்களிடம் அவ்வாறானதொரு நம்பிக்கை அசைக்கமுடியாத அளவுக்கு குடிகொண்டுவிட்டது. இப்பத்தாண்டுப் போரில் தமிழர் தரப்பில் நிகழ்ந்த முக்கிய விளைவாக இந்த மனமாற்றத்தைக் கூறலாம். இதற்குக் காரணம், பிரபாகரன் என்ற பெருந்தலைவனின் தலைமையின் கீழ் புலிகள் இயக்கம், போர்க்களத்திலும் மக்கள் அரங்கிலும் புரிந்த அற்புத சாதனைகளேயாகும்.

தமிழினத்தை அழிக்க சிங்கள அரசு திட்டமிட்டுச் செய்யும் ஒவ்வொரு நடவடிக்கைக்கும் வேகத்துடனும், துணிச்சலுடனும், விவேகத்துடனும் பதில் நடவடிக்கை எடுத்து, சிங்களப் பேரினவாதத்தின் நாசகாரத் திட்டங்களைப் தடுத்துவருகின்றனர்.

படைபலம்கொண்டு தமிழீழத்தை அழிக்கமுனையும் சிங்கள அரசை, படைபலம்கொண்டு தான் தடுக்க முடியும் என்ற நடைமுறை உண்மையை அடிப்படையாகக்கொண்டு, தமிழர் படையைக் கட்டியெழுப்பும் முயற்சியில், இப்பத்தாண்டுக்குள் புலிகள் இயக்கம் பெரும் வெற்றி பெற்றுவிட்டது என்றே கூறலாம். 1983 இல் சில பத்துப் பேர்களைக்கொண்டிருந்த புலிகள் இயக்கம், இன்று பல்லாயிரமாகப் பெருகி, ஒரு நாட்டின் படையைப்போல மாறிவிட்டது எனலாம். [illegible] கொண்டுள்ளது.

தரைப்படை, கடற்படை, என்று படைத்துறைரீதியாக மட்டுமல்ல, விடுவிக்கப்பட்ட பகுதிகளில் சட்டம் -ஒழுங்கைப் பேணி சிவில் நிர்வாகத்தை வழிநடாத்தும் வகையில் தமிழீழக் காவல் துறை, தமிழீழ நீதி -நிர்வாகத் துறை என்று ஒரு அரசுக்கு இருக்கவேண்டிய பல அலகுகளை உருவாக்கி, அவற்றை மேலும் வளர்த்தபடி புலிகள் இயக்கம் முன்னேறிவருகின்றது; தமிழீழ விடுதலைப் போராட்டம் உறுதியும் -வேகமும் பெற்று வளர்ந்து வருகின்றது.

1977 ஆம் ஆண்டு, கூப்பிய கரங்களுடன் வானத்தை அண்ணாந்து பார்த்துக்கொண்டிருந்த தமிழினத்தைப் பார்த்து, "போர் என்றால் போர்; சமாதானம் என்றால் சமாதானம்" என்று, சிங்கள தேசத்தின் அன்றைய சனாதிபதி ஜே. ஆர். முழங்கினார். 16 ஆண்டுகளின் பின் இப்போது, அதேவார்த்தைகளை அதே அரசிற்கெதிராக அச்சமின்றித் தமிழினமும் முழங்கும் சக்தியுடன் இருக்கின்றது. இந்த மகாசக்தியை, பிரபாகரன் என்ற பெருந்தலைவன் தமிழினத்திற்குப் பெற்றுக் கொடுத்திருக்கின்றார். ■

நன்றி:விடுதலைப் புலிகள்

### சர்வதேச....

இந்திரா காங்கிரஸ் ஆட்சியாளர்களும் இந்திய உளவு நிறுவனமான 'றோ'வும் கொடுத்த தகவலின் பேரிலேயே கருணாநிதி இவ்வறிக்கையை விடுத்துள்ளார். கோபாலசாமியை கட்சியின் மேன்நிலைக்கு கொண்டுவருவதற்காக, விடுதலைப் புலிகள் கருணாநிதியைக் கொல்லத் திட்டமிட்டுள்ளார்கள் என மத்திய அரசாலும், அதன் உளவு நிறுவனத்தாலும் தெரிவிக்கப்பட்ட செய்தியை, கோபாலசாமியை கலந்தாலோசிக்காமலேயே கருணாநிதி பத்திரிகைகளுக்குச் செய்தி வெளியிட்டுள்ளார். கோபாலசாமி உட்பட சில முக்கிய தலைவர்களை கட்சியை விட்டு நீக்கிவிட்டு காங்கிரஸ் கட்சியும், திராவிட முன்னேற்றக் கழகமும் இணைவதற்காகவே இத்தகைய பிரச்சாரம் அவிழ்த்து விடப்பட்டுள்ளதாக உள்நாட்டு, சர்வதேசப் பத்திரிகையாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

### யுத்தம் பற்றிய....

அறிவித்தது. இதனால் சிறீலங்கா இராணுவம் உண்மையில் ஆனையிறவில் இருந்து சிறிதளவாவது முன்னேறி இருப்பார்களா என்ற சந்தேகம் சர்வதேச அவதானிகளிடை ஏற்படுத்தியுள்ளது.

கொழும்பு ஆஸ்பத்திரிகளும் சிங்கள பிரதேசங்களில் உள்ள வைத்தியசாலைகளும் காயப்பட்டவர்களால் நிரம்பிவழியத் தொடங்கியுள்ளதால் சிங்கள மக்களுக்கு சிறீலங்கா இராணுவப் படைக்கு ஏற்பட்ட சேதங்கள் தெரியத் தொடங்கியுள்ளன.

இதனால் இதனை மூடிமறைப்பதற்காகவே, 'தாம் இராணுவ முகாம் அமைப்பதற்கே முன்னேறியதாகவும் ஆயினும் திறந்த வெளியில் இராணுவ முகாம் அமைத்தால் புலிகள் அதனைத் தாக்குவது இலகு என்பதால், பின்வாங்கிவிட்டதாகவும்' சில இராணுவ அதிகாரிகள் விளக்கம் அளித்துள்ளதாக ஊர்ஜிதமற்ற செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆயினும் இந்த யுத்தத்தில் கிராமப் புறங்களைச் சேர்ந்த சிங்களப் படையினர் பலர் படுகாயமுற்றும் கொல்லப்பட்டும் உள்ளனர் என தெரியவருகின்றது.

இந்த யுத்தத்தில், நேரடியாகப் பங்கு கொண்ட சிறீலங்கா இராணுவத்தைச் சேர்ந்த பலர் மனோநிலைப் பாதிப்புக்கு உள்ளானதும், இராணுவம் பின்வாங்கியதற்கான காரணங்களுள் ஒன்றாகப் பேசப்படுகின்றது.

இப்பொழுதே சிறீலங்கா இராணுவத்தில் இருந்து 17,000 பேர் வரை விலகி தலைமறைவாக இருந்து வருவதாக பி.பி.சி. நிருபர் கிறிஸ்தோபர் மொறிஸ் செய்தி தெரிவித்துள்ளார். இந்த யுத்தம் இத்தொகையை மேலும் பன்மடங்காக பெருக்கக் கூடும் என சிறீலங்காவின் எதிர்க்கட்சிகள் கருதுவதாக தெரியவருகின்றது. ■

### தமிழீழ அரசு....


அரசு காலத்திற்குக் காலம் நடாத்தும் இனப்படுகொலை முயற்சிகளில் இருந்து தமிழீழ மக்களைப் பாதுகாத்துக் கொள்ளலாம் என்பதை சர்வதேச மனிதாய, மனித உரிமை இயக்க அன்பர்கள் பலர் ஏற்றுக்கொள்ளத் தொடங்கியுள்ளனர். ■

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

# 05 ◎ 10 ◎ 93



மேஜர் அப்துல்லா



லெப்.கேணல் புலேந்திரன்



லெப்.கேணல் குமரப்பா



கப்டன் ரகு








கப்டன் பழனி



கப்டன் கரன்



கப்டன் நளன்



கப்டன் மிரேஸ்




லெப். தவக்குமார்



2வது லெப். ஆனந்தகுமார்



2வது லெப். ரெஜினோல்ட்



லெப். அன்பழகன்

## இந்திய அரசின் நம்பிக்கைத் துரோகத்திற்குப் பலியான தியாகிகள்


U.T.O
211 Katherine Road
London E6 1BU, UK
T/F 081-470 8593

T.C.C
Groot Hertoginnelaan 106
2517 Et. Den Haag, Nederland
Tel 070-346 1963 F-364 0683

L.T.T.E
Postbox 47, 7600 Struer
Denmark. Tel/Fax
97-841231

T.C.C
P.O.Box 1699 Vika
0110 Oslo - 1, Norway
Tel 022-191260 F-190114

T.C.C
P.O.Box 694, Mulgrave North
Victoria 3170, Australia
Tel 03-457 6347 F 5606...

W.T.C.C
HOFJEOKLIN, 7416 RODELS
SWITZERLAND
Tel 077 - 816806

T.C.G
Post Fach 340251
51624 Gummersbach-34
Germany

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel 435 81142 F435 8161

T.C.C
Via Mariano Stabile - 34
90139 Palermo, Italy
T/F 091-611 3179

T.C.C
Glomminge Grand-29
16362 Spanga, Sweden
Tel 08-7612943



Printed by Observer Group Newspapers